Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 222 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 22, சனி 06.07.2013

# திருமலை மாணவர் படுகொலையில் திருப்பம்
# 12 படையினர் 8 வருடங்களின் பின் கைது

கொழும்பு, ஜூலை 6
திருகோணமலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு 5 அப்பாவித் தமிழ் மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 12 விசேட அதிரடிப் படையினர் 8 வருடங்களின் பின்னர் இப்போது குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 12 பேரும் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னிலைப் படுத்தப்பட்டனர். எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி, திருகோணமலைக் கடற்கரை காந்திசிலையடிப் பகுதியில் இரவு 7.50 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வீச்சு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 5 அப்பாவித் தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

இவர்கள் துப்பாக்கியால் தலையில் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பதை ஊடகங்களில் வெளியான ஒளிப்படங்கள் தெளிவாக வெளிப்படுத்திய போதிலும் இராணுவத்தினரைத் தாக்



ஆவணப்படம்

குவதற்காக எடுத்துவந்த கிரனேட் வெடித்ததிலேயே அந்த 5 மாணவர்களும் உயிரிழந்தனர் என இராணுவத்தினரால் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான மருத்துவர் சண்முகராஜா மனோகரன் அச்

தொடர்ச்சி: பக்கம் 21

உலகம்



பக். 07

கோபமூட்ட வேண்டாம் இந்தியாவுக்கு அறிவுறுத்துகின்றது சீனா

விளையாட்டு



பக். 22

பாரம்பரிய விளையாட்டு விழா நெடுந்தீவில் நேற்று ஆரம்பம்



பக். 23

தமிழீழ அணி வெற்றி

## அமைச்சர் பஸில் அளித்த உறுதிமொழி

புதுடில்லி, ஜூலை 06
தமிழக மீனவர் பிரச்சினை சுமுகமான முறையில் தீர்க்கப்படும் என அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள பொரு

தொடர்ச்சி: பக்கம் 24

# ஏமாற்றம்


## மயிலிட்டி ஆலயங்களில் வழிபடச் சென்ற மக்கள் படையினர் அனுமதி மறுத்ததால் திரும்பினர்

யாழ்ப்பாணம், ஜூலை 6
மயிலிட்டிப் பகுதியில் உள்ள இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதற்கு அனுமதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் கடைசி நேரத்தில் படையினர் அனுமதி மறுத்துவிட்டனர்.

மாவிட்டபுரம் சந்தியில் கூடிய 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இறுதியில் ஏமாற்றத்துடன் வீடுகளுக்குத் திரும்பினர்.

படையினரைத் திட்டித் தீர்த்தவாறு அவர்கள் அங்கிருந்து அகன்றனர்.

200 பேரை மாத்திரமே படையினர் உள்ளே அனு



மதிப்பர் என்று இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட ஈ.பி.டி.பியினர் அங்கு தெரிவித்தனர். அதற்கு அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள், "நாங்கள் 2 ஆயிரம் பேரும் செல்வதென்றால் தான் உள்ளே நுழைவோம் இல்லையேல் எல்லோரும் திரும்பிச்செல்வோம்" எனத் தெரிவித்துவிட்டு தமது வீடுகளுக்கு திரும்பினர்.

மயிலிட்டியிலுள்ள பிள்

தொடர்ச்சி: பக்கம் 24

## தன்னிச்சையாக இலங்கை அரசு செயற்படலாகாது
### – நாராயணசாமி

புதுடில்லி, ஜூலை 6
இலங்கை அரசமைப்பில் திருத்தங்களைச் செய்வதற்காகக் குறிப்பாக 13ஆவது திருத்தத்தின் காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒழிப்பதற்கான நடவடிக்கையில் இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக ஈடுபட்டுள்ளதை அனுமதிக்க முடியாது என்று இந்தியப் பிரதமர் அலுவலகத் துணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

"இலங்கை அரசு நாடாளுமன்றத் தெரிவிக்குழுவை அமைத்து அதன் மூலம் 13ஆவது திருத்தம் குறித்து விவாதிக்கவுள்ளது. இது இந்த திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்யும் ஒரு நடவடிக்கையாகவே இந்தியாவால் பார்க்கப்படுகின்றது" என்று நாராயணசாமி பி.பி.சி.செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

மாகாண சபைகளை நிறுவுவதற்காகவும் அவற்றுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்

தொடர்ச்சி: பக்கம் 21

## வடக்குத் தேர்தல் அறிவிப்பை நேற்று விடுத்தார் மஹிந்த

கொழும்பு, ஜூலை 6
வடமாகாண சபைக்கான பிரகடனத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டுள்ளதுடன் தேர்தலை நடத்துவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பையும் தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கியுள்ளார்.

இதேபோன்று வடமேல், மத்திய மாகாண சபைகள் நேற்று நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டுள்ளன.

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் ஒரே நாளில் நடத்தப்படவுள்ளதுடன் தேர்தல் திகதி எதிர்வரும் 9 ஆம் திகதிக்குப் பின்னரே தேர்தல்கள் ஆணையாளரால் வெளியிடப்படும்.

"வடமாகாண சபைத் தேர்தலை நடத்தும் உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்துள்ளார்" என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உருவான மாகாண சபைகளில் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபைத்

தொடர்ச்சி: பக்கம் 24

## இராணுவம் கடத்திய மகனை எப்படியாவது மீட்டுத் தாருங்கள்
### பொன்சேகாவிடம் தாயொருவர் உருக்கமான கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 6
"2006ஆம் ஆண்டு எனது 15 வயது மகன் படையினரால் கடத்திச் செல்லப்பட்டான். அவன் இப்போதும் உயிருடன் இருப்பதாகச் சொல்கின்றனர். அவனை எப்படியாவது மீட்டுத் தாருங்கள்" இவ்வாறு மகன் கடத்தப்பட்ட காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவிடம் சாவகச்சேரியைச் சேர்ந்த தாயொருவர் நேற்றுக்

தொடர்ச்சி: பக்கம் 24

## போரினால் யாருக்கும் பயனில்லை
### மனம் திறந்தார் பொன்சேகா

யாழ்ப்பாணம், ஜூலை 6
இறுதிக் கட்டப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை போர் முடிவுற்ற போதும் மக்கள் எதிர்பார்த்தது எதுவுமே கிடைக்கவில்லை.

தொடர்ச்சி: பக்கம் 24

# இந்தியாவின் முன்னால் மண்டியிட வேண்டாம்

## ராஜீவ் காந்தியைத் தாக்கிய கடற்படைச் சிப்பாய் கூறுகிறார்



கொழும்பு,ஜூலை 6
இலங்கை 30 ஆண்டுகாலப் போரை வெற்றிக் கொண்டுள்ளதால், இந்தியாவின் முன்னால் மண்டியிடும் தேவையில்லை என இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை தாக்கிய இலங்கைக் கடற்படைச் சிப்பாயான விஜித ரோஹன விஜேமுனி தெரிவித்துள்ளார்.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக இலங்கை வந்திருந்த போது, வழங்கப்பட்ட கடற்படை அணி வகுப்பு மரியாதையின் போது, ராஜீவ் காந்தியைத் துப்பாக்கியால் தாக்கிய முன்னாள் கடற்படைச் சிப்பாய் விஜேமுனி சிறையில் அடைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

மாகாண சபை முறைமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் எனவும் மாகாண சபையை ஏற்படுத்தியவர்களில் எவரும் தற்போது உயிருடன் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கில் தேர்தல் நடத்தப்பட மாகாண சபை ஏற்படுத்தப்பட்ட போது, நோர்வே, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகள் ஈழக் கோட்பாட்டை அங்கீகரித்தன. இந்த நிலையில், 15க்கும் மேற்பட்ட நாடுகள் அதனை அங்கீகரித்தால், ஆபத்தான நிலைமை ஏற்படும். வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியதன் காரணமாகவே இந்தியா, இலங்கையில் தலையிட்டு மாகாண சபைகளை ஏற்படுத்தியது எனவும் விஜேமுனி கூறியுள்ளார். (த)

# வங்கிகள் அனைத்திலும் கண்காணிப்புக் கமரா

## பொருத்தக் கோருகின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூலை 6
திருட்டு உள்ளிட்ட விடயங்களைக் கண்காணிப்பதற்கு ஏதுவாக வங்கிகள் அனைத்தும் இரவு நோக்குக் கமராக்களைப் பொருத்த வேண்டும் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஏக்க நாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.குடாநாட்டில் சில வங்கிகள் இரவு நோக்குக் கமராக்களைப் பொருத்தாமலேயே இன்றும் இயங்கி வருகின்றன. இதனால் அங்கு இடம்பெறும் திருட்டுக்கள் உள்ளிட்ட விடயங்கள் பற்றிய பதிவுகளைப் பெற முடியாத நிலை ஏற்படுகிறது. அத்துடன் குற்றச் சம்பவங்கள் இடம்பெற்றால் அது பற்றிய விசாரணைக்குப் போதிய ஆதாரங்கள் கிடைக்காமல் போகச் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும்.

அச்சுவேலியில் அண்மையில் வங்கி ஒன்றின் ஜன்னல் பகுதியினூடாக உள்நுழைந்த திருடர்கள் பணத்தை எடுக்க முற்பட்ட போது அலாரமணி ஒலித்தமையால் தப்பி ஓடிவிட்டனர். இரவு நோக்குக் கமராக்கள் அந்த வங்கியில் பொருத்தப்பட்டிருக்காமையால் திருடர்கள் தொடர்பான பதிவுகள் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே குடாநாட்டிலுள்ள அனைத்து வங்கிகள், நிதி நிறுவனங்கள், கிராமிய வங்கிகள் அனைத்திலும் இரவு நோக்குக் கமராவைப் பொருத்த வேண்டும்- என்றார்.(த-4)



# சிறுமி துஷ்பிரயோகம்; கைதானவருக்கு விளக்கமறியல்



யாழ்ப்பாணம், ஜூலை 6
பதின்ம வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த சிறுமியே பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டார். இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் அச்சுவேலி மாவடிப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது நீதிமன்றம். (த-4)

# அமைச்சர் அத்தாவுட மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

கொழும்பு,ஜூலை 06
வரக்காப்பொல – கொஹும்பதெனிய பிரதேச குடிதண்ணீர் திட்டத்துக்குச் சேதம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் சிரேஸ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன உள்ளிட்ட 19 சந்தேகநபர்கள் மீது குற்றப்பத்திகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வரக்காப்பொல நீதிவான் சனத் ஜே.மொரவக்க முன்னிலையில் நேற்று இந்தக் குற்றப்பத்திகை தாக்கல் செய்யப்பட்டது.

வரக்காப்பொல – கொஹும்பதெனிய பிரதேச குடிதண்ணீர் திட்டத்துக்கு 10 லட்சத்து 80ஆயிரம் ரூபா நட்டம் ஏற்படுத்தியதாகச் சட்டமா அதிபரின் ஆலோசனைப்படி வரக்காப்பொல பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது வழக்கைச் சமாதானமாக நிறைவு செய்யத் தமது தரப்பினர் விரும்புவதாக அத்தாவுட செனவிரத்ன உள்ளிட்ட 19 பேர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

எனினும் அது குறித்துப் பரிசீலிக்கப்படும் எனப் பாதிக்கப்பட்ட தரப்பின் சட்டத்தரணி குறிப்பிட்டார். அதன் படி வழக்கு அடுத்த வருடம் ஜனவரி 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (த)

# 'ஐயோ நானில்லை'




கொழும்பு,ஜூலை 06
ஆளும் கட்சியுடன் இணைந்து வடமேல் மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலமைச்சர் வேட்பாளராக நான் களமிறங்கவுள்ளதாக வெளியான தகவல்களில் எவ்விதமான உண்மையும் இல்லை என்று ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஐ.ம.சு.முவின் முதலமைச்சர் வேட்பாளர் நானில்லை. வெளியாகியிருக்கின்ற தகவல்கள் தவறானதாகும். ஆளும் தரப்பின் சார்பில் நான் வடமேல் மாகாண சபையில் போட்டியிட மாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# வன்முறைகளோ, போரோ முரண்பாட்டுக்கு தீர்வாகா

## வவுனியாவில் நேபாள முன்னாள் பிரதமர்



வவுனியா,ஜூலை 06
முரண்பாடுகளுக்கு வன்முறையோ போரோ தீர்வாகாது. எனவே அனைவரையும் மதித்தும் ஒவ்வொருவருடைய சமய கலாசாரங்களை மதித்தும் மனிதாபிமானத்துடன் அனைவரும் நடத்தப்படவேண்டும் என நேபாளத்தின் முன்னாள் பிரதமரும் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான மாதேவ் குமார் நேபாள் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ள இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் விசேட விருந்தினராகக் கலந்து கொள்ளும் பொருட்டு இலங்கை வந்துள்ள அவர் நேற்று வவுனியாவில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நோபளத்தில் 125 இற்கும் மேற்பட்ட சமூகங்கள் வாழ்ந்த போதிலும் முரண்பாடுகள் தோற்றம் பெறவில்லை. முரண்பாடுகளுக்கு வன்முறையோ போரோ தீர்வாகாது. அனைவரையும் மதித்து ஒவ்வொருவருடைய சமய கலாசாரங்களை மதித்து மனிதாபிமானத்துடன் அனைவரும் நடத்தப்பட வேண்டும். இனக் குழுமங்களுக்கிடையில் விரோதத் தன்மை நீக்கப்படும் போது மனிதாபிமானம் வளரும்- என்றார். (த-402)

# கரும்புலிகள் தினத்தன்று வடக்குத் தேர்தல் அறிவிப்பு

## வாக்கு என்ற ஆயுதத்தால் மக்கள் தாக்குதல் நடத்துவர் என்கிறார் ரதன்

யாழ்ப்பாணம்,ஜூலை 06
தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உன்னதமான வீரம் செறிந்த கரும்புலிகள் நாளான ஜூலை 5 இல் வடமாகாணத் தேர்தல் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

எனவே தேர்தல் தினத்தன்று (செப்ரெம்பர் 21) வடக்கில் உள்ள மக்கள் வாக்கு என்ற பெறுமதியான ஆயுதத்தால் தாக்குதல் நடத்துவார்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணித் தலைவரும் நகர சபைப் பதில் தலைவருமான எம்.எம். ரதன் தெரிவித்தார்.

வவுனியாவிலுள்ள நாகர் இலுப்பைக்குளத்தில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையிலுள்ள 9 மாகாணங்களுள் வடமாகாணமே ஜனநாயகமின்றிச் செத்துச் செயலிழந்துபோய் உள்ளது. 1989 இற்குப் பின்னர் வடக்கில் அரசு தேர்தலை நடத்தவில்லை. அதற்குப் பல காரணங்கள் கூறிவந்தது. காரணம் வடக்கில் படுதோல்வியைச் சந்திக்க வேண்டிவரும் என்பதே.

எமக்கு இப்போது இருப்பது வாக்கு என்ற ஆயுதமே. அதன் மூலமாக தன்மானத் தமிழர்களான நாம் தாக்குதல் நடத்த வேண்டும்- என்றார். (த-4)

# இயக்கச்சி விபத்தில் பொலிஸ்காரர் சாவு

யாழ்ப்பாணம்,ஜூலை 06
இயக்கச்சி சந்தியில் பாடசாலைக்கு முன்னால் ஏ-9 வீதியில் நேற்று பிற்பகல் நடந்த விபத்தில் பளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்.

விடுமுறையில் சென்றிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று பளைக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற தனியார் நிறுவனம் ஒன்றின் பவுஸரில் மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் அது சின்னாபின்னமாகியது. ரிக்கவரெட்டிய, மஹாகமவைச் சேர்ந்த ரட்ணநாயக்க (வயது-26) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்தவர் ஆவார். சடலம் பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-9-435)

# இனங்களின் அடிப்படையில் நாட்டைப் பிரிக்க முடியாது

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 06
இனங்களின் அடிப்படையில் நாட்டை பிரிக்க முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் எந்தவொரு இனத்துக்கும் மதத்துக்கும் தனிப்பட்ட இடமொன்று கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


வாழ்வதற்கு முக்கியம் பிரதேசம் அல்ல சுதந்தரம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

புனரமைக்கப்பட்ட பேருவளை – சீனாவத்தை ஜும்மா பள்ளியை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்காக அரசு எப்போதும் முன் நிற்பதாக அவர் கூறியுள்ளார். தாய் நாட்டை ஆதரிக்கும் ஒரே சகோதர மக்களாக அனைவரும் வாழ வேண்டும் என ஜனாதிபதி அங்கு தெரிவித்தார். (த)

## தரிப்பிடத்தில் நின்ற தனியார் பஸ்ஸை மோதித் தள்ளியது இ.போ.ச. பஸ்

### 24 பயணிகள் காயம்; அரியாலையில் சம்பவம்



கொழும்புத்துறை, ஜூலை 6

பஸ் தரிப்பிடத்தில் நின்று பயணிகளை ஏற்றிக் கொண்டிருந்த தனியார் பஸ் மீது பின்புறமாகச் சென்ற இ.போ.ச. பஸ் மோதிய விபத்தில் 24 பேர் காய மடைந்தனர். அவர்களில் சிலர் படுகாயமுற்றிருந்தனர். அவர்கள் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.


இந்த விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஏ-9 வீதியில் அரியாலை புங்கன்குளம் சந்தியில் இடம்பெற்றது.

யாழ்.நகரில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் புங்கன்குளம் சந்தியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நின்று பயணிகளை ஏற்றிக் கொண்டிருந்தது.

அவ்வேளை, யாழ்.நகரில் இருந்து கொடிகாமம் ஊடாக கட்டைக்காட்டுக்குச் செல்லும் இலங்கை போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்த தனியார் பஸ்ஸை பின்புறமாக மோதித் தள்ளியது. இதில் இ.போ.ச.பஸ்ஸின் முன் பக்கம் பலத்த சேத மடைந்தது. தனியார் பஸ்ஸின் பின் புறம் ஓரளவு சேதமுற்றது.

விபத்தில் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பயணம் செய்த 20 பேரும் தனியார் பஸ்ஸில் பயணித்த 4 பேருமாக 24 பேர் காய மடைந்துள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள இராணுவத்தினரும் பொது மக்களும் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் முயற்சியை மேற் கொண்டனர். சம்பவ இடத்துக்கு வந்த யாழ்.போக்கு வரத்துப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டனர். (ஒ-135-4)



ஜனநாயக தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா நேற்று நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபட்ட பின்னர் அங்கு எதிர்கொண்ட மக்களுக்கு வணக்கம் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-21)

## இந்திய தூதரகத்திலுள்ள நூலகத்தை பொதுமக்கள் பயன்படுத்த முடியும்

### 400 இற்கும் மேற்பட்ட தமிழ்நூல்களும் உள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாணம், நல்லூர் மருதடியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை பொதுமக்களும் பயன்படுத்தலாம் என்று இந்திய துணைத்தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகத்தில் ஆங்கிலம், தமிழ் மற்றும் ஹிந்தி மொழிகளிலான ஆயி ரத்துக்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன. இவற்றில் இந்து மதம், வரலாறு, தத்துவம், வெளிநாட்டுக் கொள்கை கள்,யோகா, சாஸ்திரிய நடனம், சித்திரம் மற்றும்சமையற்கலை போன்ற விடயதானங்களில் 400 இற்கும் அதிகமான தமிழ் நூல்கள் உள்ளன. மேலும் சிறு தொகை ஆவணப்படங் கள் மற்றும் குறுந்திரைப்பட இறுவட்டுக் களும் உள்ளன. பொதுமக்கள் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரையும் மற்றும் பிற்பகல் 2.30 மணிமுதல்மாலை 4.30 மணி வரையும் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நூல்கள் மற்றும் இறுவட்டுக்களை இரவல் எடுக்க விரும்புவோர் தூதரக அலுவலகத்தில் தம்மை அங்கத்தவராக பதிவு செய்ய வேண்டும். பதிவுகளுக்காக மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக 500 ரூபா செலுத்தப்பட வேண்டும். நூலக அங்கத்துவத்தை தொடர விரும்பாதவிடத்து இரவலாக பெற்ற நூல்களையும், அங்கத் துவ அட்டையையும் மீளளித்து வைப்புப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

நூலக அங்கத்துவப் படிவங்களை தூதரகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் விண்ணப்பதாரரின் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு, பெயர், வயது மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஏதாவதொரு சான்றிதழின் பிரதியுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## போரால் பாதிக்கப்பட்டோருக்கு கொடுப்பனவு அலரி மாளிகையில்

### தென்மராட்சி பிரதேச செயலகத்தால் விண்ணப்பித்தோருக்கு கடிதங்கள் அனுப்பி வைப்பு

தென்மராட்சி, ஜூலை 6

போர் வேளையில் வட மாகாணத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 11ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்படவுள்ளன.

போரின்போது உயிரிழந்த, காயமுற்ற, சொத்தழிவு ஏற்பட்ட அரச உத்தியோகத்தர்கள், ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் உடையோர் ஆகியோருக்கு இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப் படவுள்ளன. கொடுப்பனவு பெறுவதற்கு தென்மராட்சி பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி 166 பேரின் விவரங்கள் புனர்வாழ்வு அதிகாரசபையினால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளது.

> பயண ஒழுங்குடன் எதிர்வரும் 10ஆம் திகதி பி.ப.4 மணிக்கு யாழ். மாவட்டச் செயலயகத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

அவர்களில் உயிரிழந்த, காயமடைந்த 74 பேருக்கும் அரச உத்தியோகத்தர்கள் 25 பேருக்கும் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுடைய 67 பேருக்கும் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான கடிதம் பிரதேச செயலகத்தினாலும், புனர்வாழ்வுஅதிகார சபையினாலும் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அவர்களுக்கான போக்குவரத்து, உணவு ஒழுங்குகள் யாழ்.செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் பயண ஒழுங்குடன் எதிர்வரும் 10ஆம் திகதி பி.ப.4 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நிகழ்வில் இயலாமை காரணமாக பங்கேற்க முடியாதவர்கள் இது தொடர்பாக தத்தமது பிரிவு கிராம அலுவலருக்கு விண்ணப்பித்து பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## தற்செயல் நிவாரண உதவிக் கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூலை 6

தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு ஊடாக தற்செயல் நிவாரண உதவி கோரி விண்ணப்பித்த சரசாலை தெற் கைச் சேர்ந்த ஆறுமுகம் இந்திராணி என்பவருக் குரிய கொடுப்பனவு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. குறித்த பயனாளிக்கு அறிவித்து கொடுப் பனவை வழங்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (வ-9)

## மன்னார் இளைஞர் ரஷ்யாவுக்குப் பயணம்

### போட்டியில் கலந்து கொள்ள


மன்னார், ஜூலை 6

மன்னாரைச் சேர்ந்த புண்ணியலிங்கம் ஜோய் நிதர்சனன் படகுச் சவாரிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக ரஷ்யாவுக்கு பயணமாகியுள்ளார்.

இன்று சனிக்கிழமை ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலக பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் நடைபெறும் போட்டிகளில், மொறட்டுவ பல்கலைக்கழகம் சார்பாக கலந்துகொள்வதற்காக கடந்த 3 ஆம் திகதி அவர் ரஷ்யா சென்றுள்ளார்.

கடந்த மே மாதம் இலங்கை பல்கலைக் கழகங்களுக் கிடையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் மொறட்டுவ பல்கலைக் கழகம் சார்பாக படகுச் சவாரிப் போட்டி யில் கலந்து சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட நிலையிலேயே இவர் ரஷ்யா சென்றுள்ளார்.

இவர் எழுத்தூர் றோ.க.த. பாடசாலை மற்றும், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவர் என்பதும், குறிப்பிடத்தக்கது. (வ-12)



## வர்த்தகர் மீது வழக்கு

திகதி காலாவதியான குளிர்பானங்களை விற்பனைக்கு வைத்திருந்த இரு வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

அதிகார சபை உத்தியோகத்தர்கள் அண்மையில் கொடிகாமம், வரணி ஆகிய பகுதிகளில் நடத்திய திடீர்ப் பரிசோதனையில் திகதி காலாவதியான குளிர்பானங்களை விற்பனைக்கு வைத்திருந்த இரண்டு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (வ-9)

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில், பலாலி வீதியிலிருந்து இரண்டாவது 5பரப்புக் காணியிலமைந்த 1500சதுர அடி, விசாலமான இணைந்த குளியறை மற்றும் மாபில் பதித்த வீடு குறைந்த விலையில் உடன் விற்பனைக்கு

தொடர்பு: 077 7251188 (38872)(17.14.16)

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் மல்லாகம் வீதியில் பலாலி வீதிக்கும் ஏழாலை பிரதேசசபைக்குமிடையில் குப்பிளானில் கிணற்றுடன் 17 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 0771726582

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் வீடு விற்பனைக் குண்டு. அல்லது வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 2 497082 (38872)(17.14.16)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.அழையுங்கள்.

0779086737 GUNAA BEST PC

52,Hospital Road,Jaffna.

# மரண அறிவித்தல்

## சிவக்கொழுந்து அன்னம்மா



மட்டக்களப்பு பெரியபோர தீவைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக் கொழுந்து அன்னம்மா கடந்த (03.07.2013) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சின்னத்தங்கம் மற்றும் மாரிமுத்து காலஞ்சென்றவர்களான தங்கராசா, பூபாலுபிள்ளை, பீதாம்பரம் ஆகியோரின் சகோதரியும் நாகராசா (கஜேந்திரன் மரக்காலை, கொக்குவில்), பத்மநாதன் (லண்டன்), தயாநாதன் (சுவிஸ்), இளங்கேஸ்வரி (லண்டன்), ஞானகுமார், பாலேந்திரன், சிவகுமார் (பிரசாந் மர அரிவு ஆலை, நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாதேவி, யோகமலர், புவனம், இராசேந்திரம், சகுந்தலாதேவி, புஸ்பகரி, மாலதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கவிதா (ஜெயக்குமார்), லதா (துஸ்யந்தன்), மாலினி, கஜேந்திரன் (குகறஞ்சினி), திருக்குமரன், சிந்து (மயூரன்), சிவனுஜா, வெங்கட், கஜேந்திரன், அபிதா (அகிலன்), ஜெகன், துஜானா, பவித்திரா, பதுசா, நிதுசன், பிரியங்கா, பிரசாந், பிரதீக்கா ஆகியோரின் பேர்த் தியும் சுஜீவன், டர்சான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயில் வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
0778097789

# மரண அறிவித்தல்

## தியாகராசா நாகமுத்து



நாகர்கோயில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வல்லிபுர பரியாரியார் வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா நாகமுத்து கடந்த (03.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா -பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், தனபாலசிங்கம் வள்ளிப்பிள்ளை, பழனி யாண்டி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், விநாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, தியான மூர்த்தி, தெய்வேந்திர மூர்த்தி, மஞ்சுளா, ஐங்கரன், ஆதிமூலம், நவலட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.07.2013)ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00மணியளவில் பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அன்னாரது பிறப்பிடமாகிய நாகர்கோயில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும் அதனைத்தொடர்ந்து பி.ப.2.00மணியளவில் நாகர்கோயில் மேற்கு, இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
மருமகள் (சத்தியமூர்த்தி-நந்தனி)

தொலைபேசி:-
077 8152019

(சி/10253.)
17.16.17)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் வைடூரியம்

### (ஓய்வுபெற்ற வங்கியாளர்)

யாழ்ப்பாணம் அராலியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொரன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வைடூரியம் கடந்த (03.07.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றர்களான சுப்பிரமணியம் – பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா – செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜசௌந்தரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, இரத்தினம், செல்லம்மா, இராசமணி, அன்னம்மா மற்றும் பாலாம்பிகை, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான தட்சணாமூர்த்தி, சொக்கநாதன் மற்றும் இராசமாணிக்கம், திவாகரமூர்த்தி, தில்லையம்பலம், இராசேந்திரம், சௌபாக்கியலட்சுமி, பாலசுந்தரம், ஸ்ரீராமச்சந்திரன், சிவசுப்பிரமணியம், விக்னேஸ்வரன், சண்முகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (08.07.2013) திங்கட்கிழமை ரொரன்டோ கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(38970)

தகவல்:
குடும்பத்தினர்.

## கூட்டுறவு பணியாளரின் அடிப்படை கொடுப்பனவு தொடர்பில் மீளாய்வு

### கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான மாதாந்த அடிப்படைகொடுப்பனவு தொடர்பில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மீளாய்வு செய்யவுள்ளது.

சம்பள உயர்வு போதுமானதாக இல்லாததால் கூட்டுறவுப் பணியாளர்கள் பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் பணியாளர்களின் அடிப்படை கொடுப்பனவை மீளாய்வு செய்து அதற்கேற்றவாறு சம்பளப் பட்டியல்களைத் தயாரிப்பதற்கும் ஏற்ற நடவடிக்கையை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக அடிப்படை சம்பள உயர்வு தகுந்த மாதிரி இல்லாததால் கூட்டுறவுப் பணியாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அநேகமான சங்கங்கள் பணியாளர்களுக்கான அடிப்படை சம்பளங்களையே நடைமுறைப்படுத்தி வருவதோடு பணியாளர்களுக்கான ஏனைய கொடுப்பனவுகளை வழங்கவும் பின்னடித்து வருகின்றன.

அநேகமான சங்கங்கள் பணியாளர்களுக்கான அடிப்படை சம்பளங்களையே நடைமுறைப்படுத்தி வருவதோடு பணியாளர்களுக்கான ஏனைய கொடுப்பனவுகளை வழங்கவும் பின்னடித்து வருகின்றன.

இந்த நிலையில் கூட்டுறவு அமைப்புக்களில் பணியாளர்கள் இணைந்து பணியாற்றுவதற்கும் பின்னடித்தும் வருகின்றனர்.

இதேவேளை போதிய அடிப்படை சம்பள அதிகரிப்பு ஏனைய கொடுப்பனவுகள் இல்லாமையால் பணியாளர்களில் அநேகமானோர் சங்கங்களை விட்டு விலகிச் செல்கின்றனர். (வ-17)

# டெங்கு நுளம்புகளைத் தேடி நீர்வேலியில் திடீர் வேட்டை

### சுகாதாரப் பகுதியினரால் வாழைத் தோட்டங்கள் சுற்றி வளைப்பு



நீர்வேலி, ஜூலை 6

நீர்வேலி, கோப்பாய் பகுதிகளிலுள்ள வாழைத் தோட்டங்களில் புகுந்து சுற்றிச் சுற்றி தேடுதல் போட்டனர் சுகாதாரப் பகுதியினர்.

பதுக்கல் பொருள்களையோ அல்லது சட்ட விரோதமான பொருள்கள் ஏதும் இருப்பதாகத் தகவல் கிடைத்தோ அவர்கள் தேடுதல் நடத்தவரவில்லை.

டெங்குநுளம்புகளைத் தேடியே அவர்கள் ' சுற்றி வளைப்பு' இடம்பெற்றது.

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் உள்ள வாழைத் தோட்டங்களும் சுகாதாரப் பிரிவினரால் சல்லடைபோட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு வலி. கிழக்குப் பிரதேசத்தில் பிரதேச வாரியாக டெங்கு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதில் ஒருகட்டமாகவே வாழைத் தோட்டங்களும் சோதனையிடப்பட்டன.

குடாநாட்டில் அதிகமான வாழைமரங்கள் உள்ள நீர்வேலி மற்றும் கோப்பாய் பிரதேசங்கள் மீது சுகாதாரப் பகுதியினரின் கவனம் திரும்பியுள்ளது.

தோட்டங்களில் வாழைக் குலைகள் வெட்டப்பட்டதும் வாழை உடனடியாகவே மரங்களை வெட்டித் துண்டாடி நிலத்தில் புதைக்க வேண்டும்.

வாழை மரங்கள் குறுக்காக வெட்டப்பட்ட நிலையில் இருந்தால் அவற்றில் இருந்து நீர் சுரந்து அதில் இருந்து நுளம்பு குடம்பிகள் பெருகும் வாய்ப்பு உள்ளது.

ஆகையால் குறுக்காக வெட்டப்பட்ட வாழை மரங்களை அடியுடன் வெட்டி அகற்ற வேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினர் விவசாயிகளை அறிவுறுத்தினர்.

பொதுவாக வாழைத் தோட்டங்களில் இருந்து நுளம்பு பெருகாதவாறு அவற்றை உரிய முறையில் பராமரிக்க வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களுக்கு அறிவுரை கூறுகின்றனர். (ஒ-17)

## நலனோம்பு அட்டைகள் அடுத்த வாரம் தென்மராட்சியில்

தென்மராட்சி, ஜூலை 6

தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் மாற்று ஆற்றலுடையோருக்கான நலனோம்பு அடையாள அட்டைகள் அடுத்த வாரம் விநியோகிக்கப்படவுள்ளன.

வங்கிப் பாஸ் புத்தகம் போன்ற அமைப்பிலுள்ள நலனோம்பு அட்டையில் புகைப்படம் பொருத்தும் பணிகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறித்த அடையாள அட்டைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விநியோகிக்கப்படவுள்ளது. (வ-9)



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரித் தமிழ் மன்றம் நடத்திய தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா கல்லூரிப் பிரதான மண்டபத்தில் அதிபர் அருட்பணி க.ஜேம்ஸ் சிங்கராயர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாக்குழுச் செயலர் அருட் கலாநிதி அ.பி.ஜெயசேகரமும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பொருளாளர் ச.லலீசனும் கலந்துகொண்டனர். நிகழ்வில் ஆரம்பத்தில் தனிநாயகம் அடிகளாரின் திருவுருவப் படத்துக்கு அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் மலர்மாலை அணிவித்தார். ஊர்காவற்றுறை நகர் ஊடாக அந்தோனியார் கல்லூரி வரை தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் திருவுருவப் படம் மங்கல வாத்திய இசையுடன் எடுத்து வரப்பட்டது. நிகழ்வில் ஊர்காவற்றுறை மற்றும் சுருவில், கரம்பொன் பிரதேசப் பங்குத் தந்தையர்கள் உள்ளிட்ட பிரதேசம் சார்ந்த பெரியோர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.சோமசேகரம், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஒ-23)

## பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பராமரிப்பு நிலையம் ஊரெழுவில்

யாழ்ப்பாணம், ஜூலை 6

பாலியல் வன்முறைகள், குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வு நலன்களை கவனிக்கும் பொருட்டு, மனித உரிமை நிலையத்தால் சமூகபராமரிப்பு நிலையம் ஊரெழுவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அதன் மாவட்ட அதிகாரி த.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

இன்றைய சமூகம் முகம் கொடுக்கும் சமூகப் பிரச்சினையாக பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், குடும்ப வன்முறைகள் என்பன காணப்படுகின்றன.

இது சமூக ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் பாரதூரமான விடயமாக நோக்கப்படுகின்றன.

இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஒன்று சேர்ந்து தமது பிரச்சினைகளை கலந்துரையாடி அல்லது அதற்கென உள்ள துறைசார் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி தமது மனதுக்கு ஆறுதல் பெற்றுக் கொள்ளக்கூடிய ஏது நிலைகளும் உள்ளன.

இவ்வாறான நிலைமைகளின் வெளிப்பாடு அந்தப் பெண்களினது ஆற்றல்களையும், வாழ்வாதார நிலைமைகளையும் மேம்படுத்துவனவாக அமையும்.

இத்தகைய பெண்களுக்கான சேவைகளை வழங்குவதற்குரிய சமூக பராமரிப்பு நிலையம் ஒன்றை ஊரெழுவில் அமைந்துள்ள மனித உரிமை நிலையம் அமைத்துள்ளது. இந்த அமைப்பானது வார நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரையில் திறந்திருக்கும் எனவும் இதில் கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட பெண்கள் பயனடையுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (வ-5)

## இந்து மாமன்றம் கணினிகள் அன்பளிப்பு

அகில இலங்கை இந்துமாமன்றத்தால் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களுக்கு மேசைக் கணினிகள் மற்றும் மடிக்கணினிகள் அன்பளிப்பாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் இருந்து அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற இந்தக் கணினிகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் இந்து சமய நிறுவனங்கள் நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்தியப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு கணினிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

# பெற்றோரை இழந்த மாணவர்கள் உதவிகள் பெறுவதில் சிக்கல்

அச்சுவேலி, ஜூலை 6

வன்செயல்களில் தாய் மற்றும் தந்தையை இழந்த அல்லது தாய் தந்தை இருவரையும் இழந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு 'இறப்புச் சான்றிதழ்' முக்கிய ஆவணமாகக் கருதப்படுவதால் சிறுவர்கள், மாணவர்கள் பலர் உரிய முறையில் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கல்வியைத் தொடர வழங்கப்படும் உதவிகளைப் பெறுவதற்கு இறப்புச் சான்றிதழை மட்டும் ஆவணமாக கருதப் படுவதை தவிர்த்து மேலதிகமான சில விசேட ஏற்பாடுகளின் கீழ் உதவிகள் கிடைப்பதற்கு வசதிகள் செய்யப்பட வேண்டும் என கோருகின்றனர்.

கடந்த கால வன்செயல்கள் மற்றும் காணாமற் போனோர் மற்றும் இறந்தவர்கள் தொடர்பான விவரங்கள் தெளிவான முறையில் தெரியாமல் இருப்பதால் பெரும்பாலானவர்களின் இறப்புத் தொடர்பாக உரிய முறையில் பதிவுகளை மேற்கொண்டு 'இறப்புச்சான்றிதழ்' பெறப்படவில்லை. அவர்கள் இறக்கவில்லை 'மீண்டும் வருவார்கள்' என்ற நம்பிக்கையோடு உறவினர்கள் காத்திருக்கின்றனர்.

உண்மையான தகவல் தெரியாத நிலையில் உயிரோடு இருப்பவரை இறந்ததாக பதிவு செய்வது அவநம்பிக்கையின் பிரகாரம் தீமையானது என்ற நம்பிக்கையில் பலர் ''காலம் தப்பிய இறப்பு பதிவு'' ''காணமல் போனவர்களை இறந்ததாக பதிவு செய்தல்'' என்ற விசேட ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படவில்லை. தாய், தந்தையரை வன்செயல்களால் இழந்த பிள்ளைகள் மற்றும் மாணவர்களுக்கு கிடைக்கக் கூடிய உதவிகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு 'இறப்புச் சான்றிதழ்' இல்லாமல் இருப்பதால் கணிசமான தொகையினர் பிரதேச சமூக சேவை பிரிவு மற்றும் சிறுவர் மேம்பாட்டுப் பிரிவு என்பனவற்றால் விசேடமாக உறவுகளை இழந்த மாணவர்கள், சிறுவர்களுக்கு வழங்கப்படும் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கல்வியைத் தொடர வழங்கப்படும் உதவிகளைப் பெறுவதற்கு இறப்புச் சான்றிதழை மட்டும் ஆவணமாக கருதப்படுவதை தவிர்த்து மேலதிகமான சில விசேட ஏற்பாடுகளின் கீழ் உதவிகள் கிடைப்பதற்கு வசதிகள் செய்யப்பட வேண்டும் என கோருகின்றனர். (வ-11)

# சீன பயணத்தை முடித்து நாடு திரும்புங்கள்

## ஏ.கே.அந்தோனியிடம் வலியுறுத்துகிறது பா.ஜ.க.

புதுடில்லி, ஜூலை 6

இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி தனது சீனப் பயணத்தை இரத்துச் செய்து உடனடி யாக நாடு திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது பாரதிய ஜனதாக் கட்சி.

சீனாவின் இராணுவத் தளபதி வெளியிட்டுள்ள கருத் துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ்வாறு வலியுறுத்தியுள்ளது பா.ஜ.க.

இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், சீனாவின் மூத்த இராணுவத் தளபதி லுயோ யுவான் இந்தியாவை எச்சரிக்கும் தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார். எல்லைப் பிரச்சினைகள் தொடர்பில் சீனாவின் கோபத்தை தூண்டும் வகையில் இந்தியா செயற்படக்கூடாது என்று அவர் தெரிவித்திருந்தார்.

லுயோ யுவானின் இந்தக் கருத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள பா.ஜ.க., இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், சீன இராணுவத் தளபதியின் இந்தக் கருத்து இந்தியாவை அவமதிக்கும் செயல் என்று தெரிவித்துள்ளது. அத்துடன் இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் தனது பயணத்தை பாதியிலேயே முடித்துக் கொண்டு உடனடியாக நாடு திரும்ப வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

எனினும் இந்தியாவை மிரட்டும் வகையில் சீனா ஒரு போதும் நடந்துகொள்ளாது. இராணுவத் தளபதி வெளியிட்டுள்ள கருத்து அவரின் சொந்தக் கருத்தே என்று தெரிவித்துள்ளது சீனா. (ற)

## பா.ம.கவினர் மூவர் கைது

காஞ்சிபுரம், ஜூலை 7

கடந்த ஏப்ரல் மாதம் மாமல்லபுரத்தில் இடம்பெற்ற கலவரம் தொடர்பாக பா.ம.கவைச் சேர்ந்த மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏற்கனவே பா.ம.க.சட்டமன்ற உறுப்பினர் குரு கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்களின் கைது இடம்பெற்றுள்ளது. இவர்கள் அனைவரும் முன்னர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களாவர். (ற)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

VACANCIES

Applications are invited by me up to 06.07.2013 from suitably qualified persons for the following posts:

1. VISITING ASSISTANT UNIVERSITY MEDICAL OFFICER [ON ASSIGNMENT]

Qualification:

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner

Rate of payment per hour: - Rs.275.00

The selected officers should be prepared to work in the **Siddha Medicine Unit, Kaithady and Ramanathan Academy of Fine Arts, Maruthanarmadam** of this University.

Retired officers may also apply.

2. ELECTRICIAN [ON ASSIGNMENT]

A candidate who possesses the following qualifications may apply:

i. Pass in the 8th standard.

ii. Should be conversant with

a) Detecting faults, repairs and assembly of materials, transformers and all types of machinery and appliances, cables, wires and their ratings, measuring instrument and their uses various types of wiring, joining, testing meters and small transformers ;

b) Reading and understanding drawings and diagrams. Reading scales and record fractional dimensions;

c) Care and the use of the tools in the trade.

iii. Not less than 2 years' experience as an electrician in a government department, State Corporation or in a recognized establishment.

Rate of payment per day: Rs.795.00 fixed.

Applications should be sent with full bio-data. The envelope containing the application and the bio-data must bear the name of the post which they apply on its top left corner and either hand-delivered or sent under registered post to reach the office the Senior Assistant Registrar/Establishments Branch [Non-Academy] on or before 29.07.2013.

**REGISTRAR**
**University of Jaffna.** (C-10249)(2.6)

# ராஜீவ் கொலை விசாரணைகள் முழுமையாக நடைபெறவில்லை

## முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி வழக்கு

புதுடில்லி, ஜூலை 6

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணைகள் முழுமையாக நடைபெறவில்லை என்று தெரிவித்து முன்னாள் சி.பி.ஐ. அதிகாரியான மோகன் ராஜ் என்பவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ராஜீவ் கொலை தொடர்பான விசாரணைக் குழுவில் இடம்பெற்றிருந்த மோகன் ராஜ், 1998ஆம் ஆண்டு சி.பி.ஐயில் இருந்து விருப்பு ஓய்வு பெற்றிருந்தார்.

அதன்பின்னர் குறித்த வழக்கு விசாரணைகளில் எதுவிதத் தொடர்புகளும் அற்றிருந்த மோகன்ராஜ் தற்போது, ராஜீவ் கொலை வழக்கு விசாரணைகள் முழுமையாக நடைபெறவில்லை என்று தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன், இன்னும் பலரிடம் வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப் படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

ரஜீவ் கொலை வழக்கில் சந்திரகுமார் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச தொடர்புகளைப் பேணி வந்த குமரன் பத்மநாதன் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளவென அமைக்கப்பட்ட பல்நோக்கு கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மோகன்ராஜின் மனுவை ஏற்றுக்கொண்டுள்ள சென்னை உயர்நீதிமன்றம் இதுகுறித்து இந்திய மத்திய அரசு எதிர்வரும் 15 நாள்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. (ற)

**வேலையாள்கள் தேவை**

புடவைக்கடை ஒன்றுக்கு
(யாழ். பல்கலைக்கழகம் முன்னால்)
ஆண்/ பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு- 0777363797

**வீடு விற்பனைக்கு உண்டு**

19, பிரப்பன் குளம் வீதி,
யாழ்ப்பாணத்தில் வீட்டுடன் 3பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0212227625
ஞாயிற்றுக்கிழமை மட்டும்- 0212221617

**வீடு வளவு விற்பனைக்கு**

நகரின் மத்தியில் ஸ்ரான்லி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் றயில் பாதைக்கு அருகில் பழைய வீடு கிணற்றுடன் கூடிய 3 பரப்பு 3½ குளி காணி விற்பனைக்கு.
தொடர்பு: 077 072 2204
(38956)(6.11)

**வீடு வாடகைக்கு**

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிட வசதிகளும் உண்டு.
தொடர்பு- 0770227306

**மலிவு விற்பனை**

வீட்டுத் தளபாடங்கள்
கட்டில்கள், அலுமாரிகள், ரிபிர், "வோசிங்மிசின்", அலங்காரப் பொருள்கள் பிளாஸ்ரிக் மேசைகள், புதிய கேட்டின்கள் (பெரியவை, சிறியவை), மெத்தை உறைகள், நிலக்கம்பளம் என்னும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு.
காலம்: 7.7.2013 ஞாயிறு காலை 7.30 -6.00 மணி வரை
இடம்: No.86, அரசடி றோட், யாழ்ப்பாணம்
தொடர்பு: 077 753 1353, 021 222 0086
(38936)(6.11)

**காணி விற்பனைக்கு**

நெல்லியடியில் பெற்றோல் செற்றிற்கு அருகில் செல்லும் வீதியில் (300m தூரத்தில்) 1½ பரப்புக்காணியும் அதனுடன் சேர்ந்த வீடும் விற்பனைக்குண்டு. தனியாக 2 பரப்புக்காணியும் உண்டு. பார்வையிடும் நாள் ஞாயிற்றுக்கிழமை (07.07.2013) காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை
தொடர்பு: 077 222 9354

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க ஆண்டும் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்**

மேற்படி கூட்டம் நாளை (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு எமது சங்கப் பணிமனையில் இடம் பெறும். அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களும் குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது சமுகமளிக்கும் படி அன்புடன் அழைக்கின்றோம்.
செயலாளர்
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
(38918)(6.11)

**விற்பனைக்கு**

55 நாள் நிரம்பிய 2 கறுப்பு நிற பொமேரியன் ஆண், பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.
குளங்கரை லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
072 171 7858

**விற்பனைக்கு**

வெள்ளை நிற கன்டர் வாகனமும் (இல. 226 சிறி XXXX )
திருமணபந்தலும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 185 7999

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ-து)
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
**இ.பாலச்சந்திரன்**
அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்றதை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**பண்டத்தரிப்பு பரிஷ் பல நோ.கூ.சங்க பணிப்பாளர்களும், பணியாளர்களும்.**
(C/10228)(6.45)



**சரவணா ரெக்ஸ்**
Office Ware Sarees
Cotton and Silks (With Blouse)
Rs. 500/= Only
பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
சரவணா ரெக்ஸ்
01, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்



## மன்னிப்பு கோரியது பிரான்ஸ்



பரிஸ், ஜூலை 6
பொலிவிய ஜனாதிபதி இவோ மொராலஸ் பயணித்த விமானத்தை தமது நாட்டு வான் பரப்பிற்குள் அனுமதிக்காதமை குறித்து பிரான்ஸ் மன்னிப்பு கோரியுள்ளது.
முரணான தகவல்கள் காரணமாக தாம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி நேரிட்டது என்றும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.
அமெரிக்காவின் உளவுத் தகவல்களை பகிரங்கப்படுத்திய எட்வோர்ட் ஸ்நோடன், பொலிவிய ஜனாதிபதி பயணித்த விமானத்தில் தப் பிச் செல்வதாகத் தகவல் வெளியானதை அடுத்தே, ஜனாதிபதியின் விமானம் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.
அதுகுறித்து கடும் விசனத்தைத் தெரிவித்துள்ள பொலிவியா, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெய்ன், மற்றும் போர்த்துக்கல் ஆகிய நாடுகள் தமது ஜனாதிபதி பயணித்த விமானத்தை தடைசெய்தன என்றும் கடுமையாகச் சாடியிருந்தது.
இதுகுறித்து மன்னிப்புக் கோரியுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி பிரன்சுவா ஒலாண்ட், பொலிவிய ஜனாதிபதியின் விமானம் தமது வான்பரப்பின் ஊடாகப் பயணிப்பதற்கான அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.
மொஸ்கோவில் இருந்து பொலிவிய ஜனாதிபதி பயணித்த விமானம் வியட்நாமில் வலுகட்டாயமாக தரையிறக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டிருந்தது. (ற)



சண்டி புயலின் தாக்கத்தால் சேதமடைந்த அமெரிக்காவின் சுதந்திரதேவி சிலை, புனரமைப்புகளின் பின்னர் மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## அமைதிப் பேரணிக்கு அனுமதி



கெய்ரோ, ஜூலை 6
எகிப்தில் அமைதியான முறையில் பேரணிகளை நடத்த அந்த நாட்டு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.
அந்த நாட்டின் ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவருடைய ஆதரவாளர்களால் இன்றைய தினம் பேரணிகள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இதனைத் தொடர்ந்தே இராணுவத்தினர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர். (ற)

# கோபமூட்ட வேண்டாம்

## இந்தியாவுக்கு அறிவுறுத்துகின்றது சீனா

பீஜிங், ஜூலை 6
இருநாட்டு எல்லைப் பிரச்சினைகளில் சீனாவின் கோபத்தைத் தூண்டாது இந்தியா நடந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் சீன இராணுவத் தளபதி லுயோ யுவான்.

**எதைக் கூற வேண்டும், எதைக் கூறக் கூடாது என்ற விடயத்தில் இந்தியா எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்**



இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே அவர் எச்சரிக்கைக் தொனியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
''இருநாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் 90 ஆயிரம் கிலோமீற்றர் நிலப்பரப்பு இந்தியாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் இந்திய இராணுவத்தினரின் செறிவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளால் சீனாவின் கோபத்தைத் தூண்டக்கூடாது. சீனாவின் அச்சுறுத்தலால்தான் தமது இராணுவச் செலவை அதிகரித்துள்ளோம் என்றும் இந்தியா கூறியுள்ளது. எதைக் கூற வேண்டும், எதைக் கூறக் கூடாது என்ற விடயத்தில் இந்தியா எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்'' என்று கடும் தொனியில் தெரிவித்துள்ளார் லுயோ யுவான்.
இதேவேளை, சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி இரு நாட்டு எல்லைப் பிரச்சினை தொடர்பாவே அந்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சரோடு பேச்சுகளை நடத்தவுள்ளார். (ற)

### பொலிவியா ஜனாதிபதி விவகாரம்

## தென் அமெரிக்க நாடுகள் அவசர கலந்துரையாடல்

சூக்ரே, ஜூலை 6
பொலிவியாவின் ஜனாதிபதி ஈவோ மொராலெஸ் சென்ற விமானம் ஐரோப்பிய வான் பரப்பில் பறக்கத் தடை விதிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விவாதிப்பதற்காக தென் அமெரிக்க நாடுகளின் அமைப்பான உனாசுர் அவசரக் கூட்டம் ஒன்றை நடத்துகிறது.
மொராலெஸ் நடத்தப்பட்ட விதம் குறித்து தென் அமெரிக்கத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.
பொலிவியாவின் மரியாதை மட்டுமல்லாது தென் அமெரிக்க கண்டத்தின் கௌரவத்துக்கே ஓர் அச்சுறுத்தலாக அமைந்த சம்பவம் இது என அவர்கள் வர்ணித்துள்ளனர்.
இந்த சம்பவத்தில் தனது பங்குக்காக பிரான்ஸ் வருத்தம் தெரிவித்துள்ளது.
அமெரிக்க உளவுத்துறையின் முன்னாள் ஆய்வாளர் எட்வர்ட் ஸ்னோடென் ஒளிந்திருக்கிறார் என்ற சந்தேகம் காரணமாக அதிபர் சென்ற விமானம் தமது வான்பரப்பில் பறக்க பல ஐரோப்பிய நாடுகள் தடை விதித்திருந்தன.




இந்த சம்பவத்தின் எதிரொலியாக பொலிவியத் தலைநகர் லா பாஸிலுள்ள பிரஞ்சு தூதரகத்தின் வெளியே ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. பிரஞ்சுக் கொடி, ஐரோப்பிய ஒன்றியக் கொடி ஆகியவற்றை எரித்து மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். (ற)

## மண்டேலாவுக்கு செயற்கை சுவாசம்

ஜொகன்னர்ஸ்பேர்க், ஜூலை 6
தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா செயற்கை சுவாசக் கருவியின் உதவியோடு சுவாசித்து வருகின்றார் என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மண்டேலாவின் இறுதிச் சடங்குகள் நடத்துவது குறித்து உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றது. அது தொடர்காக தென்னாபிரிக்க நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறித்த வழக்குத் தொடர்பான விசாரணைகளின் போது மருத்துவமனை அளித்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## 'கல்யாணம் பண்ணிக்கிறீங்களா?'

### ஸ்நோடனுக்கு அதிர்ச்சி கொடுத்துள்ள ரஷ்ய அழகி



மொஸ்கோ, ஜூலை 6
அமெரிக்காவுக்கே அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துக் கொண்டிருப்பவர் ஸ்நோடன் எட்வேர்ட். மொஸ்கோ விமான நிலையத்தில் தற்போது தங்கியுள்ள அவருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருக்கிறார் ரஷ்யாவின் முன்னாள் உளவுப் பணியாளரும், தற்போது ரஷ்யாவையே கலக்கிக் கொண்டிருக்கும் 'மொடல்' அழகியுமான அனா சேப்மன்.
அவர் வேறொன்றும் செய்யவில்லை. தனது டுவீற்றர் தளத்தில் ஸ்நோடனுக்கு ஒரு தகவல் வழங்கியுள்ளார். அது என்ன தெரியுமா? 'என்னை கல்யாணம் பண்ணிக்கிறிங்களா?' என்பது தான் அது. இதுதான் தற்போது ரஷ்யாவை கலக்கிக் கொண்டிருக்கும் தலைப்புச் செய்தி.
இந்த அனா சேப்மன், அமெரிக்காவில் ரஷ்ய உளவாளியாக செயற்பட்ட போது சிக்கிக் கொண்டவர். அதன் பின், அமெரிக்காவும் ரஷ்யாவும் தமது நாட்டில் பிடிபட்ட உளவாளிகளை கைதிப் பரிமாற்றம் செய்து கொண்ட போது, ரஷ்யா வந்து சேர்ந்தார். அத்துடன் அனா ரஷ்ய ராஜதந்திரி ஒருவருடைய மகள்.
அமெரிக்காவுக்கே பயப்படாது இரகசியங்களை வெளியிட்ட ஸ்நோடன், இதுகுறித்து எதுவும் கூறாது மொஸ்கோவில் பதுங்கியிருக்கிறாராம். (ற)

## பாகிஸ்தான் நினைத்தால் ஆப்கன் அமைதியாகும்

### அந்நாட்டு இராணுவத் தளபதி கருத்து

காபூல், ஜூலை 6
தலிபான்களுடன் பாகிஸ்தான் அரசு சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வன்முறைகளைமுடிவுக்குக் கொண்டு வரும்பட்சத்தில் ஆப்கனில் வன்முறைகள் சில வாரங்களிலேயே நிறுத்தப்படும் என்று ஆப்கன் இராணுவத் தளபதி ஜெனரல் ஷெர் மொஹமது கரிமி தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தான் தலிபான்களுக்கு புகலிடம் தருவதுடன் அவர்களைக் கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கிறது என்று தெரிவித்துள்ள ஜெனரல் கரிமி, பாகிஸ்தான், ஆப்கனில் தாக்குதல்களை நடத்த தலிபான்களை வேண்டுமென்றே தூண்டிவிடுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, தலிபான் தீவிரவாதிகள் மத்தியில் மீது தனக்கு ஏதும் செல்வாக்கு இருப்பதாகக் கூறப்படுவதை பாகிஸ்தான் மறுத்துள்ளதுடன், பாகிஸ்தான்- ஆப்கனுக்கிடையே இருக்கும் நீண்ட பாதுகாக்கப்படாத எல்லைப்புறத்தைக் கண்காணிப்பதில் இருக்கும் சிரமத்தையும் அது சுட்டிக் காட்டியுள்ளது.
ஜெனரல் கரிமியின் கருத்துக்கள், அமெரிக்கா, தலிபான்களுடன் அமைதிப் பேச்சுகளை நடத்த முயன்று வரும் நேரத்தில் வெளிவந்துள்ளன.(ற)

## அமெரிக்காவின் பதிலுக்காகக் காத்திருக்கின்றோம்

### உளவு பார்த்தமை தொடர்பாக ஜேர்மன் ஜனாதிபதி கருத்து

பேர்லின், ஜூலை 6
பிறநாடுகளை உளவு பார்த்தமை தொடர்பாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து அமெரிக்கா உரிய பதிலை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என்று ஜேர்மனியின் ஜனாதிபதி ஏங்கலா மேர்கல் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் தொலை பேசியூடாக உரையாடிய பின்னரே அவ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
''நட்பு நாடுகளைக் கண்காணிப்பதை நாம் எதிர்பார்க்கவில்லை என்பதை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு நன்கு தெளிவுபடுத்தியுள்ளோம். அதுகுறித்த உரிய பதிலை அமெரிக்காவிடம் இருந்து எதிர்பார்த்துள்ளோம்'' என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)



# காரைநகர் - களபூமி - திக்க...

பதிவு இல. HA/5/JA/48

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய ...

# தேர்த்திருவிழா சிறப்பு...



### ஆசியுரை

அருள் கொடுக்கும் ஆறுமுகப்பெருமான் காரைநகர் திக்கரையில் வீற்றிருந்து வேண்டுவார்க்கு வாரி வழங்குகிறான். செல்வச் சிறப்போடு இவ்வூர் மக்கள் வாழ்வதோடு, சமய வாழ்வே காரணம் எனலாம். திக்கரை முருகனின் திருவிழாக்காலம் தனித்துவமானது. நாதஸ்வர தவில் கச்சேரிகள் களை கட்டும். எங்கும் பக்திப் பரவசம். சீருடன் மக்கள் வாழ திருக்கோயில் திருவிழாக்கள் அவசியம். திக்கரை வேலன் தேர் ஏறிவரும் நாளில் அனைவரும் பக்தி பூர்வமாக வழிபாடு செய்து நல்லருள் பெறுவோமாக.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

நல்லை ஆதீன முதல்வர்



### முருகப் பெருமானே தேரேறி வாராய்

திருவருட் செல்வங்கள் பொலிந்து சீரும் சிறப்பும் வாய்ந்த நவ கண்டங்களுள் சிறந்த பூமியாகிய பரத கண்டத்தினை சார்ந்த சிவபூமி எனப்படும், புண்ணிய தேசமாகிய இலங்கா புரியின் வடபால் அமைந்த வீணாகானபுரம் என வியந்து அழைக்கப்படும் யாழ்ப்பாண நன்நகரில் மேற்குத்திசையில் அமைந்திருப்பது காரைநகர். இந்நகரில் சூரியன் உதிக்கும் கிழக்கு திசையில் அமைந்திருப்பது களபூமி எனும் கிராமம். இக்கிராமத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி உள்ளன. அதனால் கல்வி, விவசாயம், வர்த்தகம், நீதி என்ற வளங்கள் மேம்பாட்டுடன் விளங்குகின்றன.

திக்கரை என்னும் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புகளுடன் தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு வேண்டும் வரங்களை அருளி, அருளாட்சி புரிந்து கொண்டு விளங்கும் திக்கரை ஸ்ரீ சிவசுப்பிரமணிய பெருமானின் வருடாந்த பிரம்மோற்சவம் நிகழும் மங்கலகரமான விஜய வருடம் ஆனித்திங்கள் 22ஆம் நாளாகிய (2013.07.06) இன்றைய நன்நாளில் தாங்கள் விரும்பிக் கேட்கும் வரங்களை ஈந்தருளும் திக்கரை முருகப்பெருமான் தம்மிடம் நாடி வரும் பக்தர்களின் குறைகளை தீர்ப்பவர். அவர் தம் பாதார விந்தங்களை பணிந்து அவர் தேரேறி வரும் இந் நாளில் அவரருளை அனைவரும் பெற்றுய்ய எல்லாம் வல்ல முருகப்பெருமானை வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

P. உமாசங்கர்,

ஆலய அறங்காவலர்/ நம்பிக்கைப்பொறுப்பாளர்.

### முருகன் அருளாசி கிடைக்கட்டும்....



ஆலய தரிசனத்தில் சூரிய வம்சத்தின் தொடர்ச்சியான ஆலய வழிபாட்டில் பாலாவோடை குறிஞ்சாக் குளி முத்து மாரியம்பாளின் ஆதீன கர்த்தாக்களின் வழித்தோன்றல்களான தம்பி எம்பெருமானின் வாரிசுகளான நானும் எனது தம்பி விக்கினேஸ்வரனும் எம்பர் வீட்டுத்திருவிழாவான தேர்த் திருவிழாவை சிறப்பாக நடத்தி வந்திருந்தோம். எனது அன்புத் தம்பி விக்கியின் மறைவைத் தொடர்ந்து கடந்த வருடமும் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு தொடர்ந்தும் இவ்வருடமும் அறங்காவலர் பொன்னம்பலம் உமாசங்கரின் அனுசரணையோடு திக்கரை முருகன் அருளாசியுடன் இனிதே நடைபெற திக்கரை முருகனைப் பிரார்த் திக்கின்றேன்.

க.மு. தம்பிராசா (தம்பி) (தேர்த் திருவிழா உபயகாரர்) 077 730 1961

(தம்பி ஹோல் டிங்ஸ் அன்ட் கொம்னிகேசன்)

### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



மூர்த்தி தலம் தீர்த்தம் முதலிய சிறப்புகளுடன் விளங்கும் எல்லாம் வல்ல கலியுக வரதனாம் திக்கரை முருகப் பெருமானது இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது. ஸ்ரீ சண்முகநாதப் பெருமான் சூரபதுமனின் இருகூறுகளாகி சூரன், பதுமன் ஆகிய நான், எனது என்கின்ற ஆணவத்தை அழித்து எவ்வாறு சூரனை ஆட்கொண்டு வரம் அளித்தாரோ, அதுபோன்று எம்பெருமான் இன்று தேரில் ஆரோகணித்து எங்கள் எல்லோரிடமும் இருக்கும் நான், எனது என்கின்ற ஆணவத்தை அழித்து ஆட்கொண்டு திருவருள் புரியவேண்டும். வள்ளி, தேவயானை சமேத என்று ஸ்ரீ சண்முகநாதப்பெருமானைப் பிரார்த்தித்து உங்கள் எல்லோருக்கும் நல்லாசிகள் கூறி அமைகின்றோம்.

*'லோகாசமஸ்த்தா சுகிலோபவந்து''*

பிரம்மஸ்ரீ கு. சரவணபவானந்த சர்மா (பிரதம குரு)

### செஞ்சொற்செல்வரின் ஆசியுரை



தெய்வத் திருவூர் காரைநகர் சைவப் பாரம்பரியத்தை தம் உயிரெனக் கருதி மதிக்கும் பண்பாளர்களால் ஆற்றுப்படுத்தப் பட்ட ஆன்மீகத் திருநகரில் ஆலயங்களுக்குக் குறைவில்லை. எல்லாத் திருக் கோயில்களிலும் சதா திருப்பணி நடைபெற்றுக் கொண்டே இருக்கும். காரைநகர் களபூமி திக்கரை முருகப் பெருமானின் சிறப்பு பெருமைக்குரியது. திருவிழாக்காலச் சாத்துபடியைக் கண்டவர்கள் திக்கரை முருகனின் அழகை ஆனந்தமாக ரசிப்பது வழக்கம். அருள் மழை பொழியும் திக்கரை முருகப்பெருமான் தேர் ஏறிவரும் திருநாள் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். கருணைக் கடலாகிய கந்தப்பெருமான் தேர் ஏறி வந்து, எம் திருநாட்டைக் காக்க வேண்டும். அற்ப சொற்ப உரிமை கூட அருகி வரும் வேளை ஆறுமுகப் பெருமான் அறங்காத்து அருள் புரிய வேண்டும். நாம் செய்த தவறுகளை மன்னித்து எம்மை முருகன் ஆட்கொள்ள வேண்டும் என அனைவரும் ஒன்று பட்டுப் பிரார்த்திப்போம். விடிவும் வெற்றியும் தரும் வேலவன் திருவடியை பற்றிப் பிடித்து மன்றாடுவோம். தீது இன்றி நாம் வாழ திக்கரை முருகன் திருவருள் நல்குவான்.

கலாநிதி ஆறு.திருமுருகன் தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை,சிவபூமி அறக்கட்டளை.

### ஆனந்தத்தை ஏற்படுத்தும் திக்கரையான்



எங்கள் குல தெய்வம் திக்கரையான் தேர் ஏறிவரும் திருநாள் குறித்து வாழ்த்து வதில் மகிழ்ச்சியடைகின்றேன். எம் உற்றார், உறவினர், அயலவர் அனைவரும் ஒன்று கூடிப் பிரார்த்திக்கும் திருநாள். சிறுபராயம் முதல் இன்றுவரை எங்கள் திருக்கோயில் திருவிழாக்கள் உள்ளத்தில் ஏற்படுத்தும் ஆனந்தத்தை மறக்க முடியாது. எங்கள் ஊர் மக்கள் எத்திசையில் வாழ்ந்தாலும் எங்கள் ஊர் கோயில் களை மறந்ததில்லை. விழிக்கும் பொழுதெல்லாம் குலதெய்வங்களையே முதலில் நினைத்து வணங்கும் பண்பினை இன்றும் காணலாம். மனம் நிறைந்த மகிழ்வை நாம் சந்திப்பதற்கு திருக் கோயிலைத் தவிர வேறு ஏதும் இல்லை. இனிய இத் திருநாளில் எம் ஊர் மக்கள் ஒன்றுபட்டு முருகன் திருவருளைப் போற்றி வழிபாடு செய்வோமாக.

S.V.M. குரைத்தினம்.

### திருத்தல வரலாறு

ஈழவள நாட்டின் வட பகுதியில் உள்ள சிவ பூமியாகிய ...
சிறப்புற அமைந்திருக்கின்றன. அவற்றுள் களபூமி...
வேண்டுவார்க்கு வேண்டுவதை எல்லாம் ஈந்தருளும்...
கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார். பெருமை...
அற்புதமானது. இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு மு...
முருகப்பெருமான் காலத்துக்கு காலம் பல அற்புதங்களை...
எடுத்த கனகசபை காசிநாதர் எனும் அன்பருக்கு திடீரென...
பெரும் அல்லலுக்குட்பட்டு 'முருகன் காப்பான்' எனும் ...
களை தழுவிப்பிடித்தமை யினால் முருகப்பெருமான் ...
கண்ணொளி கொடுத் தார். இதனால் உள்ளம் புளகாங்கித...
வேலாயுதத்தை இப்பொழுது, புனருத்தாரணம் செய்யப்...
வைத்து சிறு ஆலயமாக அவரும் ஊரில் உள்ளவர்களும் 1880 ...
அக்கோயிலை மேலும் கற்களால் கட்டி 1902 இல் கும்பா...

1925 இல் இவரது மறைவுக்கு பின்னர் சிதம்பரப்பிள்ளை...
ஏற்று 1928 , 1948 களில் கும்பாபிஷேகத்தை நடத்தினா...
செவ்வனே பரிபாலித்து 1960 இல் சிவபதமடைந்த பின்...
கனகர் திருநாவுக்கரசு அவர்கள் கோயில் நிர்வாகப் பொறு...
நடத்தினார்கள். 1979 இல் இவர் சிவபதம் அடைய சிதம் பரப்...
ஏற்று 1990 இல் கும்பாபிஷேகம் நடத்தினார்கள். 1990 இல்...
நடராசா நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தி 2000 இல் இவர் ...
பொன்னம்பலம் நிர்வாகப் பொறுப்பை ஏற்று 2008 இல் ...
இல் இவர் சிவபதம் அடைய மூத்த மகன் பொன்னம்ப...
நடத்திவருகின்றார். அன்று தொடக்கம் இன்றுவரை ஆலயத்...
இடம்பெற்று வருகின்றன. *

### திக்கம் முருகன் தேரேறி வா...

உலகை உய்விப்பது நம் சைவ சமயம். சைவத்தின் ...
ஆவார். அச்சிவனே இவன் என நினைந்து சைவர்கள் வழி...
முருகக்கட வுளாம். முருகன் தமிழர் தம் தனிக்கடவுள். மு...
அழகு என்று பொருள். அழகனைத் தம் கடவுளாகக் ...
ஈழத்தில் சைவம் தொன்றுதொட்டு வழங்கி வருகிறது...
சைவசமய நிலைக்களன். யாழ்ப்பாண சைவ பீடங்களி...
காரைநகர் காரைநகரில் அமைந்துள்ள திக்கம் சிவ...
அவ்வாலயத்தின் தேர் உற்சவம் காண்பாரை உய்விப்ப...
சிறப்புற இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

*'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'*

கம்...

### திக்கரை முருகா தேரேறி அடியார்களு...

இந்து சமுத்திரத்தின் முத்தாக வர்ணிக்கப்படும் இவ் ...
காரை நகரில் களபூமி திக்கரைப் பதியில் கோயில் கொ...
விஜய வருஷ பிரம்மோற்சவத்தின் 9 ஆம் நாளான ரத...
வள்ளி, தெய்வானை சமேதராய் அழகிய சிற்பத்தேரில்...
புரிகின்ற காட்சி, திக்கரை முருகன் தம்மை வணங்கு...
தெய்வமாக விளங்குபவர். விரைவில் திருமணம் நடை...
தீராத நோயைத் தீர்க்கவும் முரு கனை உபாசித்தால் போ...
பக்தர் வேண்டுவதனை எல்லாம் நல்கும் அழகுக் க...
திருவருளால் எமது நாட்டில் துன்ப துயரங்களெல்லாம்...
சத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழவும், புலம்பெயர்ந்து ...
திக்கரை முருகனின் பாதக் கமலங்களில் சரண் புகுந்து ...

ந.உதயபாஸ்கரன் தலைவர். திக்கரை இந்து இளை...

**ABIRAMI BUSINESS CENTRE**
General Merchants
NO:39, St.John's Road,
Colombo-11
Tel: 011 233 0294,
011 455 3830,
077 711 9545
E.mail:kiriabc@gmail.com

**SELVAH AGENCY**
General Merchants
& Commission Agents
No:35, St.John's Road,
Colombo-11
Tel: 011 245 1195,
077 757 4688, 071 4896927

**சிவ ஐங்கரன் ஸ்ரோர்ஸ்**
இல.136, K.K.S வீதி
யாழ்ப்பாணம்.

**KS KANNAN STORES**
268, Hospital Road,
Jaffna.

SRI RAMAJEYAM
**SRI SIVARAM TRADERS**
No.248, Hospital
Road,Jaffna.
Tel:021 222 8629,
077 756 0760

**RU...**
104...
RO...

**K.K Kandiahpillai & Sons**
318, (124)
Hospital Road,
Jaffna.

**INKARAN STORES**
654, Hospital Road,
Jaffna.

**AMBIKAI BOOK CENTRE**
Manippay Road,
Oddumadam Junction,
Jaffna.Tel: 077 664 8239

**K.S.M.Communication**
No.146,
New Market
Jaffna.
Tel: 021 222 3079

**ANNAI BOOK DEPOT**
07, Hospital Road,
Jaffna.
Tel: 021 222 9891

பிள்ளை... கள...
இல...
ஆஸ்பத்...
யாழ்ப்...



# க்கரை முருகமூர்த்தி கோயில்
## ய சுவாமி கோயில்)
# மலர் – 06.07.2013

வ பூமியாகிய காரை வள நாட்டில் பல சைவ ஆலயங்கள்
ள் களபூமியில் உள்ள திக்கரை எனும் பதியில்
ஈந்தருளும் கலியுக வரதனாகிய முருகப்பெருமான்
ரார். பெருமை வாய்ந்த இத்தலத்தின் வரலாறு மிக
டுகளுக்கு முன்னர் (1760 வரையில்) உற்பத்தியாகிய
ற்புதங்களை புரிந்திருக்கின்றார். அரிய மானிடப் பிறவி
க்கு திடீரென கண்பார்வை மறைந்துவிட்டது. அதனால்
ான்' எனும் ஊறுதியுடன் இடையறாது அவர் செந்தாழ்
ப்பெருமான் திருவுளம் கொண்டு அந்த அன்பருக்கு
ம் புளகாங்கிதம் அடைந்த அன்பர் வயல் மேட்டிலிருந்த
ம் செய்யப்பட்டிருக்கும் கோயில் இருக்கும் இடத்தில்
ர்களும் 1880இல் அமைத்து நிர்வாக பொறுப்பை ஏற்றனர்.
2 இல் கும்பாபிஷேகம் செய்தனர்.
தம்பரப்பிள்ளை கனகசபை ஆலய நிர்வாகப் பொறுப்பை
தை நடத்தினார்கள். 35 ஆண்டுகள் இந்த ஆலயத்தை
மடைந்த பின்னர் அவரது மகன் வைத் திய கலாநிதி
ர்வாகப் பொறுப்பை ஏற்று 1974 இல் கும்பாபிஷேகத்தை
டய சிதம் பரப்பிள்ளை கந்தையா நிர்வாகப் பொறுப்பை
ர்கள். 1990 இல் இவர் சிவபதம் அடைய மூத்த மகன் கந்தையா
00 இல் இவர் சிவபதம் அடைய இளைய மகன் கந்தையா
று 2008 இல் கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். 2012
பொன்னம்பலம் உமாசங்கர் நிர்வாகப் பொறுப்பை ஏற்று
வரை ஆலயத்தில் சிறப்பான முறையில் நித்திய பூசைகள்

### தரேறி வருகிறான்



சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவன்
சைவர்கள் வழிபடும் பெருங் கடவுள் நம்
ிக்கடவுள். முருகு எனும் சொல்லுக்கு
கடவுளாகக் கொண்டனர் தமிழர்கள்.
கி வருகிறது. யாழ்ப்பாணம் ஈழத்து
வ பீடங்களில் ஒன்றாய் விளங்குவது
திக்கம் சிவசுப்பிரமணிய ஆலயம் புகழ்பெற்றது.
ரை உய்விப்பது. இவ்வாண்டில் நிகழும் தேர் உற்சவம்
க்கிறேன்.

கம்பவாரிதி இ. ஜெயராஜ்.

### ர்பார்களுக்கு அருள் புரிவீராக

கப்படும் இவ் விலங்காபுரியின் வடபால் சப்த தீவுகளின்
கோயில் கொண்டு எழுந்தருளிய திக்கரை முருகனின்
நாளான ரததோற்சவமான இன்று சண்முகப்பெருமான்
சிற்பத்தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்
ம வணங்குவோருக்கு நலமெல்லாம் நல்கும் சிறப்புத்
மணம் நடைபெறவும், குழந்தைப் பாக்கியம் கிட்டவும்,
சித்தால் போதும். தன் கருணை மிகு கடாட்சத்தினால்
ம் அழகுக் கந்தனாக விளங்குகின்றான். முருகனின்
களெல்லாம் நீங்கி சமாதானம் நிலவவும், மக்கள் சுபீட்
ம்பெயர்ந்து வெளியூரில் வாழும் முருகன் அடியார்களும்
ரண் புகுந்து அரிய பேரின்பப் பெருவாழ்வு வாழ்க.
இந்து இளைஞர் மன்றம், திக்கரை, களபூமி, காரைநகர்.

### தீயன அழிக்கும் முருகன்

சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் புண்ணிய பூமி யாம் காரைநகர் என்னும் நகரினிலே களபூமி திக்கரை என்னும் நாமத்துடன் வள்ளி தேவசேனா சமேதராக வீற்றிருந்து அருள் புரியும் கலியுக வரதப் பெருமானுக்கு பிரம்மோற்சவம் நடைபெற்றுத் தீய குறைகள் எல்லாம் அழிய முருகப் பெருமான் தேர் ஏறி வலம் வந்து பக்த அடியார்களுக்குத் திருவருள் புரிய நல் ஆசிகள் கிடைக்க எம் பெரு மானைப் பிரார்த் திப்போமாக.

*சர்வே ஜனாக சுகினோ பவந்து*

பிரதம குரு சிவஸ்ரீ செந்தில் நாத சுகுமாரக் குருக்கள்.

### ஆறுமுகப் பெருமானின் அருள் கிடைத்திட....



இலங்கையின் வடக்கே அமைந்துள்ள காரைநகரில் திக்கரை எனும் பகுதியில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டு இருக்கும் முருகமூர்த்தி ஆலய மகோற் சவத்தின் தேர்த்திருவிழாவில் இன்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் நேரில் ஆரோகணித்து அருள் புரிந்து கொண்டு இருக்கின்றார்.

காரையம்பதியின் கிழக்குப் பகுதியிலே இரு பெரும் மகோற்சவ ஆலயங்களில் ஒன்றான பஞ்சதள இராஜ கோபுரத்தை உடைய இந்த ஆலயமானது ஆனி அமாவாசையினை தீர்த்த உற்சவமாகக் கொண்டு விளங்குவது அதன் சிறப்பு அம்சமாகும். அழகுத் தெய்வமாகிய முருகப்பெருமான் தன்னை நாடி வரும் அடியவர்களுக் கெல்லாம் தீராத வினைகளை எல்லாம் தீர்த்துப் பெருவாழ்வு வாழ அருள் புரிகின்றார். இன்றைய தேர்த் திருவிழா உற்சவம் மூலம் மக்கள் அனைவரதும் துன்ப துயரங்கள் நீங்கி சுபீட்சமான வாழ்வு கிடைக்க திக்கரை முருகப் பெருமான் அருள்பாலிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

திருமதி தே.பாபு, பிரதேச செயலர், காரைநகர்.

### திக்கெட்டும் அருள் பரப்பும் திக்கரை முருகப் பெருமானே



சீர் பொங்கும் காரைநகர் என்னும் ஊரிலே திக்கரைக் கிராமத்திலே மூஇரண்டு சிரங் கொண்டு பன்னிரு கரங்களுடன் நீல மயிலேறி அருள்பாலிக்கும் முருகப் பெருமான் திருவிழாக்காணும் இந் நன்நாளில் வாழ்த்து வதில் நான் பேறு பெற்றவன் ஆகின்றேன். முருகு என்றால் அழகு. அழகே வடிவான எங்கள் திக்கரை முருகன் வள்ளி தெய்வானை யுடன் காரைநகர் மண்ணை என்றும் காத்து அருள் வழங்கி வருகின்றார். ஐங்கரன் தம்பி ஆறுமுகன் ஒளி ஊட்டி வருபவர். இன்னல்களை களை பவர். ஓம் என்ற உட்பொருளை உலகறிய தந்தைக்கே உபதேசம் செய்த சுவாமி நாதனே, கந்தனே, வேலனே. உன் நாமத்தை நினைக்க நினைக்க என் நாவில் தேன் ஊறுகிறதப்பா. உன் அருள் எங்கும் பரவட்டும் எல்லோரும் வாழ அருள் பாலிக்க வேண்டு கின்றேன் திக்கரை முருகப் பெருமானே.

*இவ் வையகத்தில் இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.*

கௌரவ V.கண்ணன், எதிர்க்கட்சித் தலைவர்,
பிரதேச சபை, காரைநகர்.

திக்கரை முருகன் தேர்த்திருவிழா பவனியில் முருகனின் ஆதிமூல மந்திரமான

### "ஓம் சரவண பவ" எனும் நாதம் ஒலிக்கட்டும்



முருகனின் ஷடாக்ஷர மந்திரம் " ஓம் சரவண பவ" இதனைத் தினசரி பலதடவை சொல்வதனாற் பல நன்மைகள் உள்ளன. சிவன், சக்தி, குமரன் முத்தெய்வங்களை வணங்கு வதாகிறது. இதனை ஆசி சங்கரர் 18 ஆவது சண்முகப் புயங்கத்தில் "மூவரும் ஏகநேரத்தில் தரிசனம் தந்து அருள் புரிந்து அறிவுத் தெளிவு, மேன்மை, சாந்தம், சற்குணம், புகழ் ஆகிய நலன்களும் கிடைக்கும் எனக் கூறியுள்ளார். குகனே, நான், புலன்கள் ஒடுங்கிய நிலையில் இருக்கும் போதும், நினை வாற்றல் அற்றபோதும், உடம்பை அசைக்க முடியாத போதும், கூற்றுவனாம் அறக்கடவுள் மேலான பயத்தால் உடல் நடுங்கும் போதும், இந்த உடலை விட்டு மேலுலகம் செல்லச் சித்தமாய் இருக்கும் போதும், நீ என்முன்பு பிரகாசமாய்த் தோன்றி இரட்சிக்கவேண்டும். இறுதிக் காலத் தில் இறைவன் நாமம் கூட நினைவுக்கு வராது. அந்நேரம் நாம் இறைநாமம் "ஓம் சரவணபவ" (பிரணவ மந்திரம்) சொல்ல குமரக் கடவுள் வரவேண்டும். ஆகையால் மனிதன் வாழும் காலத்தில் அவன் நாமம் சொல்லி வரவேண்டும். பகவத்கீதையில் "மரணகாலத்தில் பிரணவ மகா மந்திரத்தை உச்சரித்து வந்தால் மோட்சம் அடையலாம் என்று கூறப்படுகிறது. இதனைக் கந்தர் அலங்காரத்தில் 70 திருப்பாட்டில் 4 "பயந்ததனி வழிக்குத்துணை" "வடிவேலும் செங்கோடன் மயூரமுமே" " எனப் புலம்புகிறது.

இறுதி யாத்திரைக்கு அறக்கடவுளாம் கூற்று வன் நமது உயிரைக் கவரும் போது "யம பயம்" தனிவழிக்கு "வேலும், மயிலும், சேவலும் பயப்படாதே வா" என முருக பக்தர்களை அழைப்பான் என்பது அருணகிரிநாதர் வாக்கு.

குமர குருபர சுவாமிகள்
எழும்போதும் வேலும் மயிலும் என்பேன்
எழுந்தே மகிழ்ந்து தொழும்போதும் சேவலும் மயிலும் என்பேன்.
தொழுதே உருகி அழும்போதும் வேலும் மயிலும் என்பேன்
அடியேன் உடலம் விழும்போதும் வேலும் மயிலும் என்பேன்
திருச்செந்தூர் வேல் முருகனே திக்கரை முருகனே.

தமிழ்பக்திப் பாமாலைப் பாடல்
ஆறெழுத்தில் ஒரு மந்திரமாம்
அறுதினம் ஓதிடும் மந்திரமாம்
ஆறுதல் தந்திடும் மந்திரமாம்
சரவண பவ எனும் மந்திரமாம்.

ஆகையால் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக சுப்பிரமணியன் விளங்குகிறார். பிரணவத்துக்கு மேலான தத்துவம் இல்லை. சுப்பிரமணியருக்கு மேலான தெய்வம் இல்லை. (சுவாமிமலையில் சிவபெருமானுக்குக் குருவாக உபதேசம் செய்தவர்) சுப்பிர மணியரைப் பூஜை செய்தால் சகல தேவைகளையும் பூஜை செய்வதாக அர்த்தம்.

ஒருவன் வாழும் காலத்தில் மோட்சத்தை அடைய விருப்பம்கொண்டு சுப்பிரமணி யரை ஆராதனை செய்து வரவேண்டும். அவ்வாறு ஓயாமல் ஆராதனை செய்பவனே மகா புருஷன், மகா புண்ணியவான், மகா தபஸ்வி, மகா யோகி, மகா ஞானி எனவும் பலவாறு சொல்லப் படுகின் றான். முருகப் பெருமான் திருவடிகள் இக, பர, சுக போகத்தைத் தருபவர். ஈழத்திரு நாட்டில் காரைநகர், களபூமி, திக்கரை முருகன் ஆலய இரதோற்சவத்திற் கலந்து அவன் நாமம் " ஓம் சரவண பவ" எனக் கசிந்து உருகி ஓதி ஆறுமுகப் பெருமான் தேர் வடம் பிடித்து நாமும் அவனியல் பேரின்பம் பெறுவோமாக.

- க.கு.க. சிவபாலன்.

## ★★★★★★★ பிரசுர அனுசரணையாளர்கள் ★★★★★★★

RUBA VERSATILE TRADERS
104A,STANLEY ROAD, JAFFNA.

கிருஸ்ணா
அடைவுகடை
370, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

S.V.MURUGESU
154, HOSPITAL ROAD, JAFFNA.
Tel:021 222 8899

சண்முகன்
களஞ்சியம்
308, Hospital Road, Jaffna.

C.S.K.S
SIVA TRADERS
102, Hospital Road, Jaffna.
T.P.: 021 222 7926

பூபாலசிங்கம்
புத்தகசாலை
04, Hospital Road, Jaffna.
021 222 6693

பிள்ளையார்
களஞ்சியம்
இல.314,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கல்கமுவ
ஸ்ரோர்ஸ்
இல.133/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 0966, 077 183 6625

SVM
SVM (PVT) LTD
No.122, Dam Street, Colombo - 12
Tel: 011 - 4378677, 4378678,
2449512,2424392 Fax:2424391
SUGAR IMPORTER & DISTRIBUTOR
FOR FONTERRA LANKA (PVT) Ltd.
(ANCHOR)

N. P. K. TRADERS
NO. 30, OLD MOOR STREET,
COLOMBO - 12.
TEL: 011-2336432

வைகுந்தன்
களஞ்சியன்
280, Hospital Road,Jaffna.
T.P.021 222 2742

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
மொத்த கொள்வனவுக்கு வாகன வசதி உண்டு.
Nagaratnam&co.
Cycles, Cycle Parts & Electrical Goods.
இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்
52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3096, 021 222 7282


## சித்திரப் போட்டியில் முதலாமிடம்



மாகாண மட்ட சித்திரப் போட்டியில் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் நான்காம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவி கோகிலன் துலக்சினி முதலாம் இடத்தைப் பெற்றுபாடசாலைக்குபெருமை சேர்த்துள்ளார்.

முதன்முறையாக மாகாண மட்டத்தில் நடத்தப்பட்டுள்ள சித்திரப் போட்டி ஒன்றில் முதலாம் இடத்தைப் பெற்றமை பாடசாலை வரலாற்றில் இதுவே முதன்முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## சனி முதல் புதன்வரை மின் தடை



யாழ்ப்பாணம், ஜூலை 6

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும் உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் காலை 8.30- 5.30 மணிவரை சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

இன்று சனிக்கிழமை நவாலி, காக்கைதீவு, மூத்தவிநாயகர் கோயிலடி, கூழாவடி, சாவற்கட்டு, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதி ஆகிய இடங்களிலும்- நாளை ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி, புன்னாலைக் கட்டுவன், அச்செழு, ஈவினை, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, வல்லை, குஞ்சர் கடை ஒரு பகுதி, மண்டான் பிரதேசம், நவிண்டில், உடுப்பிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, கரந்தன், சிறுப்பிட்டி நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வி யங்காடு, நல்லூர், செம்மணி, நாவற்குழி, கைதடி, மறவன் புலோ, தச்சன்தோப்பு, மீசாலை, சாவகச்சேரியின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்-
8 ஆம் திகதி திங்கட்கிழமை அம்பன், குடத்தனைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-
10 ஆம் திகதி புதன்கிழமை அம்பன், குடத்தனைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

## கண்காட்சி

நாவற்குழி சிவமணி பாலர் பாடசாலையின் வருடாந்த மழலைகள் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாலர் பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் தி.தங்கவேலு தலைமையில் நடைபெறும். நிகழ்வில் தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா கலந்து கொள்வார். (ந)

## தொழில் நுட்பத்துறை புதிய பாடம் ஆரம்பம்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் புதிய பாடத்துறையான தொழிநுட்பக் கல்வித் துறை எதிர்வரும் 15 ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 6

நடைபெறவுள்ள இலங்கைக் கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்கான கல்வி நிர்வாக சேவை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்குக்கு ஏற்கனவே பதிவு செய்தவர்களை விட புதிதாகக் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 0779360607 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனப் பணிப்பாளர் பா. தனபாலன் தெரிவித்துள்ளார். (ந)

---

### 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
20.06.1983

ஆண்டவன் நிழலில்
10.07.2010

அமரர் **சரவணை தர்சிகா**

(குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சதுர்த்தசி

*எம் மனைவர் நெஞ்சினிலும் ஆண்டுகள் மூன்று கடந்தாலும்*
*தாண்டுமோ நின் பிரிவுத்துயர் எங்கள் வாழ்வின் குலவிளக்கே*
*உருகுகின்றோம் நிதமும் உன் பிரிவால் அன்புத் தெய்வமே –உமது*
*வரவுக்காய் சென்ற வழி பார்த்திருக்கின்றோம்*
*வேண்டுகின்றோம் உம் ஆத்ம சாந்திக்காக*

கைதடி தெற்கு, கைதடி. (38931)(6.11) குடும்பத்தினர்.

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் ஆராதனையும்



தோற்றம்
25.02.1950

மறைவு
05.06.2013

அமரர் **செல்லையா தங்கராசா**

கடந்த (05.06.2013) அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த **அமரர் செல்லையா தங்கராசா** அவர்களின் நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (06.07.2013) சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆராதனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.சூரியகலா - மனைவி, த.சுரேஸ் - மகன்,
த.கேதீஸ் - மகன், த.தினேஸ் - மகன்,
த.லாவண்யா-மகள், த.சரண்யா-மகள்,
சௌ.விகிந்தன்- மருமகன்

மீசாலை வடக்கு,
மீசாலை. (38921)(6.11)

---

### ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி **விஜயலெட்சுமி** (ஜெயா)
**தர்மராசா**

மலர்வு
20.08.1956

உதிர்வு
18.06.2012

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்.
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எம் துயரம்

திருச்சி - இந்தியா. (6. 10209)(45.6) குடும்பத்தினர்.

---

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பண்டிதர் அருணாசலம் செல்லத்துரை**
[ஓய்வு பெற்ற அதிபர்]

திதி: சதுர்த்தசி - 06.07.2013

மண்ணுலகம்
02.02.1923

விண்ணுலகம்
02.06.2009

*எங்கள் அன்புத் தெய்வமே எங்களைவிட்டுப்பிரிந்து*
*ஆண்டுகள் நான்கு கடந்தாலும் உங்கள் நினைவுகள்*
*என்றும் எங்கள் உள்ளத்தைவிட்டகலாது*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்*
*பிரார்த்திக்கின்றோம் - ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தகவல்: மனைவி
தொ.பே. 011 233 3588
(சி/10079) (45.6)

உங்கள் நினைவுகளுடன் வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்,

---

### ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



அமரர் டாக்டர்
**ஸ்ரீமதி இந்திராணி சத்தியநாதன்**

தோற்றம்
21.09.1940

மறைவு
03.06.2013

எமக்கொரு தாய்போல் தனக்கில்லையே என்று
இறைவன் அழைத்தானோ!
அந்த தாய்மையை தந்த இறைவன் கூட
இனியிந்த தாய்போல் வருவானோ!
காலம் யாவும் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்.

350, பலாலி வீதி,
ஊரெழு கிழக்கு, ஊரெழு.
(38928) (45.6)

குடும்பத்தினர்.

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் - 24.10.1928 மறைவு - 17.06.2012

அமரர்
**ஸ்ரீ முருகன்அருள் மார்க்கண்டு சுவாமிகள்**

எம்மை விட்டுப் பிரிந்து சென்று ஓராண்டு ஆனாலும்
மனதால் நாம் உங்களை விட்டுப் பிரியவில்லை
இவ்வுலகில் நாம் வாழும் வரை உங்களின்
நினைவுகளோடு வாழ்ந்திடுவோம்.

கடந்த (17.06.2012) இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று(06.07.2013) சனிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

லோட்டன் வீதி. மார்க்கண்டேயர் லேன்.
மானிப்பாய். (38926)(3.6)

குடும்பத்தினர்.

# இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் மூவர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மூவர் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன் அறிவித்துள்ளார்.

கோப்பாய் கோட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வி.பாலசுப்பிரமணியம் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையில் பிரதிக் கல்விப் (நிர்வாக) பணிப்பாளராகவும்–

யாழ். வலயக் கல்விப் பணிமனையில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் (கல்வி அபிவிருத்தி) கடமையாற்றிய எஸ்.சற்குணராசா கோப்பாய் கோட்டப் பணிப்பாளராகவும்–

நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய எஸ்.மாணிக்கராசா யாழ். வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் (கல்வி அபிவிருத்தி) பணிப்பாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். (ஒ-14)

## மரண அறிவித்தல்

### முத்தையா பரராஜசிங்கம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட சட்டத்தரணியும் யாழ்.பரியோவான் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியருமான முத்தையா பரராஜசிங்கம் அவர்கள் கடந்த ஜூன் 30 ஆம் திகதி 2013 சரே இங்கிலாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை முத்தையா- இளையாச்சி தம்பதியரின் அன்பு மகனும் குணேஷ்வரியின் பாசமிகு கணவரும், துஷ்யந்தி, ஜோய், டக்ஷினி, அஜன்தன், அர்ஜூனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்ஷன், நிரேன், அஜந்தக்குமார், டிலானி, ரெபேக்கா ஆகியோரின் மாமனாரும்,ஜோஷ்சுவா, செலீனா, அவினாஷ்,அஜனி, அஷ்னி, நேவா, லூக்A,லேயா,லூக்C,ஒலிவியா ஆகியோரின் நேசமிகு பாட்டனும், காலஞ்சென்றவர்களான முத்தையா- பொன்னுத்துரை, பாக்கியம்-விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஷ்வரி, சண்முகதாசன், காலஞ்சென்ற ராஜேஸ் வரி-கனகரத்தினம் மற்றும் தங்கேஸ்வரி ஸ்கந்ததாஸ், மங்களேஸ்வரி, மகேந்திர ரவிராஜ், செல்லப்பா அம்பிகைபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் நன்றிப்பலி ஆராதனை இன்று (06.07.2013) சனிக்கிழமை காலை 8 மணிக்கு St.Andrews Church,Northey Avenue (at The Avenue),Cheam,Surrey SM2 7HF இல் நடைபெற்று, நல்லடக்கம் Garth Road Cemetery, Garth Road, Morden, SM4 4NW வில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

47 Lloyd Road,Worcester Park,
Surrey, KT4 8SA
தொ.பே: + 44(0)7720 056922
மின் அஞ்சல்: gunesh.para@gmail.com

(38920)(5.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## சமய சந்நிதிகளில்

காரைநகர் களபூமி திக்கரை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

★ ★ ★

வரணி புராதன குருநாதர் ஆலய பொங்கல் திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறும். (ந-9)

★ ★ ★

துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. பெருந்திருவிழாவின் எட்டாம் நாளான 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், தொடர்ந்து 13 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந-8)

★ ★ ★

ஏழாலை-புங்கடி சொர்ணாம்பிகை அம்பலவாணேசுவரர் ஆலய பெருந் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி ஆலயத் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 2 மணிக்கு சங்காபிஷேகமும், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

## பரிசளிப்பு விழா

சங்கானை, ஜூலை 6
வட்டு மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறும். நிகழ்வில் வலி மேற்கு, பிரதேச செயலர் அ.சோதிநாதன் பிரதம விருந்தினராகவும், வட்டு இந்து வாலிபர் சங்க கொழும்புக் கிளைத் தலைவர் ந.பாலராமன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஒ)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானத்தில் அத்திபார சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க ஆர்வமுடையோர் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். பிராந்திய நிலையத்தில் அதற்கான விண்ணப்பப் படிவத்தினைப்பெற்றுக் கொள்ளலாம். (ந-14)

# மரண அறிவித்தல்

## சின்னையா தவரெட்ணம் (J.P)

(முன்னாள் தலைவர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம், யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைப் பணிப்பாளர் சபை உறுப்பினர், வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவர்)



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தவரெட்ணம் கடந்த (03.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பிலோமினா (றோஸ்)வின் அன்புக் கணவரும், Dr.திருமாறன், றதிமதி, Dr.மதிமாறன் (I.o.m) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.அனோமா, கெனியூட், Dr.மகிழ்நங்கை (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், புனிஸ்ரன், ஹேமந்த, பிரசாதினி, பிராங்கோ, திருநயனி ஆகியோரின் பாசமீகு பேரனும், சீவரட்ணம் (சிவம்), காலஞ்சென்ற அழகரட்ணம் மற்றும் சிவஞானரட்ணம் (ராசா), ஜெயரட்ணம் (கிளி), ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா (லில்லி), சேவியர் மற்றும் சின்னத்துரை (ஜேம்ஸ்), சின்னராசா (லக்ஸ்மாலா) புஸ்பராசா (ஜோசப்), சிவயோகம், மல்லிகாதேவி, மியூரியல், சிவஞானசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அலோசியஸ் அலெக்சாண்டர் (ஓய்வுபெற்ற அதிபர்), அல்வீனம்மா, செல்வி அலோசியஸ் சகாயமேரி ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிமரியாதைக்காக எரிஞ்ச அம்மன் கோயிலடி (வியாபாரிமூலை - பருத்தித்துறை) மயிலிட்டிச் சங்க மண்டபத்தில் நாளை மறுதினம் (08.07.2013) திங்கட்கிழமை காலை 7.00 - 8.30 மணிவரையும், அதன் பின்னர் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தில் முற்பகல் 11.00 - 11.30 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அங்கிருந்து எடுத்துச்சென்று மீண்டும் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். திரும்பவும் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 2.45 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு, குருநகர் கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பிற்பகல் 3.30 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியின் பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(2.6)(சி/10241) 83/11, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். T.P: 021 222 2563, 077 343 7167

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் முருகையா



யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் மார்க்கம், ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் முருகையா 03.07.2013 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற தம்பையா தம்பதியரின் அன்பு மருமகனும் அன்ன பூரணம் (சின்னக்கிளி) அவர்களின் அருமைக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சிவக்கொழுந்து, வள்ளியம்மை மற்றும் திருமதி தெய்வானை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனடாவில் வசிக்கும் சிவகுமாரன், கேமலதா, ராஜ்குமார், பிறேமலதா, நரேஷ்குமார், கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தினி, உமாபதி (உமா), காயத்ரி,ஜெயச்சந்திரன், குமர தாசன்(தாசன்), தர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரூரன், ஆதிரை, சங்கீத், சங்கவி,சஞ்சீவ், ரஜீத், கரிஸா, அனிகா, அபினா ஆகியோரின் அருமைப் பாட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.07.2013) சனிக்கிழமை Forest Lawn Mausoleum and Cremation Center, 4570 yong 5t,North york. on, M2N5L6 இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சிவா- 647 284 9132
நரேஷ் - 416 270 7458
உமா - 647 869 2441

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/10238)(5.6)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமலிங்கம் ஜெகதாம்பிகை



நயினாதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமலிங்கம் ஜெகதாம்பிகை (ஜெகதா)29.06.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து(சி.நா)- நாகலெட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், பரமலிங்கத்தின் அன்பு மனைவியும், வைகுந்தவாசன்(பிரான்ஸ்), பிறைசாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரியதர்சினி (பிரான்ஸ்), மனோகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பபிதா, சஜிதா, தீரன்(லண்டன்), கபிஷன், வினுஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சி.நா.முத்தையா, மதியாபரணம் மற்றும் சண்முகநாதன் (இந்தியா), நாகராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி, கனகாம்பிகை(கனடா), காலஞ் சென்ற பரமலிங்கம், சதாசிவம் மற்றும் ராஜலெட்சுமி(கனடா), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), சரஸ்வதி(ஜேர்மனி)ஆகியோரின் சகோதரியும், தவமணி (பிரான்ஸ்), செல்லம்மா(கனடா), கைலாசநாதன் (பரிஸ்டர்- கனடா), நித்தியலெட்சுமி(பிரான்ஸ்), குகநாதன்(ஜேர்மனி), காலஞ்சென்ற மார்க்கண்டு, முருகேசபிள்ளை, சந்திரசேகரம், இலட்சுமி யம்மா, யோகம்மா மற்றும் தங்கம்மா(இந்தியா), அமுதவல்லி ஆகியோ ரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2013) ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00மணிக்கு நயினாதீவு சல்லிவரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு -08
(021 300 1909, 021 300 1910)

தகவல்:
பொ.பரமலிங்கம்(சிவங்கண்டு-கணவர்)

(சி/10245)(5.6)

# மரண அறிவித்தல்

## அருட்செல்வம் பிரசன்னா (Nick)

(Director - Trio Management Limited, UK) (Former Manager, Tessco UK)



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட அருட்செல்வம் பிரசன்னா கடந்த (06.06.2013) லண்டனில் காலமானார்.

அன்னார் வேலணை மேற்கு வாதவூரர் அருட்செல்வம் (உரிமையாளர் NSPS, கொழும்பு - 11)- புவனேஸ்வரி தம்பதியரின் மகனும், சுண்டுக்குழி, பாண்டியன்தாழ்வைச் சேர்ந்த சயந்தி பிரசன்னாவின் அன்புக் கணவரும், பிரணவ் அருள் அவர்களின் தந்தையும், குணரட்ணம் வரதராஜா (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி நிறைவேற்று அதிகாரி)- இந்திராதேவி தம்பதியரின் மருமகனும், அனுஷா (USA), உதயணன் (UK), யாழினி, சிவகஜன் (N.S.P.S., V.A.S. Distributors) ஆகியோரின் சகோதரனும், சுரேந்திரன் (USA), யாழினி (UK), யூட் பிரணவன் (UK), சிந்துஜா, கீதன் ஆகியோரின் மைத்துனரும், பிரவீன் (USA), சஜீவன் (USA) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2013) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் வெள்ளவத்தை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

51,1/2, கொலிங்வூட் இடம், கொழும்பு- 06

(2.6)(சி/10083)

குடாநாட்டில் கடந்த இரண்டு வருடங்களில்

## காசநோய் தாக்கத்தால் 25 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் ,ஜூலை 6
யாழ். குடாநாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் காசநோயின் தாக்கத்தினால் 25 பேர் உயிரிழந்துள்ளதாக மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:
கடந்த இரண்டு வருடங்களில் 25 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது கவலைக்குரியதே. இவர்கள் அனைவரும் காசநோயினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள். இருப்பினும் இவர்களுக்கு முழுமையான சிகிச்சைகள் வழங்கப்பட்டன. நோய் முற்றியதால் அவர்களின் உயிரிழப்பு தவிர்க்க முடியாது போய்விட்டது.

காசநோயைக் கட்டுப்படுத்தவும் அதை முற்றாக இல்லாதொழிக்கவும் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டும் வருகின்றது. இந்தநிலையில் காசநோய் தாக்கத்துக்கு உள்ளானவர்கள் என இனங்காணப்படுபவர்கள் உரிய வகையில் சிகிச்சை பெறுவது அவசியமானதாகும். அவர்களின் ஒத்துழைப்பு இல்லை என்றால் நோயைக் கட்டுப்படுத்த முடியாது. குறிப்பாக சளிப்பரிசோதனை, அதற்கான சிகிச்சை போன்றவற்றினை ஒழுங்காகக் கைக்கொள்ள வேண்டும்.

காசநோயை இல்லாது ஒழிக்க மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது- என்றார். (ஐ-17)

குறிகாட்டுவான் கடற்படையினரின் கெடுபிடியால்

# கூட்டுறவுச் சங்கப் படகு நிறுத்தி விட்டது சேவையை

யாழ்ப்பாணம், ஜூலை 6
குறிகாட்டுவானில் உள்ள கடற்படையினரின் நடவடிக்கை காரணமாக நெடுந் தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்பயணிகளுக்கானபடகுச் சேவையை நிறுத்திக்கொண்டது. இதனால் நெடுந்தீவு படகுச் சேவையில்பாதிப்புஏற்படலாம் என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வழமை போன்று கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவில் இருந்து பயணிகளுடன் வந்த சங்கப் படகு சமுத்திரதேவா பிற்பகலில் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குப் புறப்படுவதற்காக பயணிகளை ஏற்றியபோது கடற்படையினர் பயணிகளை ஏறவிடாது தடுத்தனர். படகை வெறுமனே அனுப்பி வைத்துள்ளனர். மறுநாள் புதன்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலரும் கடற்படையினரும் குறிப்பிட்ட படகில் பயணிகளை காலையில் ஏற்றிச் செல்ல அனுமதித்ததையடுத்து குறிகாட்டுவானுக்கு பயணிகளுடன் சென்ற படகு மீண்டும் 3.30 மணிக்கு நெடுந்தீவுக்குப் புறப்பட ஆயத்தமானபோது அங்குள்ள அதிகாரிகள் படகில் இருந்த பயணிகளைத் தாறுமாறாக ஏசியதுடன், உங்களை யார் ஏறச் சொன்னது எனக்கேட்டு பயணிகளை இறக்கி வடதாரகையில் 5 மணிக்குஅனுப்பிவைத்தனர்.

நெடுந்தீவுக்கான சங்கப் படகு, அரச படகுகள் செயலிழந்து கிடக்கும் காலங்களிலும், பலத்த கடல் கொந்தளிப்பு காலங்களிலும் பயணிகள் சேவைக்காக அனுமதிக்கப்பட்டது. தற்போது அதில் பயணிகள் செல்லமுடியாதென புங்குடுதீவில் உள்ள கடற்படையினரும் பொலிஸாரும் மக்களை அச்சுறுத்தி பலவந்தமாக இறக்குவது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொருள்களை ஏற்றும் படகுகளில் பயணிகளைச் செல்ல அனுமதிக்கும் குறிகாட்டுவானில் உள்ள அதிகாரிகள் சங்கப் படகில் பயணிகளை அனுமதிக்காதது ஏன் எனக் கேட்கின்றனர்.

பயணிகளை சங்கப் படகு ஏற்றிச் செல்ல நெடுந்தீவு பிரதேச செயலர், கடற்படையினர் தமது அனுமதிகளை வழங்கி சேவையைத் தடங்கலின்றி நடத்த ஒத்துழைப்பை வழங்குகின்றனர். குறிகாட்டுவானில் உள்ள பொலிஸாரும் படையினரும் மறுப்பது ஏன் என்று புரியாதிருப்பதாகவும் சங்கத்தினர் கூறுகின்றனர். இதனால் வேறு வசதியின்றி தனது பயணிகளுக்கானபடகுச்சேவையை சங்கம் நிறுத்தியுள்ளது. (எ-7)

## விபத்தில் லாண்ட்மாஸ்ரர் சாரதிக்கு கால் முறிந்தது

தென்மராட்சி, ஜூலை 6
கிடுகு ஏற்றிச் சென்ற லாண்ட்மாஸ்ரர் வாகனமும், யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் லாண்ட்மாஸ்ரர் சாரதிக்கு கால் முறிந்தது. லாண்ட்மாஸ்ரர் பலத்த சேதத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5 மணிக்கு நுணாவில் ஏற்றத்தடியில் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த சாவகச்சேரி பெரிய அரசடியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் நித்தியானந்தம் (வயது-62) என்பவர் பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பஸ் சாரதியை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். அவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (வ-9)



யாழ்.மறை மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் 75 ஆவது ஆண்டு பிறந்த தின நிகழ்வு கடந்த 3ஆம் திகதி யாழ்.ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. பாடசாலை மாணவர்களின் பான்ட் இசையுடன் ஆயர் மற்றும் பங்குத் தந்தையர்கள் வரவேற்கப்பட்டு, யாழ்.பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (ஒ-14)

## செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பழைப் பிரிவில் சிரமதானம்

தென்மராட்சி, ஜூலை 6
தேசிய டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பழைப் பிரிவினர் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் சுகாதாரத் தொண்டர்கள், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் , பொது அமைப்புகள் ஆகியவை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருவதாக தெல்லிப்பழை பிரிவு செயலர் சி.நாகேஸ்வரன் தெரிவித்தார். (வ-9)



## நடமாடும் சேவை



வலி.வடக்கு, ஜூலை 6
உடுவில் பிரதேச செயலர் பிரிவில் நேற்று முன்தினம் இடம்பெற்றநடமாடும் சேவையில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டபொதுமக்கள்நன்மை அடைந்துள்ளனர்.

பவ்ரல் அமைப்பு, ஒபா அமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை குறித்த பிரச்சினைகள் மற்றும் உத்தேச வயது சான்றிதழ் வழங்குதல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எட்டப்பட்டன. (வ-86)

## மாவட்ட ரீதியில் முருங்கைக் கன்றுகளை உற்பத்தி செய்து வழங்க நடவடிக்கை

அச்சுவேலி, ஜூலை 6
கறி முருங்கை கன்றுகளை மாவட்ட ரீதியில் உற்பத்தி செய்து பயனாளிகள், விவசாயிகளுக்கு வழங்க வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் முன்வந்துள்ளது.

இந்த வகையில் மாவட்டத்துக்கு பொறுப்பான விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தில் நடைபெற்றது.

வட மாகாணத்தில் உள்ள மாவட்டங்களுக்குத் தேவையான கறிமுருங்கை கன்றுகள் வெளிமாவட்டத்தில் இருந்து எடுத்துவரப்பட்டே பயனாளிகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.



கறிமுருங்கை விதை முளைதிறன் வீதம் அதிகமானது. அதனை வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்துவருவதில் கணிசமான அளவு தொகை செலவாகின்றது. நாற்றுக்களை கொள்வனவு செய்தல், அதனை பொருத்தமான முறையில் ஏற்றி இறக்குவது தொடர்பான செலவு, அதனை பொருத்தமான முறையில் களஞ்சியப்படுத்தி பாதுகாத்தல் என்பன பெரியளவில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதோடு ஏற்றி இறக்கும் போதும் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தும் போதும் கணிசமான அளவு நாற்றுக்கள் சேதமடைந்து விடுகின்றன.

வறண்ட பிரதேச கால நிலைக்குரிய கறிமுருங்கை நாற்றுக்களை மாவட்ட ரீதியில் உற்பத்தி செய்வதன் மூலம் நாற்றுக்கள் சூழ்நிலைக்கு ஏற்ப இசைவாக்கம் பெற்று இயல்பு நிலையில் வளர்வதோடு நோய் தாக்கத்துக்கு உள்ளாகமல் வளரக்கூடியதாக இருக்கும்.

எனவே மாவட்ட ரீதியில் கறிமுருங்கை நாற்றுக்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வருட கால போகத்தை அண்டிய காலப் பகுதியில் கறிமுருங்கை நாற்றுக்கள் மாவட்ட ரீதியில் உற்பத்தி செய்து காலபோக இறுதிப் பகுதியில் நடுகை செய்வதற்கு வசதியாக விநியோகிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தனியார் துறையினர் கறிமுருங்கை நாற்றுக்களை தனித்துவத்தோடு தமது விருப்பத்துக்கு ஏற்ப உற்பத்தி செய்து ஒரு கன்று 90 ரூபாவுக்குக் குறையாத விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். (வ-11)

## நினைவு நிகழ்வு


கிளிநொச்சி, ஜூலை 6
கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபர் கந்தையா பொன்னம்பலத்தின் நினைவாக தமிழ் இலக்கிய கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.
கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த தமிழ் இலக்கிய கருத்தரங்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறும்.
இதில் நினைவுரையை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.
நிகழ்வில் முன்னாள் அரச அதிபரின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஜ-6)

# மக்களின் பாவனையில் உள்ள வீதிகளுக்கு மீண்டும் திறப்பு விழா

## அமைச்சரின் செயலுக்கு கடும் விசனம்

மன்னார், ஜூலை 6
ஏற்கனவே மக்களின் பாவனையில் உள்ள வீதிகள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் ஏற்பாட்டில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட சம்பவம் மன்னாரில் நிகழ்ந்துள்ளதாக மன்னார் நகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினரான இரட்ணசிங்கம் குமரேஸ் கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்:-
மக்களை ஏமாற்றி வாக்குகளைச் சுவீகரிக்கும் படலம் தொடர்கின்றது. வரவிருக்கும் மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு போலித்தனங்கள் ஆரம்பமாகியுள்ளன. இதன் முதல்கட்டமாக ஏற்கனவே ஒரு வருடத்துக்கு மேலாகப் பாவனையில் உள்ள வீதிகள் துப்புரவு செய்யப்பட்டு, சோடிக்கப்பட்டு புதிதாகத் திறக்கப்படுகின்றன. இதனை வழமை போன்று தேர்தல் காலங்களில் செய் யும் அமைச்சரே முன்னின்று மேற்கொள்கின்றார்.
ஆனால் இது தொடர்பாக நகர பிரதேச சபைகளிடம் அனுமதி பெறப்படாததோடு மக்கள் பிரதிநிதிகளுக்கும் அறிவிக்கப்படக்கூட இல்லை. குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள சபைகளின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் போலியான வித்தைகளை அமைச்சர் மேற்கொள்கின்றார்.
மடுமாதா திருவிழா தினத்தன்று தனது வருகைக்காக மக்களை பல மணி நேரம் காக்க வைத்து தனது தேர்தல் கபட நாடகத்தை நடத்தி முன்னரே பாவனையில் இருந்த வீதிக ளைத் திறந்து மக்களை விசனமடையச் செய்த இந்த அமைச்சரின் செயல் கண்டனத்திற்குரியது. இவை மாத்திரமல்ல வேலை வாய்ப்புக்களிலும் தகுதியான ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் இருக்கையில் தகுதியில்லாத தனக்கு தேர்தலில் வேலை செய்தவர்களுக்கு மட்டுமே சமுர்த்தி மற்றும் சிற்றூழியர் நியமனங்களை வழங்கியுள்ளார்.
இத்தகைய செயல்கள் அனைத்து மக்களையும் விசனமடையச் செய்துள்ளது. மக்களின் வரி பணத்தின் மூலமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் வழங்கும் உதவிகள் மூலமும் மேற் கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளைத் தனது தய வில் கிடைத்தது போன்று காட்ட முற்படும் அமைச்சருக்கு தாம் முட்டாள்கள் இல்லை என்பதை நிரூபிப்பதற்கும், தம்மை ஏமாற்றியவர்களை ஏமாற வைப்பதற்கும் மக்கள் தயாராகிவிட்டார்கள் என்பதை அமைச்சருக்கு கூறி வைக்க விரும்புகின்றேன் -என்றுள்ளது.
(க-12)

“ மக்களை ஏமாற்றி வாக்குகளைச் சுவீகரிக்கும் படலம் தொடர்கின்றது. வர விருக்கும் மாகாண சபைத் தேர் தலை முன்னிட்டு போலித் தனங்கள் ஆரம் பமாகியுள்ளன.



## பெற்றோர் திறன் விருத்தி தொடர்பான கருத்தரங்கு வவுனியாவில்

வவுனியா, ஜூலை 6
வவுனியா மாவட்ட சிறுவர் அதிகார சபையினரால் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.
தெரிவு செய்யப்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் 5 வயதுக்குக் குறைவான பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு பெற்றோர் திறன் விருத்தி என்னும் தலைப்பில் இந்த விழிப்புணர்வு கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.
எதிர்வரும் 11 ஆம் திகதி புளியங்குளத்திலும், 12 ஆம் திகதி வேப்பங்குளத்திலும், 13 ஆம் திகதி குளவிசுட்டானிலும், 19 ஆம் திகதி தவசிக்குளம் பகுதியிலும் இந்தக் கருத்தரங்குகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
எனவே குறிப்பிட்ட திகதிகளின் பிரகாரம் குறிப்பிட்ட இடங்களில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பெற்றோர்கள் சமுகம் தந்து பயன் பெறுமாறு வவுனியா மாவட்ட சிறுவர் அதிகார சபையின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரி.செல்வகுமார் தெரிவித்துள்ளார். (க-421)



வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் கழகத்தினால் மர நடுகைச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. (க-402)

## காட்டு மரம் கடத்தும் முயற்சி முறியடிப்பு

கிளிநொச்சி, ஜூலை 6
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு சிறாட்டி குளத்தை அண்மித்த பகுதியில், சட்டவிரோதமான முறையில் காட்டு மரங்களைக் கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டது.
மேலும் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மரங்களும் மாங்குளம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:
சிறாட்டிகுளம், மூப்பன்குளம் பகுதியில் காட்டு மரங்கள் வெட்டப்பட்டு வருவதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலருக்குக் கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற மாந்தை கிழக்கு பிரதேச செயலர் மற்றும் சிறாட்டிகுளம் கிராம அலுவலர் ஆகியோர் மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.
இந்த நிலையில் அங்கு சென்ற பொலிஸார் வெட்டப்பட்ட நிலையில் கிடந்த பாலைமரங்களைக் கைப்பற்றினர். எனினும் சந்தேகநபர்கள் சிக்கவில்லை.
கைப்பற்றப்பட்ட, மரங்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-6)

## ஆலய விக்கிரகம் திருட்டு

வவுனியா, ஜூலை 6
வவுனியா முருகனூர் சந்தியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் விக்கிரகம் ஒன்று திருட்டுப் போயுள்ளது. அப்பகுதி மக்கள் தெரிவித்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் விக்கிரகத்தைக் கண்டுபிடிப்பதற்கான தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.
மேலும் இப்பகுதியில் புதையல் இருப்பதாகத் தெரிவித்து புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட சிலர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
விக்கிரகம் திருட்டுப் போன சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிய வருகின்றது. (க-402)

## நுளம்பு ஒழிப்பு வாரத்தையொட்டி சிரமதானப் பணிகள்

வவுனியா, ஜூலை 6
தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வவுனியா வடக்குப் பிரதேச செயலக சமுர்த்தி அலுவலகத்தினரால் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
நேற்று முன்தினம் 4 ஆம் திகதி புளியங்குளம் தெற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் பொது மக்களும் இணைந்து புளியங்குளம் தனிநாயகம் அடிகளார் வித்தியாலயம் மற்றும் பழையவாடி கிராமங்களில் ஏற்பாடு செய்திருந்த சிரமதானத்தில் மக்கள் ஈடுபட்டதுடன் நுளம்பு பரவக்கூடிய இடங்களை அழிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டிருந்தனர்.
வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமனின் ஆலோசனைக்கமைய நெடுங்கேணி சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி கே.ஜீவலதா தலைமையில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பரவலாக இடம்பெற்று வரும் சிரமதான நிகழ்வுகளில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
(க)

## மோசமான நிலையில் பூந்தோட்டம் வீதிகள்

வவுனியா, ஜூலை 6
வவுனியா பூந்தோட்டம் செல்லும் வீதியும், பூந்தோட்டத்திலிருந்து மகாறம்பைக்குளம் செல்லும் வீதியும் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.
பூந்தோட்டம் சந்தியிலிருந்து, பூந்தோட்டம் பாடசாலை மற்றும் நரசிங்க ஆலயம் ஆகியவற்றுக்குச் செல்லும் வீதி சேதமடைந்து மோசமான நிலையில் காணப்படுகின்றது.
இதேவேளை பூந்தோட்டம் சந்தியிலிருந்து மகாறம்பைக்குளம் பாடசாலை, மகாறம்பைக்குளம் வீட்டுத் திட்டம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் வீதியும் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.
உரியவர்கள் இதில் கவனம் செலுத்துவதுடன் இந்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
(க-421)

# '13' சர்ச்சைக்கு மத்தியில் பஸிலின் பயணமும் மேனனின் வருகையும்

*அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களைக் மேற்கொள்வதவற்கு அரசு தீவிர நடவடிக்கைளை மேற்கொண்டு வரும் நிலையில், இவ்விவகாரம் தொடர்பில் பல்வேறு மட்டங்களிடையே காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக அரச தரப்பிலும் அமைச்சர்கள் இரு பிரிவுகளாக பிரிந்து நின்று ஆதரவாகவும் எதிராகவும் குரலெழுப்பி வருகின்றனர். பல்வேறு போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடந்தேறிய வண்ணமுள்ளன.*

*இவ்வாறானதொரு சூழ்நிலையில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் இந்திய பயணமும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் இலங்கை வருகையும் பல்வேறு கேள்விகளை - சந்தேகங்களை எழுப்பியுள்ளன.*

*இரு நாட்டு முக்கியஸ்தர்களின் பயணங்களும் 13 விடயத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று ஆளும், எதிரணி அரசியல் பிரமுகர்கள் தெரிவித்த சூடான கருத்துகள் வருமாறு:*

## திருத்தம் கொண்டுவர அனுமதியோம்

**– பொன்.செல்வராசா**



இந்தப் பணங்களின் போது '13' ஆவது திருத்தச்சட்டம் குறித்து முக்கிய பல விடயங்கள் ஆராயப்படலாம். குறிப்பாக நாங்கள் அண்மையில் இந்தியா சென்று உயர்மட்டக் குழுவைச் சந்தித்திருந்தோம். 13 ஆவது திருத்தச் சட்த்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதை ஏற்க முடியாதென அங்கு வலியுறுத்தினர்.

யார் என்ன கருத்துத் தெரிவித்தாலும் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறோம். 13ஆவது திருத்தச் சட்டத்தில் அல்ல, அதன் ஏனைய சரத்துகளிலேனும் திருத்தம் கொண்டுவர சம்மதிக்கமாட்டோம். இந்தியாவிலும் இந்த ஒப்பந்தத்தையே மேற்கொண்டோம் என்று கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்செல்வராசா.

## துணிச்சலாக செயற்படுமா இந்தியா?

**– கே.வேலாயுதம்**



13 ஆவது திருத்தச்சட்ட விவகாரம் தொடர்பில் இந்தியா சொல்வதை கேட்கவேண்டிய அவசியமில்லை என்று அரச அதிகாரியான பாதுகாப்புச்செயலர் கருத்து வெளியிட்டுள்ளார். அன்று இரு நாடுகளும் இணங்கியே 13 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்தன. இன்று அதற்கு எதிராக கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

எனவே, டில்லி அரசு , இது தொடர்பில் பஸிலிடம் விளக்கம் கோரலாம் எனக் கூறப்படுகின்றது. எனினும், 13 விடயத்தில் மௌனம் காத்துவரும் இந்தியா துணிச்சலுடன் ஒரு முடிவை எடுக்குமா என்பது சந்தேகமே என்று கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தவிசாளரும் ஊவா மாகாணசபை உறுப்பினருமான கே.வேலாயுதம்.

## அரசுக்குச் சாதகம் இல்லை

**– பிரபா கணேசன்**



இந்தப் பயணமானது இலங்கை அரசுக்கு ஒருபோதும் சாதகமாக இருக்கப்போவதில்லை. தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறவே நாம் போராடுகின்றோம். அவர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தமது பயணத்தில் சொல்ல விருப்பது, ''பௌத்த சிங்கள மக்களின் எதிர்ப்பு வலுப் பெறுகிறது. அதனைச் சமாளிக்க 13ஆவது திருத்தத்தில் ஒருசில சரத்துகளில் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும்'' என்பதேயாகும். எனவே, இது அரசுக்குச் சாதகமாக அமையாது என்று தெரிவித்தார் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன்.

## அரசுக்குப் பாதிப்பு ஏதும் வராது

**– அஸ்வர்**



இந்தப் பயணங்கள் நிச்சயமாக ஒரு நல்ல பிரதிபலனையே வழங்கும். இரு தோழமையான நாடுகளிடையே உள்ள உறவை மேலும் பலப்படுத்தும் பயணமாக அமையும். 13ஆவது திருத்தச் சட்டத்தில் அரசுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலேயே இது அமையும். இந்தப் பயணத்தில் இரு நாட்டுக்குமான உறவைப் பலப்படுத்த, பொருளாதாரத் தொடர்புகளை வலுப்படுத்துவது தொடர்பாக பேசுவார்கள்.

தமிழ்நாட்டிலும் நல்ல சாதகமான நிலையே காணப்படுகிறது. தப்பான பிரசாரங்கள் தணிந்துவிட்டன என்றார் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர்.



பத்தரமுல்லை வோட்டஸ் ஏஜ்ஜின் நீர்ப்பரப்பிலிருந்து சினமன் எயார் நிறுவனத்தின் முதலாவது சீபிளேன் விமான சேவையை பாதுகாப்புச்,செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தபோது...

# இனவாதத் தீயை நிறுத்த வேண்டும்

### அமைச்சர்களுக்கு வாசுதேவ அறிவுரை



> நாட்டில் இன மற்றும் மதவாத தீயை ஏற்படுத்துவதை அமைச்சர்கள் அனைவரும் நிறுத்தி கொள்ள வேண்டும்.

கொழும்பு,ஜூலை 6
நாட்டில் இனவாத தீயை ஏற்படுத்தும் அமைச்சர்கள் அதை நிறுத்த வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசில் இருக்கும் அமைச்சர்களுக்கு இடையில், நாட்டுக்குள் இனவாதம் மற்றும் மதவாத தீயை அணைப்பதற்காக நேர்மையாக முயற்சிப்பவர்கள் 50 வீதமானவர்களே என்று அவர் தெரிவித்தார்.

ஏனையவர்களில் பெருபாலானவர்கள், இனவாத, மதவாத செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் அதற்கு ரகசியமான முறையில் பங்களிப்பு செய்து வருகின்றனர் என்று அவர் கூறினார்.

தமது இனம் மற்றும் மதம் தொடர்பில் கொண்டுள்ள குருட்டுத்தனமாக பக்தி காரணமாவே அவர்கள் அவ்வாறு செயற்பட்டு வருகிறார்கள்.

இது நாட்டுக்குள் தேவையற்ற வன்செயல்கள் ஏற்பட வழிவகுக்கும் என்று அவர் குறிப்பிட்டார். நாட்டில் இன மற்றும் மத வாத தீயை ஏற்படுத்த தாம் தெரிந்தோ, தெரியாமலோ உதவி வரும் அமைச்சர்கள் அனைவரும் தற்போதாவது நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (ச)

# இடர் அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஜூலை 6
கடந்த ஜூன் மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற இயற்கை இடரால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடைமை இழப்புகள் தொடர்பாகவும்– அவை ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றியும் ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வியாழக்கிழமை கையளித்தது.

காலநிலை விவகாரம் குறித்தான மேற்படி விசாரணைக் குழுவின் தலைவராக வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கலாநிதி ஏ.டபிள்யூ. மொஹொட்டல் நியமிக்கப்பட்டிருந்தார்.

சீரற்ற வானிலை தொடர்பில் தகவல்களை வழங்கும் பொறுப்பிலுள்ள நிறுவனங்களின் தகவல்கள், 30 பேரிடம் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலம் ஆகியன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



இடர் முகாமைத்துவ நிலையத்தின் மாவட்ட உத்தியோகத்தர்களிடம் குறித்த குழு வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

# பஸ் - ஜீப் மோதியதில் 29 பேர் காயம்




காலி, ஜூலை 6
அஹங்கம, கத்தளுவ சந்தியில் வெள்ளிக்கிழமை காலை ஜீப் ஒன்று பஸ்ஸுடன் மோதியதில் 29 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தென் மாகாண சபை உறுப்பினர் அருண குணரத்ன பயணித்த ஜீப், ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் பெண் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸுடன் மோதியுள்ளது.

# வீட்டில் திடீர் தீ; தந்தை, மகன் சாவு



நீர்கொழும்பு, ஜூலை 6
நீர்கொழும்பு - கிம்புலாபிட்டிய பகுதியில் பட்டாசு உற்பத்தி செய்யும் வீடொன்றில் திடீரென பரவிய தீயால் தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# எகிப்தின் ஆட்சி மாற்றம் தொட்டுக் காட்டும் ஆபத்து

தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எகிப்திய ஜனாதிபதி முகம்மது முர்சி இராணுவப் புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டுள்ளார். உயர் நீதிமன்ற நீதிபதி மகர் எல் பெஹய்ரியை இடைக்கால ஜனாதிபதியாக இராணுவத் தளபதி அபாடல் அல் சிசி பிரகடனப்படுத்தி உள்ளார். அத்தோடு அந்த நாட்டின் அரசியல் சாசனமும் ரத்துச் செய்யப்பட்டு விட்டது. நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே இராணுவத்தினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தளபதி அபடெல் அறிவித்துள்ளார்.

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் இராணுவப் புரட்சியின் மூலம் பதவி நீக்கப்பட்ட பின்னர், ஜனநாயக முறைமையின் பிரகாரம் நடைபெற்ற தேர்தலிலேயே முகம்மது முர்சி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

முர்சி தாம் ஜனாதிபதி என்ற வகையில் அனைத்து அதிகாரங்களையும் தமது வசம் வைத்திருக்க முயற்சிக்கிறார் என்று தெரிவித்து எதிர்க்கட்சிகள் போராட்டங்களை நடத்தி வந்தன.

எதிர்ப்புப் போராட்டங்கள் வன்முறைகளாக மாறின. தமக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்களை இராணுவத்தைக் கொண்டு அடக்குவதற்கு முற்பட்டார் முர்சி. அதன் போது உயிரிழப்புகள் பல உண்டாகின. அதனை இராணுவத்தினர் சாதகமாக்கிக் கொண்டு புரட்சி நடத்தி அவரைச் சிறைப்படுத்தினர்.

முர்சிக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் போது அரசியல் சீர்திருத்தமே பிரதான கோரிக்கையாக இருந்தது. கடந்த திங்களன்று இந்தப் பிரச்சினையில் தலையிட்ட இராணுவம், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு முர்சிக்கு 48 மணிநேர அவகாசம் வழங்கியது. இராணுவம் வழங்கிய காலக்கெடுவை முர்சி நிராகரித்தார்.

1952 இல் பாரூக் மன்னர், இராணுவப் புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டது தொடக்கம் எகிப்திய அரசியலில் இராணுவம் கணிசமான செல்வாக்குச் செலுத்திவருகிறது. 1956 சூயஸ் போர், 1967 மத்திய கிழக்குப் போர், 1973 யொம் கிப்பூர் போர் எனப் பல போர்களில் ஈடுபட்டுக் கைகண்ட எகிப்திய இராணுவம், முபாரக்கின் காலம்வரை ஆட்சித் தலைவர்களுக்கு விசுவாசமாகவே செயற்பட்டுவந்தது.

முபாரக்கின் வீழ்ச்சியின் பின்னர் இராணுவத்தின் நிலைப்பாடு மாறிவிட்டது. சுமார் ஒன்றரை வருடகாலம் தேர்தலை நடத்தாது நாட்டில் அதிகாரம் செலுத்தியதும், ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முர்ஸியின் ஆட்சியைக் கவிழ்த்ததும், பாகிஸ்தானை ஒத்ததாக எகிப்திலும் இராணுவம் ஆதிக்கம் செலுத்தும் ஆபத்து உருவாகி உள்ளது. இராணுவம் விரும்பிய நேரம் ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என்றால் அங்கு ஜனநாயகம் நிலவ, நீடித்த வாய்ப்பு இருக்காது.

எகிப்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை. மக்கள் எழுச்சிப் போராட்டங்களின்போது இடம்பெற்ற உயிரிழப்புகளுக்கு நீதி வழங்கப்படவில்லை. பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு வறிய மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது போன்ற குற்றச்சாட்டுகளே முன்வைக்கப்பட்டிருந்தன. ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகி மிகக் குறுகிய காலத்துக்குள் இராணுவத் தலையீடு ஏற்பட்டிருப்பதும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் பதவிநீக்கம் செய்யப்பட்டிருப்பதும் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளன.

நவீன எகிப்தின் சிற்பி எனக் கொள்ளப்படும் அப்துல் நாஸரால் தடைசெய்யப்பட்டிருந்த முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் தூண்டுதலும், ஜனநாயக வழி செயற்பட முனைந்த முகமது முர்சியின் ஆட்சிக் கவிழ்ப்புக்கு தூண்டுகோலாக அமைந்துள்ளதாகக் கருதமுடிகிறது.

எப்படியோ, ஆட்சி அதிகாரங்கள் தங்கள் வசம் பெருகப் பெருக, ஜனநாயக நாடுகளின் தலைவர்கள் சர்வாதிகாரிகளாக மாறுவது, மாற முயல்வது, புதிய ஜனநாயக அரசியல் நாகரிகமாக மாறும் தோற்றம் கண்டு வருகிறது. இந்த ஆபத்து ஆசிய நாடுகள் உட்பட பல பிராந்தியங்களில் பெருகி வருவதையே எகிப்தின் மாற்றம் தொட்டுக் காட்டுகிறது.

# இறுதி வரை தமிழீழக் கொள்கையில் உறுதி தளராத போராளி பிரபாகரன்

ஈழப் படுகொலைகள் நடந்து முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நிலையில், காலத்தாலும் அது கொடுத்த படிப்பினைகளாலும் பொ.சத்தியசீலன் முக்கியத்துவம் பெறுகிறார். 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்தில் அனைத்து ஆயுதக் குழுக்களும் உருவாக அத்திவாரமாக இருந்த 'தமிழ் மாணவர் பேரவை' அமைப்பை நிறுவிய சத்தியசீலன், சமீபத்தில் சென்னை வந்திருந்தார். அவர் ஆனந்த விகடன் இதழுக்கு வழங்கிய செவ்வியின் போது...

ஒருகாலத்தில்இலங்கையில்சிறுபான்மை தமிழ்ச் சமூகம் அரசுத் துறைகளில் செல்வாக்குச் செலுத்தியது, இது ஒரு பொறாமையாக சிங்களர்களிடையே உருவானது. இதனால், தமிழர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அடுத்தடுத்து தமிழர் விரோதச் சட்டங்களைக் கொண்டுவந்தனர். இந்த அதிருப்திக்குள் மாணவர்கள் அழைத்து வரப்படக் காரணமாக அமைந்தது, 1970-இல் கொண்டு வரப்பட்ட தரப்படுத்துதல் சட்டம். அப்போது நான், அரியரட்ணம், சிவக்குமாரன், முத்துக்குமாரசாமி, வில்வராஜா, இலங்கை மன்னன் என இன்னும் பலரும் இணைந்து 'தமிழ் மாணவர் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கினோம். அடுத்த சில நாள்களில் அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் ஒருங்கிணைத்து ஊர்வலம் ஒன்றை நடத்தினோம். ஆனால், அது பொலிஸாரால் கடுமையாக ஒடுக்கப்பட்டது.

சே குவேராவின் சிந்தனையும் கம்யூனிசமும் தமிழ் இளைஞர்களிடையே செல்வாக்குச் செலுத்த, அதன் போக்கில் ஆயுதப் போராட்டமாக உருமாற்றம் அடைந்தது. ஆயுதம் வாங்க, அமைப்பைக் கட்டமைக்கப் பணம் தேவைப்பட்டது. இந்த எண்ணம் வேர் விட்டபோது பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறையைச் சார்ந்தவர்களின் உதவியும் ஆதரவும் முதன் முதலாக எங்களுக்குக் கிடைத்தது. கொஞ்சம் டைனமைட் வாங்கவும், தமிழீழத்துக்கான தேசிய கீதம் ஒன்றை உருவாக்கவும் நான் சென்னை வந்தேன். பிரபாகரன், அவரது அண்ணன் மனோகரன், ஜோதிலிங்கம், ஜெகன், குட்டிமணி, தங்கதுரை அனைவரும் ஒருங்கிணைந்தோம். அதில் மிகவும் இளையவர் தம்பி பிரபாகரன்.

அப்போது ரீடர்ஸ் டைஜஸ்ட் இதழில் 'பேர்னிங்' என்றொரு கட்டுரை வந்தது. அதில் மொலாக்கோ என்பவர் கண்டுபிடித்த 'மொலாக்கோ காக்டெயில்' என்ற குண்டை எப்படித் தயாரிப்பது என்ற கட்டுரை வெளியாகியிருந்தது. அதைவைத்து குண்டு செய்தோம். ஓர் அறையில் வைத்து குண்டு தயாரித்தபோது பிரபாகரனின் கால் பட்டு அந்தக் குண்டு வெடித்தது. அதில் ஒருவர் படுகாயமடைந்தார். பிரபாகரனுக்கு அதிலிருந்துதான் கரிகாலன் என்ற பெயர் வந்தது.

1972-க்கு முன்னரே இலங்கை அமைச்சர் சோமவீர சந்திரசிறி, யாழ் மேயரும் மக்கள் விரோதியுமான அல்பிரட் துரையப்பா போன்றோரைக் கொல்லத் திட்டம் தீட்டினோம். அது தோல்வியில் முடிந்தாலும்கூட, அது உருவாக்கிய மன எழுச்சி, பெரும் அரசியல் நெருப்பாக உருவானது. அந்த வேட்கையை 1975-இல் அல்பிரட் துரையப்பாவைக் கொன்று நிறைவேற்றினார் பிரபாகரன். அடுத்தடுத்து பல வங்கிக் கொள்ளைகள் நடந்தன. தேடப்பட்ட குற்றவாளியான நான், 1973-இல் கைது செய்யப்பட்டேன்.



கோப்பாய் வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டு சிவகுமாரன், முதல் சயனைட் போராளி ஆனார். நான் கைது செய்யப்பட்டதோடு 'தமிழ் மாணவர் பேரவை'யின் வரலாறு முடிந்தாலும், புதிய போராளிக் குழுக்களின் தொடக்கமாக அது அமைந்தது'' என்று பெருமூச்சோடு வரலாற்றை நினைவு கூர்ந்தார் சத்தியசீலன்.

**''உங்களுக்கு அப்போது உலகம் முழுக்க ஆதரவு இருந்ததுதானே?''**

''ஆமாம்... 'சோஷலிசத் தமிழீழம்' என்னும் கோஷமே இருந்தது. அதுவரை அரசியல் செய்த தமிழரசுக் கட்சியின் கொள்கைகளில் மாற்றம் தேவை என்ற எண்ணம் எல்லோரிடமும் இருந்தது. அதுதான் 'சோஷலிசத் தமிழீழத்தை நோக்கி' என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதிய அன்ரன் பாலசிங்கத்தை பிரபாகரனிடம் கொண்டு போய்ச் சேர்த்தது. தமிழகம் நோக்கி வந்த எங்கள் இளைஞர்கள் பலஸ்தீனம் வரை சென்று ஆயுதப் பயிற்சி பெற்றார்கள். 2,000 ரூபாய்க்கு டைனமைட் வாங்க அலைந்த காலம் மாறி, கற்பனைக்கு அப்பாற்பட்ட ஆயுதங்கள் எங்கள் கைகளுக்கு வந்து சேர்ந்தன!''

**''தமிழீழம் மலர்ந்தால், அதை ஆதரிப்பவர்கள்கூட அந்த தேசத்தில் வாழ முடியாது' என அமெரிக்கத் தூதர் 1987-இல் செய்தி அனுப்பியதாக 'விக்கிலீக்ஸ்' கூறுகிறதே?''**

''அதிநவீன ஆயுதங்கள் எங்களுக்குக் கிடைத்தன. மக்கள் நடமாடும் வீதிகளிலும், சந்தைப் பகுதிகளிலும் உடல் முழுக்க ஆயுதங்களைச்சுற்றிக் கொண்டு இளைஞர்கள் வலம் வந்தார்கள். அது மக்களிடம் பொடியள் (போராளி இளைஞர்கள்) பற்றிய பெரிய கவர்ச்சியை உருவாக்கியது. அதன் ஆபத்தை அப்போது மக்கள் உணரவில்லை. 1985-ஆம் ஆண்டிலேயே சகோதரப் படுகொலைகள் தொடங்கிவிட்டன. சகிப்புத் தன்மை இல்லாமல் போய் சின்னச் சின்னக் கருத்து முரண்பாடுகளைக்கூட ஆயுதங்களால் தீர்த்துக்கொண்டார்கள். சகல இயக்கங்களும் ஒன்றிணைய வேண்டும் என்று பலரும் விரும்பினார்கள். ஆனால், நிலைமை கை மீறிச் சென்றுவிட்டது. ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் வகைதொகை இல்லாமல் இளைஞர்களும், சிறப்பு வாய்ந்த தலைவர்களும் கொல்லப்பட்டார்கள். அப்போதே எங்களுடைய தோல்வி தொடங்கிவிட்டது!''

''மற்ற போராளித் தலைவர்களுக்கும் பிரபாகரனுக்கும் உள்ள வித்தியாசம்?''

''வயதில் சிறியவராக இருந்தாலும் பக்குவப்பட்டவராக அவர் இருந்தார். தான் நம்பிய விஷயங்களில் தன்னோடு இருப்பவர்களும் உண்மையாக இருக்க வேண்டும் என்று முன்மாதிரியாக இருந்தார். பல அரசியல் ராஜதந்திர நகர்வுகளில் அவர் இசைந்து போனாலும்கூட, தமிழீழம் என்ற ஒற்றைக் கோரிக்கையில் இறுதி வரை உறுதியாக இருந்தவர் பிரபாகரன் மட்டுமே. மற்றவர்கள் இலங்கை அரசோடு சமரசமாக செல்லத் தயாராகவே இருந்தனர்!''

**''உலகிலேயே செல்வத்திலும் செல்வாக்கிலும் வசதியான அமைப்பு விடுதலை புலிகள் இயக்கம். இன்று அவர்களுடைய சொத்துகள் என்னவாகின?''**


''ஐரோப்பிய நாடுகள் முழுக்க மக்கள் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். அமைப்பில் நிதிப் பொறுப்பாளராக இருந்த காஸ்ட்ரோ இன்று இல்லாத நிலையில், பல மில்லியன் டொலர் மதிப்பிலான அசையும்; அசையாச் சொத்துகளை வைத்திருந்தவர்கள், இன்று பொறுப்பு ஏற்கவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு பொறுப்பாளர் இருந்தார். போர் ஆரம்பித்த பின்பு, அவசர கால நிதி என்று திரட்டினார்கள். உணர்ச்சிவசப்பட்ட மக்கள், வங்கிகளில் கடன் வாங்கி பல பத்தாயிரம் பவுண்ட்ஸ்களையும், யூரோக்களையும், டொலர்களையும் கொட்டிக் கொடுத்தார்கள். வீடுகளை அடைவு வைத்துக் கொடுத்தவர்கள் எல்லாம் இப்போது வட்டி கட்டிக்கொண்டு அலைகிறார்கள். ஆனால், வசூலித்தவர்கள் வசதியாக வாழ்கிறார்கள். ஈழத்தில் எல்லாவற்றையும் இழந்துவிட்ட மக்களுக்குப் பணத்தைப் பிரித்துக் கொடுத்தால்கூடப் பல நூறு கோடி ரூபாய் மீதமிருக்கும். அந்த அளவுக்குப் புலிகளுக்குச் சொத்து இருந்தது. ஆனால், பிரபாகரனைப் போல நேர்மையானவர்களாக நிதி வசூலித்தவர்கள் இல்லை!''

**''ஈழத் தமிழர்களுக்கு இன்று நம்பிக்கை தரும் அமைப்பு எது?''**

''சில அமைப்புகள் சடங்கார்ந்த விழாக்களை நடத்துவதோடு சரி. பிரித்தானிய தமிழர் பேரவை போன்ற சில அமைப்புகள் அரசியல் ரீதியாகச் செயல்படுகின்றன. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், உலகெங்கும் வாழும் ஈழ மக்களை ஒருங்கிணைக்கும் அமைப்பாக உள்ளது. இதெல்லாம் ஏதோ ஒரு வகையில் தாயகத்துக்கு வெளியில் செயல்படும் அமைப்புகள். ஈழத்துக்குள் முறையான அரசியல் அமைப்புகள் உருவாகாமல் போனால், அது தமிழ் மக்களின் எதிர்காலத்தையே கேள்விக்கு உள்ளாக்கி விடும்!''

**''பிரபாகரன் மற்றும் ஐந்தாவது ஈழப் போர் தொடர்பாக உங்கள் கருத்து என்ன?''**

''போர் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது இலங்கை அரசு நடத்திக்கொண்டிருப்பது உளவியல் போர். அந்தப் போரின் ஓர் அம்சமாக பிரபாகரன் தொடர்பான சர்ச்சைகளைப் பயன்படுத்திக்கொள்கிறது. 'அவர் விரைவில் வருவார்' என்கிற பிரசாரத்தின் வாயிலாக 'அவர் வந்து எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளட்டுமே' என்கிற தயக்கத்தில் போராட்டத்தைக் கைவிட்டு யாருக்காகவும் காத்திருந்தால், தமிழர் என்ற ஓர் இனமே அழிந்துவிடும் என்கிற சூழல் தான் இருக்கிறது!''



> சிங்களவர்கள் தங்களுக்குத் தனித்தனி மாகாணங்கள் வேண்டுமென்று கேட்கவில்லை. அது அவர்களுக்குத் தேவையுமில்லை. சிங்களவர்களுக்கென்று ஒரு மாகாணமும் தமிழர்களுக்கென்று ஒரு மாகாணமும் அமைத்திருந்தால் போதும்.

# மாயமான்

## 13 ஆவது சட்டத் திருத்தம்

பழ.நெடுமாறன்

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி - இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன ஆகியோர் 29-7-87 அன்று ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைகள் சார்ந்த குறைகளைத் தீர்ப்பதற்காக ஓர் உடன்பாடு செய்துகொண்டனர். அதன்படி இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் வரலாறுபூர்வமான தாயகம் என்பதும் அவை இரண்டையும் ஒரே மாகாணமாக இணைப்பது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் இம் மாகாணத்திற்குத் தேர்தல் நடத்தப்பட்டு மாகாணக் குழு ஒன்றும் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை உள்ளடக்கிய மாகாண சட்டமன்றம் ஒன்றை அமைப்பது எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

கிழக்கு மாகாணத்தை வட மாகாணத்துடன் இணைப்பது குறித்து, கிழக்கு மாகாணத்தில் மக்கள் வாக்கெடுப்பு நடத்தி இறுதி முடிவு காண்பது எனவும் உடன்பாட்டில் கூறப்பட்டது.

இந்த உடன்பாட்டில் கூறப்பட்ட மேற்கண்ட முக்கிய பகுதிகளை இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெறச் செய்வதற்காக 1988-ஆம் ஆண்டில் 13-வது அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதே நாளில் மாகாண சபைகள் அமைப்பதற்கான சட்டமும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு அவர்களுக்கென்று தனி மாகாணம் அமைப்பது என இந்தியா இந்த உடன்பாட்டை இலங்கையுடன் செய்தது. ஆனால், சிறிய நாடான இலங்கையில், எஞ்சிய சிங்களப் பகுதிகளையும் ஏழு மாகாணங்களாகப் பிரித்து மொத்தம் 8 மாகாணங்களை உருவாக்குவதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினர்.

சிங்களவர்கள்தங்களுக்குத்தனித்தனி மாகாணங்கள் வேண்டுமென்று கேட்கவில்லை. அது அவர்களுக்குத் தேவையுமில்லை. சிங்களர்களுக்கென்று ஒரு மாகாணமும் தமிழர்களுக்கென்று ஒரு மாகாணமும் அமைத்திருந்தால் போதும். தமிழர்களுக்கென்று ஒரு தீர்வினை தனியாக வழங்க சிங்கள அரசு விரும்பவில்லை என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் 1988-ஆம்ஆண்டுஒக்டோபர் மாதம் இந்திய ராணுவ மேற்பார்வையில் நடத்தப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பைச் சேர்ந்த வரதராசப் பெருமாள் என்பவர் தலைமையில் மாகாண சபை அமைக்கப்பட்டது.அந்தத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்று பெரும்பாலானவர்கள் அந்தத் தேர்தலில் பங்கெடுக்கவில்லை.

1990-ஆம் ஆண்டில் இந்தியப் படைகள் வெளியேறியபோதே வரதராஜப் பெருமாளும் அவரது அரசைச் சேர்ந்தவர்களும் வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். அதன் பிறகு வடக்கு-கிழக்கு மாகாணங்களை சிங்கள ஆளுநர் நிர்வகித்தார்.

2006-ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஜனதா விமுக்தி பெரமுனா என்ற சிங்கள தீவிரவாத அமைப்பின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், வட-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டது அரசமைப்பு விதிகளுக்கு முரணானது என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது.

முன்னர் ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தன நிர்வாக உத்தரவு ஒன்றின் மூலமே வட-கிழக்கு மாகாணங்களை இணைத்தார். எனவே அது சட்டப்படி செல்லுபடியற்ற என்ற தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு கிழக்கு மாகாணத்தில் அவசரம் அவசரமாக மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்த இலங்கை அதிபர் ராஜபக்ஷ ஆணை பிறப்பித்தார். ஏற்கனவே கிழக்கு-மாகாணத்தில் இருந்த தமிழர்களில் பெரும் பகுதியினர் வெளியேறி முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டிருந்தனர். ஏராளமான சிங்களர்கள் அங்கு குடியேற்றப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய் யப்பட்டிருந்தனர். எனவே இந்தத் தேர்தலின் விளைவாக சிங்கள அரசுக்குக் கட்டுப்பட்ட மாகாண சபை ஒன்று அங்கே அமைந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டமை செல்லாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த போதும், அதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் மட்டும் தேர்தல் நடத்தப்பட்டபோதும் இந்திய அரசு அதில் தலையிடவில்லை. இந்திய-இலங்கை உடன்பாட்டிற்கு எதிரான செயல் இது என்பதைக் கண்டிக்கவோ அல்லது அரசியல் சட்ட பூர்வமாக வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என வற்புறுத்தவோ இந்திய அரசு முன்வரவில்லை.

1987-ஆம் ஆண்டில் இந்திய-இலங்கை உடன்பாடு ஏற்பட்ட போது தமிழர் விடுதலைக் கூட்டணி அதை முழுமையாக வரவேற்றது. ஆனாலும் அந்த உடன்பாட்டிற்கு சட்டப்பூர்வமான வடிவம் கொண்டு வருவதற்காக நாடாளுமன்றத்தில் சிங்கள அரசு கொண்டுவந்த இரு சட்டங்கள் குறித்து தங்களது அவநம்பிக்கையைதமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம், செயலாளர்நாயகம் அமிர்தலிங்கம், துணைத் தலைவர் சம்பந்தன் ஆகியோர் 28-10-87-இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்தனர்.

இக்கடிதத்தில் உடன்பாட்டிற்கு சட்டவடிவம் கொடுக்க இலங்கை அரசு எடுக்கும் முயற்சி குறித்து இந்திய அரசுடன் கலந்தாலோசித்தே எதுவும் செய்ய வேண்டும். இலங்கை அரசு கொண்டுவந்த இரு சட்டங்கள் குறித்து முன்னதாகவே இந்திய அரசுக்கு தெரிவித்து அதன் சம்மதத்தைப் பெறவேண்டும். இரு சட்ட முன்வரைவுகளும் பகிரங்கமாகவெளியிடப்படவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், இலங்கை அரசு அது குறித்து எதுவும் செய்யவில்லை.

இந்திய-இலங்கை உடன்பாட்டில் இரண்டாம் பகுதியில் 15-வது பிரிவில் வரையறுக்காது விட்டுப்போன உரிமைகள் குறித்து இந்திய அரசும் இலங்கை அரசும் கலந்தாலோசனை செய்தே எதுவும் செய்ய வேண்டும் எனத் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. அதை இலங்கை அரசு அப்பட்டமாக மீறிச் சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி வர்த்தமானியில் வெளியிட்டு விட்டது.

''கிழக்கு-வடக்கு மாகாணங்களை இணைப்பதை நிர்வாக உத்தரவின் மூலம் ஜெயவர்த்தன செய்திருக்கிறார். இவ்வாறு செய்திருப்பதை மீண்டும் மற்றொரு உத்தரவின் மூலம் ரத்து செய்ய முடியும். அரசியல் சட்ட ரீதியான பாதுகாப்பு இதற்கு இல்லை.

மேலும் இலங்கை அரசினால் நிறைவேற்றப்பட்ட இரு சட்டங்களும் நாடாளுமன்றத்திற்கே சகல அதிகாரங்களையும் அளித்துள்ளன. அதாவது மாகாண சபைகள், மாகாணத்திற்குரிய அதிகாரங்கள் இவற்றை மாற்றுவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 74 சதவிகிதம் உள்ள சிங்களர்களுக்கு நாடாளுமன்றத்தில் எப்போதும் பெரும்பான்மை இருக்கும். இந்த நிலையில் மேற்கண்ட சட்டங்களை எப்போது வேண்டுமானாலும் திருத்தவோ அல்லது அகற்றவோ கைவிடவோ சிங்களர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது''.

மேற்கண்ட கடிதத்தை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதியும் கூட அவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவருக்கு பின் அமைந்த அரசுகளும் ஈழத் தமிழர்களின் உரிமைகளைக் காக்கவோ அல்லது இந்திய -இலங்கை உடன்பாட்டை இலங்கை அரசு அப்பட்டமாக மீறியதைக் கண்டிக்கவோ எதுவும் செய்யவில்லை.

ஆனால், செயலற்றுப்போன 13-வது சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இப்போதுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களை இந்திய அரசு வற்புறுத்துகிறது.

2009-ஆம் ஆண்டு போர் முடிந்த பிறகு 4 ஆண்டுகாலமாக இலங்கை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் திட்டமிட்ட இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த எதுவும் செய்யாத இந்திய அரசு இப்போது 13-வது சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்துவது இனப்படுகொலை செய்யும் அரசின் அநீதிகளுக்கு அடிபணியுமாறு தமிழர்களை வற்புறுத்துவதாகும்.

மேலும் இந்திய அரசின் முக்கியமான பொறுப்புகளில் வீற்றிருப்பவர்கள் மீண்டும் மீண்டும் இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை அடியோடு மறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஈழத் தமிழர்களை மீண்டும் அவரவர்கள் வீடுகளில் குடியேற்ற வேண்டும். அதற்காக இந்திய அரசு 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதாக அறிவித்தார்களே தவிர அங்கு தமிழர்கள் எத்தகைய அச்சம் நிறைந்த சூழலில் வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றி கவலைப்படவில்லை.

வடக்கில் தமது சொந்த நிலங்களை இழந்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் அரசுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்துள்ளனர்.

மேலும் 10 மில்லியன் டொலர்களுக்கு மேல் முதலீடு செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் தேவையான நிலத்தைக் குத்தகைக்கு விடுவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. இதன்படி பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் தமிழர் பகுதியில் அன்னிய நாட்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட இருக்கின்றன.

இரண்டாம் உலகப்போரின்போது ஹிட்லரின் நாஜிப் படையினர் கையாண்ட இன அழிப்பு நடவடிக்கைகளை சிங்கள ராணுவம் வட மாகாணத்தில் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இவையெல்லாம் இந்திய அரசுக்குத் தெரியாமல் இல்லை.

13-வது சட்டத் திருத்தத்தில் மாற்றங்கள் செய்வது குறித்து நாடாளுமன்ற தெரிவுக் குழு ஒன்றினை ராஜபக்ஷ அமைத்திருக்கிறார். அதாவது இத்தெரிவுக் குழு மூலமே இனப் பிரச்னைக்கான முழுமையான தீர்வு கிடைக்கும் என இந்திய அரசு கூறுகிறது. ஆனால், இலங்கையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இக்குழுவில் சேர்வதற்கு மறுத்துவிட்டது. இத் தெரிவுக் குழுவில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த 19 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு 12 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இக்குழுவில் சேர்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மறுத்துவிட்டது. எனவே ஆளுங்கட்சி உறுப்பினர்களை மட்டுமே கொண்ட தெரிவுக்குழு எடுக்கப்போகும் முடிவு என்பது தமிழர்களுக்கு எதிராகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆளுங்கட்சி மட்டுமல்ல, சிங்கள தீவிரவாதக் கட்சிகளும் 13-வது திருத்தச் சட்டத்திற்கு எதிராக உள்ளன. இச்சட்டத் திருத்தத்தை ரத்து செய்யாமலும் வடக்கில் சிங்கள மக்களை மீண்டும் குடியமர்த்தாமலும் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கூடாது என பொதுபல சேனாவின் செயலாளர் களப்போட்ட அத்தே ஞானசாரதேரர் அறிவித்திருக்கிறார்.

ஜாதிஹெலக உறுமய என்னும் தீவிரவாத சிங்களக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க என்பவர் 13-வது சட்ட திருத்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற தனிநபர் சட்ட முன்வடிவை கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறார்.

சகல கட்சிகளும் ஒன்றுகூடி தீர்வுத் தேரை இழுக்க முயலுகிறோம் என்று உலகுக்கு காட்டவும் இன அழிப்பு விசாரணைகளை திசை திருப்பவும், ஐ.நா.வில் இனி வரும் தீர்மானங்கள் தீர்வு பேச்சு வார்த்தைகளைக் குழப்பும் என்று கூறவும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது அவசியம் என சிங்கள அரசு கருதுகிறது.

ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரையில் 13-வது சட்டத் திருத்தம் வலு இழந்தாலும் இந்திய - இலங்கை உடன்பாட்டில் உள்ள தனது பிராந்திய நலன்களை பாதுகாக்கும் ஏனைய விஷயங்கள் மாற்றப்படாமல் இருக்கும் என நம்புகிறது. ஆனால், இந்த நம்பிக்கை வீணான நம்பிக்கையாகும்.

இலங்கை அதிபர் ராஜபக்ஷவின் தம்பி பஸில் ராஜபக்ஷ 13-வது சட்டத்திருத்தம் குறித்து இந்திய அரசுடன் பேச்சு நடத்த இந்தியா வந்துள்ளார். ஆனால், கடந்த 24-5-13 அன்று இலங்கைப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் வடக்கு மாகாணத்திற்கு பொலிஸ் மற்றும் காணி குறித்த அதிகாரங்களை வழங்குவது இலங்கைக்கு மிகப்பெரிய பாதுகாப்பு அபாயத்தை உருவாக்கும்'' என பகிரங்கமாக கூறியுள்ளார். இத்தகைய எண்ணம் கொண்ட வரை ராஜபக்ஷ தேர்ந்தெடுத்து இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். மாயமானைப் பின்தொடர்ந்து சென்ற இராமன் அன்று ஏமாந்தான். இன்று ராஜபக்ஷவை நம்பி பின்தொடர்கிற இந்தியாவும் ஏமாறப் போவது உறுதி.

## மல்ரி மீடியா கிறாபிக்ஸ் & அனிமேஷன் பயிற்சிகள்

### நேரடி 80% கட்டணக்கழிவில்

அனைவரும் கற்கக்கூடிய கட்டணத்தில் ரூபா 2800/= இருந்து



- Master Diploma in Multimedia and Animation
- Master Diploma in Digital Animation
- Dip. in Video Production and Multimedia
- Diploma in 2D & 3D Animation
- Diploma in Print Media
- Diploma in 3D Modeling & Graphic

CERTIFICATE COURSES

Adobe Premiere cs6 | 3D Max Studio
Adobe After Effects cs6 | Auto CAD

FREE

DMI COMPUTER EDUCATION

Video Backgrounds , videoEffects ,video transition effects tittle effects and softwares Cds

- மல்ரிமீடியா துறையில் சுயதொழில் வேலைவாய்ப்பை எதிர்பார்ப்போருக்கு துறைசார் ஆலோசனைகள்

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயம்பு ஹோட்டல் அருகாமை) Tel. 021-222 4403 | M.M.V வீதி. (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel. 021-224 1970 |



## கிராபிக்ஸ், அனிமேஷன், மல்டிமீடியா பயிற்சிகளுக்கான புலமைப்பரிசில்

### நாளை புலமைப்பரிசில் பரீட்சை

நாளை நடைபெறும் இலவச பரீட்சையில் பங்குபற்ற இதுவரை அனுமதிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் நாளை காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை அனுமதிகளைப்பெற்று பரீட்சைக்கு சமுகமளிக்கலாம்.

## ASIAN COMPUTERS

| யாழ்.நகரில் | சாவகச்சேரியில் |
|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, | கட்டுக்காணி வீதி |
| T.P : 021-222 5677 | T.P : 021-2270267 |



## Good Lookz Beauty Care

(Skin-Hair-Face-Eye-Nail Body)
Bridal dressing (Hindu, Christian)



- Make up
- Threading
- Facial (All types)
- Waxing
- Pedicure, Menicure
- Hair straightening & perming
- Hair oil massage
- Hair style, Cuts, Dye

**Ladies Only**

545,Point pedro road, Nallur, Jaffna.
Tel: 075 670 9275 (C/10204)(5.6)


## காணி விற்பனைக்கு

வளாக வீதியில் மக்கள் வங்கிக்கு அருகில் ¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 546 8239 (38902)(6.11)




### கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள்- தேவஸ்தானம்

கண்ணகைபுரம், புங்குடுதீவு-10

## மகா சபைக் கூட்டம் 22.07.2013

மேற்படி ஆலயத்தின் மகா சபைக் கூட்டம் எதிர்வரும் 22.07. 2013 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பு 04 பம்பலப்பிட்டி 248 1/1, காலி வீதியில் அமைந் துள்ள இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் கேட்போர் கூடத் தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தின் போது பின்வரும் விடயங்கள் நிகழ்ச்சி நிரலாக அமையப் பெறும்.

01. சென்ற மகாசபைக் கூட்ட அறிக்கை
02. சென்ற வருட கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
03. நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாக சபை, தர்மகர்த்தா சபை தெரிவுகள்.

எனவே அம்பாள் ஆலய அங்கத்தவர்கள் யாவரையும் இம் மகா சபை கூட்டத்திற்கு தவறாது சமுகமளித்து தங்கள் பங்களிப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

என்றும் அம்பாள் பணியில்

செயலாளர்.

ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபை
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

(38853)(5.6) 0777 887 830


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் நான்கு பிரபல பாடசாலைகளுக்கு கிட்டிய தூரத்தில் மூன்று அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

(சி/10082) (45.6.3) தொடர்பு: 077 376 2771

## விற்பனைக்கு

நாவல்மரம், இலுப்பை மரம் , தென்னை மரங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 801 1450 (38953)(6.11)

## காணி விற்பனைக்கு

யாழ். அரசடி வீதி (நல்லூர் கோயிலுக் அருகில்) மாடி கட்டட அனுமதி சான்றிதழுடன் கூடிய 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு

(சி/10081) (45.6.3) தொடர்பு: 075 776 3694

## வீடு வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி இராசவீதியில் அமைந்துள்ள (கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குக் அண்மையில் ) 7அறைகளைக்கொண்ட மேல் மாடியைக் கொண்டதும் போதிய வாகனத் தரிப்பிட வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

(38604)(45.6.3) தொடர்பு: 077 704 6705

## விற்பனைக்கு

1 வயதும் 4 மாதமும் நிறைந்த ஜேர்மன் செப்பேட் ஆண் நாய் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 735 3957 (38930)(6.11)

## கடை விற்பனைக்கு

மன்னார், சென்ரல் பசார் றோட்டில் (பள்ளி வாசல் றோட்) கடை ஒன்று விற்பனைக்கு உண்டு.

(சி/10237)(3.6) தொடர்பு: 077 923 6682

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதியில் பாடசாலைக்கு பின்புறமாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 470 5137 (35096)(6.11)

## மோட்டர் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள HONDA-CD 125 (நீலம், சில்வர் மக்காட், CD 200, சைலன்சர்) உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 087 2430 (37633)(3.6.11)

## வீடு விற்பனைக்கு

இல.76, இலந்தைக்குளம் வீதி, அரியாலை மாம் பழம் சந்தி A9 வீதியிலிருந்து 500m தொலைவில் சகல வசதிகளுடன் கூடிய 2 பரப்பு குளி 16.75 காணியில் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 516 9728
(மாலை 4 மணி முதல் 6 மணி வரை பார்வையிடலாம்) (38890)(6.11)

## வீடு வாடகைக்கு உண்டு

ஆடியபாதம் வீதி, கொக்குவில் (கொக்குவில் சந்திக்கு அருகில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு, அறைகள் வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 952 0724 (38916)(6.11)

## Organ,Guitar புல்லாங்குழல் வகுப்புகள்

சிவிமாப் பயிலுநர்களுக்கான Notes விற்பனைக்குண்டு.

கரவீணா இசை மன்றம்
4, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர்.
077 703 1295 (38571)(6.11)

## வீடு விற்பனைக்கு

வளன்புரம், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு. (1¾ பரப்பு)

தொடர்பு: 077 861 1282 (38915)(6.11)

## வீடு வாடகைக்கு உண்டு

சுழிபுரம் காளுவன் சந்தியில் (மூளாய் வீதி) வீடு உடன் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள்/Tutories விரும்பத்தக்கது. வாடகை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: (38922)(3-6)
077 867 8392, 011 271 3521


உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com


## RIF RAA INTERNATIONAL (PVT) LTD.

Reg- (PV 72025)

### வேலை வாய்ப்பு

அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
(SLBFE - Reg. No.2502)

### வேலை வாய்ப்பு விவரங்கள்

| | சம்பளம் + உணவு |
|---|---|
| * Super Market helper (சுப்பர் மார்கெட் உதவியாளர்) | 1000 + 300 |
| * Hotel Cleaner (ஹோட்டல் சுத்திகரிப்பாளர்) | 1100 + 300 |
| * Store Keeper (களஞ்சிய காப்பாளர்) | 1500 + 300 |
| * Aluminium fitter (அலுமினியம் பொருத்துநர்) | 1200 + 200 |
| * Security Guard (பாதுகாப்பு உத்தியோகத்தர்) | 1000 + 200 |

தங்குமிடம், மருத்துவம் ஏனையவை அனைத்தும் இலவசம்.

இன்னும் இதர வேலைவாய்ப்புக்கள் ஏராளம்! ஏராளம்! ஏராளம்!

- லிபியாவுக்கான அனைத்து வகையான தொழில்நுட்பவியலாளர்கள் தேவை.
- ஐரோப்பிய நாடுகளுக்கான PR, Students Visa என்பன பெற்றுக்கொடுக்கப்படும்.
- கனடாவுக்கான அப்பிள் தோட்டத்திற்கான தொழிலாளர்கள் தேவை (Work Permit)
- கொரியாவிற்கான மீன்பிடி தொழிலாளர்கள் தேவை (Work Permit)

தொடர்புகளுக்கு:
றிப்றா இன்ரநஷனல் பிறைவட் லிமிற்டெட்
95, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 843 6475,
021 221 7085.

தலைமைக் காரியாலயம்
றிப்றா இன்ரநஷனல் பிறைவட் லிமிற்டெட்,
பிரதான வீதி, நிந்தவூர்.

கிளைக் காரியாலயம்
றிப்றா இன்ரநஷனல் பிறைவட் லிமிற்டெட்,
திருகோணமலை.

(38695)(45.6) www.rifraa.com

## மணமகள் தேவை

- 81 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 7½ பாவம் உடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்று வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 44 பாவம் உடைய இஞ்சினியர் லண்டனில் பிரஜாவுரிமை பெற்ற மணம கனுக்கு படித்த மணமகள் தேவை.
- 80இல் பிறந்த 8இல் செவ்வாய் 44 பாவம் உடைய ஆஸ்திரேலியா இஞ்சினியருக்கு பட்டதாரிமணமகள் தேவை.
- 82இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 25½ பாவம் உடைய சுவீடன் பிரஜாவுரிமை பெற்ற மணம கனுக்கு 1ஆம் நம்பர் உள்ள மணமகள் தேவை.

நாலக்கண்ணன் திருமணசேவை
இல. 435/3,கோவில் வீதி, நல்லூர். 077 607 0862 (38929)(5.6)

## வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி, டிப்போ சந்தியில் இருந்து 300m தூரத்தில் 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

(38927)(5-6) தொடர்பு: 077 210 5286

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் வயதுடைய Parvo vaccine ஏற்றப்பட்ட Doberman நாய்க்குட்டிகளும், 1½ வயதுடைய Rott weiller ஆண் நாயும் விற்பனைக்குண்டு. (37634)(3.6.11)

தொடர்பு: 077 818 5543

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குளி விஸ்தீ ரணம் கொண்ட 5அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக் குண்டு.

(38952)(45.6) தொடர்பு: 077 711 1400

## விற்பனைக்கு

NPXB-XXXX இலக்கமுடைய Pulsar கறுப்பு நிறமுடைய (150 CC) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 666 0492 (38888)(6.11)

## கடை வாடகைக்கு

K.K.S வீதி, தாவடிச் சந்தியில் அமைந் துள்ள புதிய கட்டடத்தில் கடைகளுக்கோ அல்லது வேறு நிறுவனங்களின் கிளை அலுவலகத்திற்கோ வாடகைக்கு கொடுக் கப்படும்.

தொடர்பு:
077 129 8980, 077 610 0049 (38874)(6.11)

## தவறிவிட்டது

சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு இணுவிலைச் சேர்ந்த இராசரத்தினம் முரளிதரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (792842348V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்பு றுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேஸ் கடந்த 01.07.2013 அன்று மருதனார்மடம் வலயக்கல்வி அலுவலகத்திற்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

T.P: 077 353 0698 (38951)(6.11)

# கலாசாரத்தை மாற்றவே கிழக்கில் புத்தர் சிலை

## அரியநேத்திரன் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு,ஜூலை 6
கிழக்குப் பகுதிகளில் இன்று கலாசாரத்தை மாற்றுவதற்காக புத்தர்சிலைகள் நிறுவப்படுகின்றன. அத்தோடு அந்தப் பகுதிகளில் இராணுவமயமாக்கல் நடவடிக்கையும், நிலஆக்கிரமிப்பும் என்றும் இல்லாதவாறு இடம்பெறுகின்றன.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் மாவடிமுன்மாரி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கான அரசியல் அபிலாசையினைப் பெறும் வரை தமிழ்க் கூட்டமைப்பின் சேவை ஓயாது தொடர்ந்து கொண்டே இருக்கும். அதற்காகத் தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு பக்க பலமாக இருக்க வேண்டும்.

எமது சமூகம் ஒழுக்கத்தைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்க வேண்டும். கற்றும் ஒழுக்கம் இல்லாத மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று உயர்பட்டம் பெற்றாலும் ஒழுக்கம் இல்லாவிட்டால் சமூகம் ஏற்காது.

இன்று வடக்கு; கிழக்கில் கூடுதலாக ஒழுக்கமற்ற செயற்பாடுகளே நடைபெற்றுக் கொண்டு வருவதனை அவதானிக்க முடிகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் வறுமை அதிகம் உள்ள மாவட்டமாக இருந்தாலும், வறுமையை இல்லாமல் செய்வதற்கு ஒழுக்கம் அத்தியாவசியமாக உள்ளது. வடக்கு, கிழக்குப் பகுதியில் மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தினை சீர் குலைக்கவும் கலாசார சீர்கேடுகளை ஏற்படுத்தவும் பலர் ஊடுருவியுள்ளனர். அதனால் நாம் அவதானமாக இருக்க வேண்டும்

இதனைத் தடுக்க அரச கட்சியுடன் இருப்பவர்களுக்கோ அல்லது அரசுடன் ஒட்டியுள்ளவர்களுக்கோ முடியாது என்பது தமிழ்மக்களுக்கு நன்கு தெரியும். (ச)

## வாகரைக் கடற்கரையில் துப்பாக்கி ரவைகள் மீட்பு



மட்டக்களப்பு,ஜூலை 6
மட்டக்களப்பு, வாகரை கடற்கரைப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன என்று வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து வியாழக்கிழமை மேற்கொண்ட தேடுதல் மூலம் அவை மீட்கப்பட்டுள்ளன.

ரவைகளை வாகரை சுற்றுலா நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் அவற்றை கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் மறைத்து வைத்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச)

## சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கத் துண்டுப் பிரசுரம்

திருகோணமலை,ஜூலை 6
சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் நோக்கில் திருகோணமலையில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இணைந்து சிறுவர்களுக்கு எதிராக தற்போது இடம்பெற்றுவரும் வன்முறை, பாலியல் பலாத்காரம் என்பவற்றை இல்லாது ஒழிக்கும் நோக்குடன் இந்தத் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரம் காட்டூன்கள் மூலமும் தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் இலகுவான மொழி நடையைக் கொண்டதாக அமைந்துள்ளது. 'அவசியமின்றி அதட்டுதல்' என்பது முதல் ''குற்றம் செய்ய அல்லது விபத்தில் சிக்க வழி செய்தல்'', ''கெட்ட எண்ணத்துடன் பிள்ளையை வருடுதல்'',''பாலியல் நடவடிக்கைக்குத் தூண்டுதல்'' என்ற விழிப்புணர்வு வாசகங்களுடன் பதினேழு விடயங்கள் குறித்து விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.



> சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு 1929 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு 1929 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)



தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை, உவர்மலை பிரதேசத்தில் நகரசபையும் வைத்திய அதிகாரி அலுவலக உறுப்பினர்களும் இணைந்து வியாழக்கிழமை நுளம்பு ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச-40)

## 5000 அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருமலையில் 12 பாடசாலைகள் தெரிவு

திருகோணமலை, ஜூலை 6
ஐயாயிரம் ஆரம்பப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச பிரிவில் 12 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் திருமதி ச.ஜலதீபன் தெரிவித்தார்.

சீனக்குடா தமிழ் வித்தியாலயம், கன்னியா தமிழ் வித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம், செல்வநாயகபுரம் இந்து தமிழ் வித்தியாலயம், ஆத்திமோட்டை தமிழ் வித்தியாலயம், மெதடிஸ்த மகளிர் வித்தியாலயம், அல்மின்காஜ் வித்தியாலயம், பாரதிவித்தியாலயம், சென் மேரிஸ் கல்லூரி, ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயம், ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரி, விபுலானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ச-40)

## திருமலையில் வீட்டுக்குள் புகுந்தது லொறி

திருகோணமலை,ஜூலை 6
திருகோணமலையிலிருந்து மூதூர் வழியாக சிமெந்துப் பொதிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறியொன்று வீதியை விட்டு விலகிச்சென்று வீடொன்றுக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து மூதூர் - கிண்ணியா வீதியில் நத்வதுல் உலமா அரபுக்கல்லூரி சந்தியை அண்மித்துள்ள பகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த லொறியை செலுத்தி வந்த சாரதியும் உதவியாளரும் தலைமறைவாகியுள்ளனர்.



> லொறியை செலுத்திவந்த சாரதியும் உதவியாளரும் தலைமறைவாகியுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பில் மூதூர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## சட்டவிரோதமான சேவையில் ஈடுபட்ட சாரதிகள் கைது

மட்டக்களப்பு,ஜூலை 6
தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் விதிமுறைகளை மீறி சட்டவிரோதமான முறையில் போக்குவரத்தில் ஈடுபட்ட இரண்டு பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



அவர்கள் வீதி போக்குவரத்து அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என்று மட்டக்களப்பு மாவட்ட வீதி போக்குவரத்து முகாமையாளர் உ.யுவநாதன் தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் போலியான அனுமதிப்பத்திரம் ஒட்டப்பட்டும் வீதி அனுமதிப்பத்திரம் இன்றியும் சேவையில் ஈடுபட்ட இரண்டு பஸ்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் சாரதிகளும் நடத்துனர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை அதிகாலை மேற்கொண்ட வீதி கண்காணிப்பின் போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை - கொழும்பு, ஏறாவூர் - கொழும்பு போன்ற தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட பஸ்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டன. (ச)

# தமிழ் மக்களை கண்காணிப்பது மாதிரியான தோற்றப்பாட்டை இங்கு காண முடிகிறது

## மதுரை காந்தி சிந்தனைக் கல்லூரி முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
தமிழ் மக்களைக் கண்காணிப்பது மாதிரியான தோற்றப்பாட்டை இங்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த தமிழ்நாடு, மதுரை காந்தி சிந்தனைக் கல்லூரி முதல்வர் முத்து இலக்குமி தெரிவித்தார்.



கொழும்பில் இடம்பெற்ற 12 திருமுறை மன்ற மாநாட்டுக்காக வந்த இவர் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பா ணத்துக்கு வந்திருந்தார். யாழ்ப்பாணத்தைப் பார்த்து விட்டு மக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே முனைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
யாழ்ப்பாண மக்கள் தொடர்பில் மேலும் தெரிவித்ததா வது:-
இலங்கை வளம்மிக்க செழுமையான நாடு. எனவே சகல இன மக்களும் சிறுபான்மை பெரும்பான்மை என்ற வேறுபாடின்றி விட்டுக்கொடுத்து வாழ வேண்டும். அப்போது தான் அபிவிருத்தி சாத்தியமாகும்.
வடபகுதியில் வீதிகள் புனரமைப்பு, கட்டடங்கள் கட்டுதல் என அபிவிருத்தி வேலைகள் இடம்பெறுகின்றன. அதேவேளை இங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்திலும் முன்னேற்றம் கொண்டுவர வேண்டும்.
யாழ்ப்பாண வீதிகளில் காவல் துறையினர் நிற்கின்றனர். தமிழ் மக்களை எந்நேரமும் கண்காணித்துக் கொண்டு இருக்கின்ற மனோநிலை அவர்களிடம் காணப்படுகிறது போல் தெரிகிறது.
எமது புதிய தலைமுறை காந்திய சிந்தனை தொடர்பில் போதிய விளக்கமில்லாதவர்களாக உள்ளனர்.
நாம் காந்திய சான்றிதழ், பட்டக் கற்கைநெறிகள் மூலம் காந்திய கருத்துக்களை மாணவர்கள் மத்தியில் எடுத்துவரச் செய்கின்றோம்.
எமது வாழ்க்கையில் நடைமுறையில் அவ்வாறு காந்தீயத்தைப் பின்பற்றுவது அதன் மூலம் எமது வாழ்க்கை முறையை எப்படி முன்னேற்றுவது என்பது தொடர்பாக வும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வைக் கொண்டு வர வேண்டும். மாகாத்மா காந்தி மிகப் பொறுமையாகத் தனது கருத்துக்களை எவ்வாறு மக்கள் மத்தியில் எடுத்துச்சென்றாரோ அதேபோல நாமும் கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும்- என்றார். (எ)



உடுவில் குமரகோட்டம் முருகன் ஆலயத்தில் மூன்றுமாத கால "கந்தபுராணப் படிப்பு", பௌராணிகர் க.ந.பாலசுப்பிரமணியம் தலை மையில் இடம்பெற்றது. அவருக்கு மத்திய கல்லூரியின் முன்னாள் உப அதிபர் சிவநேசன் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார். (ஒ)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் சுயதொழில் விருத்திக்கான கடன்

யாழ்ப்பாணம், ஜூலை 6
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவானது யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கின்ற 18-29 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளின் சுயதொழிலை விருத்தி செய்வதற்கான கடன் வழங்கவுள்ளது.
இந்தக் கடன் தொகையானது ஆகக் கூடியது ரூ. 2 லட்சத்து 50 ஆயிரம் அரச வங்கிகளினூடாக மிகவும் குறைந்த வட்டியில் வங்கி நடைமுறைக்கு அமைவாக பெற்றுக் கொடுக்கப்படும். வங்கிக் கடன் பெற்றுக் கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தொழிற் பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் பயிற்றுவிக்கும் அதிகார சபை, ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு நிறுவனத்தில் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் துறைசார் சுயதொழிலுக்கான பயிற்சியை பெற்று அதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
இந்தக் கடன் பெற்று சுய தொழிலை மேற்கொள்ள விரும்புகின்ற இளைஞர், யுவதிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாக சுய விவரம் அடங்கிய விண்ணப்பத்துடன் பயிற்சி பெற்ற நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்றிதழின் போட்டோ பிரதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் போட்டோ பிரதி, தேசிய அடையாள அட்டைப் போட்டோ பிரதி ஆகியவற்றுடன்,
பொது முகாமையாளர் (நிஸ்கோ), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,தேசிய வீடமைப்புக் கட்டடம்,யாழ்ப்பாணம், எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# நெடுந்தீவில் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம்

நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவின் ஜே/01, ஜே/02, ஜே/03, ஜே/04, ஜே/05, ஜே/06 கிராம அலுவலர் பிரிவுகளில் ஏழு வலயங்கள் பிரிக்கப்பட்டு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் 07 வரை வட்டார ரீதியாக நுளம்புக்கட்டுபாட்டு வாரம் கடைப் பிடிக்கப்படுகிறது.
இந்த தினங்களில் சகல நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை, பொது இடங்கள், வணக்கத்தலங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், பராமரிப்பற்ற காணிகள் போன்றவற்றில் நுளம்புக்கட்டுப்பட்டுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக பொது இடங்கள் உட்பட வீடுகள் தனியார் காணிகள் என்பன உரியவர்களால் துப்புரவுப் பணிகளில் ஈடுபடுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.
இச் செயற்பாடுகளை நெடுந்தீவு பிரதேச சுகதார வைத்தியதிகாரி அலுவலர்களுடன் நெடுந்தீவு பிரதேச செயலகமும் நெடுந்தீவு பிரதேச சபையும் இணைந்து மேற்கொள்கின்றன. (வ-86)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

நாளை
ஆனி-23 ஞாயிற்றுக்கிழமை 07.07.2013
திதி: சதுர்த்தசி மு.ப. 11.03 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் கா.06.24
சுபநேரம்: 08.58 - 10.28 வரை
இராகுகாலம்: 04.28 - 05.58 வரை


**மேடம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.


**இடபம்:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வு மனப்பான்மை ஏற்படும். தன்னம்பிக்கை குறையும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் குடும்ப அந்தரங்க விடயங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.


**மிதுனம்:** அநாவசியச் செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியரின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.


**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிரிக்கும்.


**சிங்கம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீகள்.


**கன்னி:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். முன்கோபம் விலகும். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு பெருகும்.


**துலாம்:** பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உங்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள். அதை பெரிது படுத்த வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் ஏற்படக்கூடும்.


**விருச்சிகம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.


**தனுசு:** பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.


**மகரம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.


**கும்பம்:** திறம்பட செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலைக் காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.


**மீனம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் அமைதி நிலவும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | 9 | 5 | | | |
| 1 | | 8 | 7 | | | | 5 | 9 |
| | 5 | | 6 | | | 7 | | |
| 8 | | 2 | 1 | | | | 3 | |
| 7 | 3 | | | 5 | | | 9 | 8 |
| | 1 | | | | 3 | 4 | | 6 |
| | | 1 | | | 7 | | 6 | |
| 2 | 9 | | | | 6 | 8 | | 5 |
| | | | 5 | 2 | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 1 | 8 | 4 | 2 | 6 | 7 | 5 |
| 5 | 7 | 4 | 6 | 3 | 1 | 9 | 8 | 2 |
| 6 | 8 | 2 | 5 | 7 | 9 | 1 | 4 | 3 |
| 4 | 6 | 3 | 9 | 1 | 5 | 7 | 2 | 8 |
| 1 | 2 | 7 | 4 | 8 | 3 | 5 | 9 | 6 |
| 8 | 5 | 9 | 2 | 6 | 7 | 3 | 1 | 4 |
| 2 | 9 | 6 | 1 | 5 | 8 | 4 | 3 | 7 |
| 3 | 1 | 5 | 7 | 2 | 4 | 8 | 6 | 9 |
| 7 | 4 | 8 | 3 | 9 | 6 | 2 | 5 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# கற்றல் உபகரணங்கள் வெள்ளியன்று வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை 06
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் தென்மராட்சிப் பிரதேச கட்டடக் கலைஞர்களின் மாணவர்களுக்கு தமிழ்நாடு ராம்கோ சீமெந்து நிறுவனத்தினரால் இன்று வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட கற்றல் உபகரங்கள் வழங்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது. எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்நிகழ்வு நடைபெறும் என்று மன்றத் தலைவர் அறிவித்துள்ளார். (ஒ-9)

# தற்காலிக கூட்டுறவு பணியாளருக்கு விரைவில் நிரந்தர நியமனங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 6
சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கூட்டுறவு நிறுவனங்களில் தற்காலிகமாக பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் விரைவில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெவித்ததாவது,
கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்ந்து மூன்று வருடங்களுக்குமேல்தற்காலிகமாகப்பணியாற்றும் பணியாளர் அனைவரும் இரண்டு மாதத்துக்குள் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.
இதற்கான ஆளணி அங்கீகாரம் பெறப்பட்டு அதற்கேற்ப பதவி நிர்ணயங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவும் வழங்கப்படும்.
அனேகமான சங்கங்களில் பணியாளர்கள் பலர் பல வருடங்களாக நிரந்தர நியமனறம் இன்றி பணியாற்றி வருகின்றனர். தற்போது கூட்டுறவு ஆணையாளரின் துரித செயற்பாட்டின் மூலம் அவர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர் என்றார். (த-17)

# சின்னமுத்து தடுப்பூசியை ஏற்றாதோருக்கு சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
6 மாதத்துக்கும் ஒரு வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்கு சின்னமுத்து நோய்த் தடுப்பூசி ஏற்றல் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நேற்று சின்னமுத்து நோய்த் தடுப்பூசியை குழந்தைகளுக்குப் போடத் தவறியோர் இன்று சனிக்கிழமையும், எதிர்வரும் 13 ஆம், 20 ஆம், 27 ஆம் திகதிகளிலும் ஊசியைப் போடமுடியும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் தெரிவித்தனர்.
வடக்கு உட்பட நாடளாவிய ரீதியில் சின்னமுத்து நோய்த் தடுப்பூசி ஏற்றல் நேற்று இடம்பெற்றது. அதிகளவானோர் நேற்று இந்த ஊசியை குழந்தைகளுக்கு ஏற்றியிருந்தனர்.
எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தால் யாராவது குழந்தைகளுக்கு நேற்று இந்த ஊசியைப் போடத் தவறியிருப்பின் அந்தக் குழந்தைகளுக்கு இந்த மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் மாத்திரம் அருகிலுள்ள மருந்தேற்றல் நிலையங்களுக்குச் சென்று மருந்தேற்ற முடியும். (த-4)

# ஆண்டு நிறைவு விழா

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் 46ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-14)

# நூல் வெளியீடும் இசையரங்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை 06
இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் இசையரங்கும் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
மையத் தலைவர் வி.கே.குகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை கே.எஸ்.ஆனந்தன் நிகழ்த்வார். (ஒ-140)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# திருமலை மாணவர் படுகொலை தொடர்பில் 12 படையினர் 8 வருடங்களின் பின் கைது

சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியிருந்தார். அதன் பின்னர் திருகோணமலை மாணவர்கள் படுகொலை தொடர்பாகச் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை அவர் கோரியிருந்தார்.
அத்துடன் இந்தப் படுகொலைகள் தொடர்பாக இலங்கை அரசு நீதியான விசாரணைகளை நடத்தவில்லை என்று மனித உரிமை அமைப்புகள் தொடர்ச்சியாக குற்றம் சாட்டிவந்தன.
இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளில், திருகோணமலை தமிழ் மாணவர்கள் படுகொலை தொடர்பாகவும் விசாரிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது.
இந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமை அமர்வுகளின் போது மருத்துவர் சண்முகராஜா மனோகரன் தனது மகனின், படுகொலைக்கு நீதி கேட்டு கண்ணீர் மல்க உரையாற்றிருந்தார்.
தொடர்ச்சியாக சர்வதேச சமுகத்தினால் விடுவிக்கப்பட்ட அழுத்தம் காரணமாக இந்தக் கொலை தொடர்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட விசேட அதிரடிப்படையினர் சம்பவம் இடம்பெற்ற 8 ஆண்டுகளின் பின்னர் கைதாகியுள்ளனர். (த-5)

## தன்னிச்சையாக இலங்கை ..

தளிப்பதற்காகவும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தையும் திருத்தச் சட்டத்தையும் இலங்கை அரசு ஒரு தலைப்பட்சமாக திருத்த முடியாது.
அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு, இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் சமஉரிமைகளுடன் வாழ்வதையே இந்தியா விரும்புகின்றது. இது இலங்கை அரச தரப்பிணிடம் பலமுறை கூறப்பட்டுள்ளது.
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆகியோரிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமும் அதன்மூலம் ஏற்படுத்தப்பட்ட இலங்கை அரசியல் சாசனத்தின் 13ஆவது சட்டத் திருத்தமும் நீர்த்துப் போக நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுவது குறித்து இந்தியா அதிருப்தி அடைந்துள்ளது.
சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குப் பயணம் செய்தபோது இந்தியப் பிரதமர், இலங்கையில் அதிகாரப் பகிர்வைக் கொண்டு வரும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்-என்றார். (த-5)


## கார் விற்பனைக்கு


NPGExxxx இலக்க Nissan Sunny FB14 Super Saloon, Silver Colour கார் விற் பனை க்கு
தொடர்பு: 077 3140056 (சி10254)(17.14.18)

## நாய் விற்பனைக்கு

நல்ல பெரிய இனத்தைச் சேர்ந்த வளர்ப்பு நாய் (அல்சேசன்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 9672613, 077 2651204 (சி10254)

## தவறிவிட்டது

மீசாலை கிழக்கைச் சேர்ந்த வைரவநாதன் சயந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வாகனவரி, காப்புறுதி ஆகிய ஆவணங்கள் யாழ்ப்பாணத்துக்கும் - சாவகச்சேரிக்குமிடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு- 0775023467




யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஏற்பாட்டில் கடந்த 02.06.2013 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்க மாநாட்டில் யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (H.N.D.A) பட்டதாரிகளினால் தமது நியமனம் தொடர்பாக கௌரவ பா.உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அவர்களிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை அவர் எற்றுக் கொண்டு அதற்கு துரித கதியில் நியமனங்களைப் பெறுவதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டமைக்கு யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பிலும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா தாரிகள் சார்பிலும் கௌரவ பா.உ.நாமல் ராஜபக்ஷ அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

திரு. அங்கஜன் இராமநாதன்,
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சின் பிரதான அமைப்பாளர், யாழ். மாவட்டம்


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
உயர் திரு. **மயில்வாகனம் முருகையா**



அவர்கள் கனடாவில் காலமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞானவயிரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (c/10239)(6.11)
அயலவர்கள்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் வாமதேவா



யாழ்ப்பாணம் அத்தியடி அம்பலவாணர் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் வாமதேவா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தி யோகஸ்தர்) கடந்த (03.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான k.k.சண்முகம் - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் ஊரெழுவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான துரைரட்ணம்- சொர்ணகாந்திமலரின் அன்பு மருமகனும் விக்னேஷ்வரியின் அன்புக் கணவரும், மகாதேவா, நீலாதேவி, வைத்தியகலாநிதி. சிறிதேவா, ஆனுஷா தேவி, காலஞ்சென்ற தர்மதேவா, ஜெயதேவா, ஹரிதேவா, தயாளதேவா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாபரன், விக்னேஷ்வரி, சௌந்தரி, தர்மினி, ஆனந்தராஜா (சுவிஸ்லாந்து) காலஞ்சென்ற விக்னராஜா, ராஜேஸ்வரி, வைத்தியகலாநிதி. நந்தினி ஆகியோரின் மைத்துனரும், கீதாஞ்சலி (இங்கிலாந்து), மனோரஞ்சலி (நோர்வே), பிரதீபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமேஷ் (இங்கிலாந்து), விஜயகுமார் (நோர்வே) ஆகியோரின் மாமனும், லக்ஷிகா, லதூஷன், ஆகாஷ், அபிஷா, ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.07.2013) சனிக்கிழமை மு.ப 10மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வநாயகி வடிவேலு



ஏழாலை வடக்கு, ஊரங்குணையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு விழிசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி வடிவேலு கடந்த (03.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா வடிவேலு (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் சாந்தினி, சாந்தகுமார் (சுவிஸ்), சூரியகுமார் (நோர்வே), செல்வேந்திரகுமார் (தம்பி) ஆகியோரின் தாயும் தர்ஷிகாவின் மாமியும் அபித்தாவின் பேர்த்தியும் பரமேஸ்வரி, சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, கமலநாதன் ஆகியோரின் சகோதரியும், உஷாந்தினி (Allianz insurance, திருநெல்வேலி), பிரதீபன் (லண்டன்), ஜெகதீபன் (லண்டன்) ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (04.07.2013) வியாழக்கிழமை நண்பகர் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
விழிசிட்டி, சுன்னாகம். (38959)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை நாகராசா

(இளைப்பாறிய அதிபர், மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்)



நுணாவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் பெருங்குளச்சந்தி, சங்கத்தானை வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராசா கடந்த (03.07.2013) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -சின்னத் தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப் பிள்ளை-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ் வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான நாகேஸ்வரி, யோகேஸ்வரி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜ நந்தினி, இராஜினிதேவி, சுகந்தினி, சுகந்தன், அமிர்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலும் மயிலும் (மீசாலை), முத்துக்குமரன் (யாழ்ப்பாணம்), சந்திரசேகரன் (மீசாலை), சுமதி (திருநெல்வேலி), மயிலநாதன் (அராலி) ஆகியோரின் அன்பு மாமனும், செந்தூரன், சிந்துயா, நர்மதன், விதுன், திருன், சரண், அட்சயனி, அபிநயா, சாரங்கன், சிந்துஜன், சாதனா, சஞ்சய், அபிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07.07.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00மணிக்கு 353/2, நாவலர் வீதி(கைலாச பிள்ளையார் கோயில் அருகாமை) நல்லூர் எனும் முகவரியில் நடைபெற்று பூதாவுடல் தகனத்துக் காக செம்மனி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

353/2(595/12), நாவலர்வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி10255)

தகவல்:
இ.முத்துக்குமாரன்(மருமகன்)071 8054241
நா.சுகந்தன்(மகன்) 0212219151

# வடமாகாணத் தடகளப் போட்டி: இதுவரை 12 புதிய சாதனைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 6 ஆவது தடகளப்போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.
கடந்த இருநாள்கள் நடைபெற்று வரும் இந்தப் போட்டிகளில் 12 புதிய சாதனைகள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.
15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் கடந்த வருடம் பதிவு செய்யப்பட்ட சாதனையான 33.6 மீற்றர் தூரம் என்ற சாதனையை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவனான எழில் தர்சன் இந்த வருடம் முறியடித்தார். அவர் இந்த முறை 34.31 மீற்றர் தூரம்


டிலக்சன்


பிரசாத்

எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.
19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் கடந்த வருட சாதனையான 17:11:0 என்ற நேரப் பெறுதி இம் முறை கற்சிலை மடு அ.த.க. பாடசாலை மாணவனான பி.பிரசாத்தால் முறியடிக்கப் பட்டுள்ளது. 16:57:70 என்ற நேரப் பெறுதியில் அவர் குறித்த தூரத்தை ஓடி முடித்து சாதனையைப் பதிவு செய்துள்ளார்.
19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் கடந்த வருடம் பதியப்பட்ட சாதனையான 16:48:8 என்ற நேரப் பெறுதி, இம்முறை கற்சிலை மடு அ.த.க. பாடசாலை மாணவனான தேவதர்சனால் முறியடிக்கப்பட்டது. அவர் குறித்த தூரத்தை 16:32:20 என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்து சாதனையைப் பதிவு செய்துள்ளார்.
17 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தல் நிகழ்வில் கடந்த வருடம் பதியப்பட்ட சாதனையான 6.39 மீற்றர் தூரம், இம்முறை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி ஆரணியால் முறியடிக்கப்பட்டது. 7.93 மீற்றர் தூரம் பாய்ந்து அவர் புதிய சாதனையைப் பதிவு செய்தார். அதேவேளை, கலைமகள் வித்தியாலய மாணவி நிதர்சனா 7.92 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்துள்ளார்.
21 வயதுப் பிரிவு பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் தூர ஓட்டப் போட்டில் கடந்த வருடம் 21:6:4 என்ற நேரப் பெறுதியில் பதிவு செய்யப் பட்ட சாதனை, இம்முறை


தேவதர்சன்


ஆரணி

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவி சாளினியால் முறியடிக்கப்பட்டுள்ளது. இவர் 20:32:30 என்ற நேரப் பெறுதியில் குறித்த தூரத்தை ஓடிமுடித்து சாதனையைப் பதிவு செய்துள்ளார்.
17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் கடந்த வருடம் பதிவு செய்யப்பட்ட சாதனையான 3.30 மீற்றர் தூரத்தை, இம்முறை மகாஜனக் கல்லூரி மாணவன் டிலக்சன் முறியடித்தார். அவர் 3.40 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.
21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் கடந்த வருட சாதனையான 3.35 மீற்றர் தூரத்தை, இம்முறை அருணோதயக் கல்லூரி மாணவனான றொசான் முறியடித்தார். அவர் 3.56 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.


கமலினி

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தலில் கடந்த வருட சாதனையான 2.35 மீற்றர் தூரத்தை, இம்முறை மகாஜனக் கல்லூரி மாணவியான அனித்தா முறியத்துள்ளார். இவர் 2.92 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்தார். அதேவேளை, அருணோதயக் கல்லூரி மாணவிகளான மேரி நிலக்சனா மற்றும் ஜக்சனா ஆகியோர் 2.50 மீற்றர் தூரத்தினைப் பதிவு செய்துள்ளனர்.


அனிதா

21 வயதுப் பிரிவு பெண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில், கடந்த வருட சாதனையாக 9.80 மீற்றர் தூரத்தை, இம்முறை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி தர்சிகா முறியடித்துள்ளார். அவர்


சாளினி

10.02 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.
19 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் கடந்த வருட சாதனையான 4.9 மீற்றர் தூரத்தை, இம்முறை வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி


தர்சிகா

மாணவியான கமலினி முறியடித்தார். அவர் 5.19 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார். (ற-23)

## யாழ்.இந்துவை வீழ்த்தியது சென்.ஜோன்ஸ் கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூலை 6
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் பிரிவு III 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்றது.
சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 35.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.
அதில் பானுகோபன் 16 ஓட்டங்களையும், கோபிராம் 10 ஓட்டங்களையும் அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.
பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக நிரோஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 4



இலக்குகளையும், யதுஷன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், தோமஸ்கரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
87 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 5 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
அதில் சுபலக்ஷன் 15 ஓட்டங்களையும், தோமஸ்கரன் 23 ஓட்டங்களையும், தேவபிரசாந் 17 ஓட்டங்களையும், பிளமிங் ஆட்டமிழக்காது 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சார்பாக சுபலக்ஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினார். (ற-23)

## வடமாகாண 6ஆவது தடகளப் போட்டிகள் வலயங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 6 ஆவது தடகளப்போட்டிகளில் வலயங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விவரங்கள் வருமாறு:- வலிகாமம் - 145, யாழ்ப்பாணம் - 129, மன்னார் - 89, வடமராட்சி -36, கிளிநொச்சி - 34,, முல்லைத்தீவு - 31, வவுனியா தெற்கு - 30, தென்மராட்சி - 30, வவுனியா வடக்கு - 27, துணுக்காய் - 25, தீவகம் - 20, மடு - 11. (ற-23)

## பாரம்பரிய விளையாட்டு விழா நெடுந்தீவில் நேற்று ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூலை 6
மக்களின் ஒருமைப்பாட்டையும் நல்லுறவையும் வலுப்படுத்தும் நோக்கில் நெடுந்தீவு மக்களால் நடத்தப்படும் பாரம்பரிய விளையாட்டு விழா நேற்றுக் காலை நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது.
இந்த நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன், பிரதேச சபைச் செயலாளர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி, பிரதேச சபை உறுப்பினர்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம், கழகங்களின் உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
முதல் நிகழ்வாக 11 பேர் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்க்ள் கொண்ட கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றன. அதில் நெடுந்தீவைப் பிரநிதிப்படும் 6 விளையாட்டுக் கழகங்களும், நெடுந்தீவில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களின் அணியும் பங்குபற்றியிருந்தன.



கிரிக்கெட் இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகமும் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழமும் மோதிக்கொண்டன. அதில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் 11 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (ற-86)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 6
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பூமகள் விளையாட்டுக் கழகம் எதிர் கலைமதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 6
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
ஊரேழு றோயல் வி.க. எதிர் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம்.
பி.ப. 4.30 மணி
யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்.(ற-23)

## சிம்பாப்வே செல்லும் இந்திய அணி

சிம்பாப்வே தொடருக்கான இந்திய அணியின் அணித் தலைவராக வீராட் ஹோக்லி நியமிக்கப்பட்டுள்ளார்.

முத்தரப்பு தொடருக்குப் பின் சிம்பாப்வே செல்லும் இந்திய அணி ஐந்து ஒருநாள் போட்டி கொண்ட(ஜுலை 24- ஓகஸ்ட் 3) தொடரில் பங்கேற்கிறது.

இதில் முதல் மூன்று போட்டிகள் ஹராரேயிலும், கடைசி இரு போட்டிகள் புலவாயோவில் நடக்கும்.

இத்தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்து. இதில் தொடையின் பின் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக, அணித்தலைவர் டோனி இடம்பெறவில்லை.

அத்துடன் இஷாந்த் சர்மா, அஷ்வின், உமேஷ், புவனேஷ்வர் ஆகியோருக்கும் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மூத்த வீரர் கம்பீருக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதே நேரத்தில் புஜாரா இடம்பெற்றுள்ளார்.

தவிர ஜம்மு காஷ்மீர் வீரரான பர்வேஸ் ரசூல், மோகித் சர்மா போன்ற இளம் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அணி விவரம்:
ஹோக்லி(அணித்தலைவர்), ஷிகர் தவான், ரோகித் சர்மா, தினேஷ் கார்த்திக், புஜாரா, ரெய்னா, ராயுடு, ரகானே, ஜடேஜா, அமித் மிஸ்ரா, பர்வேஸ் ரசூல், முகமது ஷமி, வினய் குமார், உன்த்கத், மோகித் சர்மா. (ற)



# தமிழீழ அணி வெற்றி



ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கபடாத நாடுகளுக்கான சர்வதேச கால் பந்து போட்டி இன்று இசல் ஒவ் மானில் நடைபெற்று வருகின்றது. அதில் பங்குபற்றியுள்ள தமிழீழ அணியினர் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்தத் தொடரில் 'ஏ' குழுவில் இடம்பெற்றுள்ள தமிழீழ அணியினர் சீலாந்து அணியுடன் மோதினர். மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் 5:3 என்ற கோல் கணக்கில் சீலாந்து அணியை வீழ்த்தியது தமிழீழ அணி.

அதில் பனுஷந்த் 2 கோல்களையும், மயூரன், மதன் ராஜ், பிரஷாந்த் ஆகியோர் தலா ஒரு கோலையும் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தனர். தமிழீழ அணி அமைக்கப்பட்டு, அந்த அணி பங்குபற்றியிருந்த முதலாவது ஆட்டம் இதுவாகும்.

அதேவேளை, 'பி' பிரிவுக்கான முதலாவது ஆட்டத்தில், சென்.ஜோன்ஸ் யுடிரி அணியும் ரய்ரியா அணியும் மோதிக் கொண்டன. அதில் சென். ஜோன்ஸ் யுடிரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ற)



## ஹோக்லிக்கு அபராதம்



மேற்கிந்திய தீவுகளில் நடைபெறும் மும்முனை கிரிக்கெட் தொடரில் விளையாடி வரும் இந்திய அணித் தலைவர் விராட் ஹோக்லிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக இலங்கை அணிக்கெதிராக நடைபெற்ற போட்டியின் போது குறித்த நேரத்திற்குள் பந்துவீசத் தவறிய குற்றத்திற்காகவே இந்த அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் விராட் ஹோக்லிக்கு போட்டிக்கான கட்டணத்தில் 20 வீதமும், ஏனைய வீரர்களும் 10 வீதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தண்டனையை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.(ற)



நேற்று இடம்பெற்ற இந்தியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஷிகர் தவான் 77 பந்துகளைச் சந்தித்து 69 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி 44 பந்தப் பரிமாற்றங்களில் 244 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்திருந்தது. (அச்சுக்குப் போகும் வரை)

## ஸ்ரீலங்கா பிரீமியர் லீக்; 90 வெளிநாட்டு வீரர்கள்

இவ்வாண்டு இடம்பெறவுள்ள ஸ்ரீலங்கா பிரீமியர் லீக் '20/20' தொடரில் பங்குபற்றுவதற்காக 90 வெளிநாட்டு வீரர்கள் தங்கள் விருப்பத்தை வெளியிட்டுள்ளனர் என்று ஸ்ரீலங்கா பிரீமியர் லீக் தொடரின் பணிப்பாளர் அஜித் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், ஆஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்களே இவ்வாறு இவ்வருடத்திற்கான தொடரில் பங்குபற்றுவதற்கு தங்கள் விருப்பத்தை வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்த அஜித் ஜெயசேகர, இவ்வருடத்திற்கான தொடர் பரந்துபட்ட ரசிகர்களை இலக்காகக் கொண்டு செயற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்திற்கான தொடர் இலங்கை முழுவதிலுமுள்ள 7 மைதானங்களில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்த அஜித் ஜெயசேகர, ஆர்.பிரேமதாச மைதானம், ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானம், பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம், தம்புள்ள மைதானம் ஆகியவற்றில் போட்டிகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த வருடம் முதன் முறையாக இடம்பெற்ற ஸ்ரீலங்கா பிரீமியர் லீக் தொடர் ஆர். பிரேமதாச மைதானம், பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம் ஆகியவற்றில் மாத்திரம் இடம்பெற்றிருந்ததோடு, அப்போட்டிகளில் பார்வையாளர்கள் வரவு குறைவாகக் காணப்பட்டிருந்தது.

இவ்வருடத்திற்கான போட்டிகள் ஓகஸ்ட் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதுடன், அப்போட்டிகளுக்கான அணிகளைத் தெரிவதற்கான தெரிவு எதிர்வரும் ஜுலை 14ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# விம்பிள்டன் போட்டி முடிவுகள்

இடம்பெற்றுவரும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பெண்களுக்கான அரையிறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தன.

4ஆம் நிலை வீராங்கனையான போலந்தின் அக்னிஸ்கா றட்வன்ஸ்காவிற்கும், 23ஆம் நிலை வீராங்கனையான ஜேர்மனியின் சபீன் லிசிஸ்கிக்குமிடையில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் சபீன் லிசிஸ்கி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். முதலாவது செற்றை 6:4 என்ற கணக்கில் கைப்பற்றிய சபீன் லிசிஸ்கி, இரண்டாவது செற்றை 2:6 என்ற கணக்கில் இழந்த போதிலும், மூன்றாவது செற்றை கடும் போராட்டத்துக்கு மத்தியில் 9:7 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் 15ஆம் நிலை வீராங்கனையான பிரான்ஸின் மரியன் பார்ட்டொல்லியும், 20ஆம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் கேர்ஸ்ரன் பிளிப்ஹன்ஸும் மோதினர்.

இப்போட்டியில் மரியன் பார்ட்டொல்லி 6:1, 6:2 என்ற கணக்கில் மிக இலகுவாக வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தின் அரையிறுதி ஆட்டங்களில் ஐக்கிய அமெரிக்காவின் பொப் பிரையன் சகோதரர்கள், இந்தியாவின் றொகான் போப்பன்னா - பிரான்ஸின் எடுவோர்ட் றொஜர் வசெலின் இணையை 6:7, 6:4, 6:3, 5:7, 6:3 என்ற கணக்கில் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

இரண்டாவது அரையிறுதியில் குரோசியாவின் இவன் டொடிக் - ஜமைக்காவின் மார்செலோ மெலோ இணை, இந்தியாவின் லியாண்டர் பயஸ் - செக் குடியரசின் றடெக்ஸ்ரெப்னெக் இணையை 3:6, 6:4, 6:1, 3:6, 6:3 என்ற கணக்கில் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (ற)





இந்தியாவின் புனேவில் நடைபெற்று வரும் ஆசிய தடகளப் போட்டிகளில் இலங்கை வீரர் சசித் மதுரங்க ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி

# இராணுவம் கடத்திய மகனை எப்படியாவது மீட்டுத் தாருங்கள்

கண்ணீர் மல்க உருக்கமான கோரிக்கை ஒன்றை விடுத்தார். நேற்று யாழ்ப்பாணம் வந்த பொன்சேகாவிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடமாகாண சபைத் தேர்தலில் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சி போட்டியிடவுள்ளது. இதற்கு முன்னோடியாகவே இங்குள்ள நிலைமைகளை அவதானிப்பதற்காக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர்.

இந்தக் குழுவினர் யாழ்.நகரிலுள்ள மிலேனியம் விடுதியில் நேற்றுக் காலை மக்கள் சந்திப்பு ஒன்றை நடத்தினர். அதன் பின்னர் நல்லூர் கோயிலுக்குச் சென்று பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

மக்கள் சந்திப்பின்போது சாவகச்சேரியைச் சேர்ந்த தாயொருவர் சரத் பொன்சேகாவிடம் உருக்கமான கோரிக்கை ஒன்றைக் கண்ணீர் மல்கியவாறு முன்வைத்தார்.

''நான் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வருகின்றேன். எனக்கு ஐந்து பிள்ளைகள். 2006ஆம் ஆண்டு ஜி.சி.ஈ.சாதாரண தரப் பபீட்சைக்குத் தோற்றியிருந்த எனது 16 வயது மகனை இனந்தெரியாதோர் வீட்டில் வைத்துச் சுட்டுக் கொன்றனர். அதன் பின்னர் 15 வயது மகனை படையினர் 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி கடத்திச் சென்றனர். எனது மகன் படையினருடன் இருப்பதாகப் பலர் சொல்கின்றனர். நான் அவனைக் காணவில்லை.

இது தொடர்பாக அமைச்சருக்குத் தெரியப்படுத்தியும் அவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனது மகனை எப்பிடியாவது கண்டுபிடித்துத் தாருங்கள்'' என்று அவர் அழுதவாறு பொன்சேகாவிடம் கூறினார். யாழ்ப்பாணத்திலுள்ள யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறும் சாவகச்சேரியைச் சேர்ந்த அந்தத் தாயார் பொன்சேகாவிடம் கோரினார். (த-5)

## போரினால் யாருக்கும் பயனில்லை

இறுதிக் கட்டப்போரினால் யாருக்குமே இலாபமும் இல்லை. நட்டமும் இல்லை. பாதிக்கப்பட்டது மக்கள் தான்,''

இவ்வாறு இறுதிப்போரை வழி நடத்திய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகத் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய மக்கள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கே.பி., தயாமாஸ்ரர், தமிழினி போன்றேரை அரசு வடமாகாண சபைத் தேர்தலில் களமிறக்குவதன் மூலம் தமிழ் மக்களைத் திசை திருப்ப முயல்கின்றது. தமிழ் மக்களை யாரால் ஏமாற்ற முடியுமோ அவர்களை அரசு தன்பக்கம் வைத்துள்ளது.

இன்று ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு மதத்துக்கும் பிரச்சினைகளை இந்த அரசு தோற்றுவித்துள்ளது. இதன் மூலம் மக்கள் பிரச்சினைகளைத் திசை திருப்ப முயல்கின்றது.

இறுதிக் கட்டப் போரில் யாருக்கும் இலாபம் நட்டம் இல்லை. இதனால் பாதிக்கப்பட்டது மக்கள்தான். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. போர் முடிந்த பின்னர் மக்கள் எதிர்பார்த்தது எதுவுமே கிடைக்கவில்லை.'

இந்த அரசு பிரச்சினைகளை வைத்து அரசியல் செய்கின்றது. இவர்கள் 13 ஆவது திருத்தத்தை மாற்றி அமைப்பார்கள் என்பதில் நம்பிக்கை இல்லை. இந்தியாவுடன் ஒற்றுமையாக இருக்கத் தெரியவில்லை.

இந்த நாடு அனைத்து மக்களுக்கும் சொந்தமானது. மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்னை, எமது கட்சியை வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்யுங்கள் - என்றார். (த-5)

## வடக்குத் தேர்தல் அறிவிப்பை நேற்று விடுத்தார் மஹிந்த

தேர்தல் 1988 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இதன் பின்னர் கடந்த 2006 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதன் பின்னர் வட மாகாண சபைக்கு இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை.

வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துமாறு இலங்கை அரசுக்குச் சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தது. இவ்வாறானதொரு நிலையில், வடமாகாண சபையை உருவாக்குவதற்கான பிரகடனத்தில் நேற்றுக் ஸ்கைச்சாத்திட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் நடத்தும் உத்தரவையும் பிறப்பித்துள்ளார்.

மாகாண சபைகள் கலைப்பு

மத்திய மாகாண சபையைக் கலைப்பதற்கு முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க விடுத்த கோரிக்கை ஆவணத்தில் மாகாண ஆளுநர் டிங்கிரி கொப்பேக்கடுவ கையொப்பமிட்டுள்ளார். இதேபோன்று வடமேல் மாகாண சபையைக் கலைப்பதற்கு முதலைமைச்சர் அத்துல விஜேசிங்க விடுத்த கோரிக்கை ஆவணத்தில் மாகாண ஆளுநர் கையொப்பமிட்டுள்ளார்.

இதன் மூலம் இரு மாகாண சபைகளும் நேற்று நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு விடுத்து ஒரு வார காலத்தினுள் தேர்தல் திகதியைத் தேர்தல்கள் ஆணையாளர் அறிவிக்க வேண்டும்.

இதேவேளை வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் 9 ஆம் திகதியுடன் முடிவடைந்த பின்னரே தேர்தல் திகதி அறிவிக்கப்படும். (த-5)

# ஏமாற்றம்

ளையார், முருகன், அம்மன் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்துவதற்கு நேற்று வெள்ளிக்கிழமை மாத்திரம் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது. இதனையடுத்து மயிலிட்டிக் கடற்றொழிலாளர் சங்கத்தினரால் மக்கள் மயிலிட்டிக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட 20 பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வெளிநாடுகளில் இருந்து வந்திருந்தவர்கள், வேறு மாவட்டங்களில் இருந்து வந்தவர்கள் என 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் நேற்று காலை 7.30 மணியிலிருந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முன்பாகத் திரண்டனர்.

இதன்பின்னர் ஏற்பாட்டாளர்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள உயர் பாதுகப்பு வலய நுழைவாயில் சோதனைச் சாவடிக்குச் சென்றனர். அப்போது அங்கு இருந்த படையினர், 200 பேரை மாத்திரமே மயிலிட்டிக்குச் செல்ல அனுமதிக்கலாம் என்று ஏற்பாட்டாளர்களிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஏற்பாட்டாளர்களுடன் சென்ற பொதுமக்கள் படையினருடன் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தன்னை ஈ.பி.டி.பியின் பிரதிநிதியாக அடையாளம் காட்டி இந்த ஏற்பாடுகளை மேற்கொண்டதாகத் தெரிவித்த அங்கயற்கன்னி என்பவர் அங்கு கூடியிருந்த மக்களை சோதனைச் சாவடியிலிருந்து மாவிட்டபுரத்துக்குத் திருப்பி அனுப்பினார். இதன் பின்னர் அவர் மாத்திரம் படையினருடன் பேச்சுக்களில் ஈடுபட்டார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் ஒரு மணிநேரம் வரை மக்கள் காத்திருந்திருந்தனர். அதன்பின்னர் அங்கு வந்த அங்கயற்கன்னி என்பவர் படையினர் 200 பேரை மாத்திரமே உள்ளே அனுமதிப்பர் என்று மக்களிடம் கூறினார். அதற்கு அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். உள்ளே விடுவதென்றால் 2 ஆயிரம் பேரையும் விட வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் திரும்பிப் போகின்றோம் எனத் தெரிவித்தனர்.

அத்துடன் அங்கு திரண்டிருந்த மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும், படையினரையும் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தனர். அவர்களுக்கு எதிரகாக் கோஷம் எழுப்பினர். ஆலயங்களில் அன்னதானம் வழங்குவதற்குரிய ஒழுங்குகளுடன் வந்திருந்த மக்கள், தமது பொருள்கள் விணாகிவிட்டமையால் ஈ.பி.டி.பியினரையும் படையினரையும் வசைபாடினர்.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து மயிலிட்டி மக்கள் அங்கு சென்று வழிபாடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், இந்தப் பகுதி மக்கள் தமது சொந்த ஊரில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்டமே இது என்றும், அந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகளும், தேவையான முயற்சிகளும் தொடரும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தா தெரிவித்ததாக அவரது கட்சிப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

கடந்த காலத்தில் உயர்பாதுகாப்பு வலயத்துக்கு செல்வதற்காக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அவை அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. ஆனால் இப்போது இந்த விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் மேற்கண்ட விசேட நடவடிக்கையால் இந்தப் பகுதி மக்களின் மீள்குடியமர்வுக்கான சாத்திப்படுகளும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது என மயிலிட்டி மக்கள் தெரிவித்ததாக இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மக்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பகுதியில் திரண்டு நின்றபோது அங்கு வந்த புலனாய்வாளர்கள் மக்கள் கூட்டமாக நின்று கதைப்பதையும் ஊடகவியலாளர்களையும் படம் பிடித்தனர். (த-5)

## அமைச்சர் பஸில்..

ளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை, இராமேஸ்வரம் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் டில்லியில் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

அமைச்சர் பஸில் ராஜபக்சவை சந்தித்த பின் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக மீனவர் பிரதிநிதிகள் ,இந்திய மீனவர்கள் குழு பேச்சுக்காக விரைவில் இலங்கை வர இருப்பதாகத் தெரிவித்தனர்.

இலங்கையின் வடக்கு மாகாண மீனவர் பிரதிநிதிகளை இந்திய மீனவர் குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்துவர் என்றும் கூறினர்.

இலங்கைக் கடற்படையால் தாம் தாக்குதலுக்கு உள்ளாவது குறித்து எடுத்துக் கூறியதாகவும், தமிழக மீனவர்கள் மீதான கைது நடவடிக்கையை நிறுத்துமாறு, இலங்கை கடற்படை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்றும், பஸில் ராஜபக்சவிடம் கோரியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.(த)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
புதிய கற்கை நெறிகள்

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS
Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Young Learners for English (YLE) [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch - 1 06-07-2013
Batch - 2 08-07-2013
Batch - 3 13-07-2013
Batch - 4 15-07-2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்கு.
தரமான ஓடுகள் (டபிள் நந்தி மார்க், நூறானி மார்க், பெப்ஸி மார்க், ஸ்டார் மார்க்), போன்ற ஓடுகள் யாழ், வன்னி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்.





பிரணவன் என்ரபிறைசஸ்
இல :365, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக) 0773818799.

Sky Computer இல்
சிறுவர்களிற்கான கணினி
மலிவு விற்பனை
12900/=
மட்டுமே
Free:- Games, Head Phone, Speaker,4GB Pendrive.
ஒரு வருட உத்தரவாதம்
இல.89,கண்டி வீதி,யாழ்ப்பாணம்.
(கச்சேரிக்கு அருகாமையில்)
தொ.பே - 021 222 1417, 0750698608

உங்களது வீட்டினது குளியலறை சாதனங்களில் கல்சியம் படிந்து அதன் அழகைக் கெடுக்கின்றதா? நிரந்தர தீர்வுகளுக்கு
Uv Water Solution
277, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு- 0717273686

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.